# காலத்தின் குரல்கள்

பல்கலை வெளியீடு

செ...

அ. யேசுராசா,
குருநகர்
15-11-71

# காலத்தின் குரல்கள்

தொகுப்பாசிரியர் :
கலா. பரமேஸ்வரன்

VIJAYALUCKSHMI BOOK DEPOT
248, Galle Road,
WELLAWATTE
T'PHONE 58830.

பல்கலை வெளியீடு
பேராதனை : இலங்கை

- முதற் பதிப்பு : மார்ச். 2
- கதைப்பூங்கா : 3
- காலத்தின் குரல்கள்
- பல்கலை வெளியீடு
- ஆசீர்வாதம் அச்சகம்
- விலை : 1-25


✱ கதைப்பூங்கா
✱ விண்ணும் மண்ணும்
✱ காலத்தின் குரல்கள்


— விற்பனையாளர் —

எஸ். கிருஸ்ணசாமி

(நியூஸ் ஏஜண்ட்)

33, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# பதிப்புரை

★ 'பல்கலை வெளியீட்'டின் சாதனைகள் சிலவுள்ளன; மூன்று சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டிருக்கின்றோம்; பல்கலைக்கழக எழுத்தாளர்களை வெளியுலகிற்கு அறிமுகப் படுத்தியிருக்கின்றோம்; அவர் தம் ஆற்றலைத் திரட்டி, மதிப்பீடு செய்ய வைத்துள்ளோம். ஈழத்தில் மலர்ந்த ஆயிரம் மலர்களில், எங்களுடைய மலர்களும் சிலவுள.

★ பெருமிதமும், மகிழ்ச்சியும் கொள்ளக் கூடிய சாதனைகள்தாம்; மூவரால் தொடங்கப்பட்ட 'பல்கலை வெளியீடு' இன்று பதினறுக்கு மதிகானவர்களைக் கொண்ட கூட்டாக வுள்ளது. ஆரம்ப கர்த்தாக்கள் மூவர்--செம்பியன் செல்வன், செங்கை ஆழியான், க. நவசோதி--இவ்வருடத்துடன் பல்கலைக் கழக வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றுர்கள். அவர்களின் பின்பும் 'பல்கலை வெளியீடா'கப் பல நூல்கள் வெளிவரும் என்பதில் சந்தேகமில்லை.

★ 'காலத்தின் குரல்களை'த் தொகுக்கும் பொறுப்பை எழுத்தாள நண்பர், கலா பரமேஸ்வரன் ஏற்றுள்ளார்; யாழ்ப் பாணம் இளம் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராக விருந்தவர்.

★ 'காலத்தின் குரல்களை' ஒலிக்கச் செய்துள்ளவர்கள் ஒன்பதின்மர்; க. பரராஜசிங்கம்--ஒருகாலத் 'துருவன்'; 'குந்தவை'--ஈழம் பெருமைப் படக்கூடிய பெண் எழுத்தாளர்; எம். ஏ. எம்.

சுக்ரி--முஸ்லீம் மக்களின் இலட்சியம்; 'செம்பியன் செல்வன்'--புதிய பரம்பரையின் துருவ நட்சத்திரம் ; க. நவசோதி--குறிஞ்சிப் பூ ; செல்வ. பத்மநாதன்--புதிய பிரம்மா ; சபா. ஜெயராசா--இளங்கவிஞர்; கலா. பரமேஸ்வரன்-எழுத்துலகின் இளைஞர்; செங்கை ஆழியான்'--நான்.

★ இத் தொகுதிக்கு முன்னுரை வழங்கியுள்ளவர் எஸ். பொன்னுத்துரை அவர்கள் ; ஈழத்திலக்கியத்தின் எதிர்காலம்; நன்றிக்குரியவர்.

★ குறுகிய காலத்தில் நூலை வெளியிட பல விதங்களிலும் உதவிய நண்பர்கள்; குறிப்பாக அன்பிற்குரிய ஆசீர்வாத அச்சக ஊழியர்கள், நமதுநன்றிக்குரியவர்கள்.

★ இத்தொகுதிக்கு ஆதரவுக்கரம் நீட்டி வரவேற்க வேண்டியவர்கள், நீங்கள்.

வணக்கம்

அன்பு
செங்கை ஆழியான்
பதிப்பாசிரியர்.

மார்க்கஸ் பர்ணாந்து விடுதி,
பல்கலைக் கழகம்
பேராதனை.
26-2-64

# முன்னுரை

காலமும் அதன் குரல்களும். கிழ அனுங்குதற் குரல்களின் சாக்காட்டில், பிஞ்சுக் குரல்களின் குதலை. ஒலிப் பதிவின்றி—அல்லது எதிரொலியின்றி—அடங்கிவிடலாம். ஆனாலும், இப்பொழுது கேட்கின்றது ; புதுக்குரல்கள் தாம், சிக்கலில் விளையுங் கரு ; பிரக்ஞையும் பயிற்சியும் வகுக்கும் இசைப்புந் தொடுப்பும் ; மனப்பாங்கிற்கேற்ற பிரகரணம் ; —இவற்றின் முழுமையே சிறுகதை. சிக்கலான விளக்கங்கள் ; விளக்கமான சிக்கல்கள். தொடுக்கும் பிரயத்தனத்தின் சுமை... எனினும், காலத்தின் குரல்களும் அவை தாம்.

குரல்களும் அவற்றைப் பற்றிய மதிப்பீடுஞ் சிக்கலான சிக்கல். இலக்கிய உலகமோ ? விபசாரக் குதமோ ?...... சிருஷ்டித் தத்துவமும், மரபின் வாழையடி வாழை வாரிசாம் தனித்துவமும் உயிர் முடிச்சிலே ஊசலாட ; பெற்றதற்கும் பெறப்போவதற்கும் பிரீதி செய்யும் வாக்கில் எதையெதையோ விலை கூறும் இலக்கியம். விற்றலும் வாங்கலும் லௌகிகமானவை. லௌகிக விவகாரங்களே முற்போக்கானவையாம். அத்தகைய இலக்கியங்கள் சர்வகலாசாலையிலே வளர்ந்தாலென்ன ? வேறு கலாசாலையிலே வளர்ந்தாலென்ன ? எல்லாம் அணி ; அணியின் இராக்கதக் கூச்சலே இலக்கியத்தினை மதிப்பிடுகின்றது சந்தைக் கூச்சல் ; சந்தை இலக்கியம்... ஆனாலும் பழங்குரல்கள். புதுக்குரல்களின் ஒலியை விழுங்கும் அசுரம். அழிந்ததாகத் தோன்றி, ஆனாலும் மீண்டும் புதுக்கோலந் தரித்துள்ள ஆண்டானுக்கும் மன இச்சைகள். ஆள்வோருக்கு இதமாகப் பக்கக் கூச்சலிட்டு, முன்னேறலாம் முதுகு சொறிந்து இலக்கிய முன்னேற்றம் ! பிரமேயங்களும், அவற்றிலிருந்து வடிந்தொழுகும் முடிபுகளும்... சொறி இலக்கியங்களும், சொறி மதிப்பீடுகளும். அவை காலத்தின் குரல்களன்று ; காலத்தின் கோலங்கள் ! ஆற்றலிலக்கியம் ஈழத்திலே அப்படி வளர்கின்றது ; வளர்க்கப்படுகின்றது. கோலம் கோலந்தான் ; கொண்டதே கோலம் ! அடிமனதின் கர்ப்பக்குழியிலே மூச்சுவிடும் அடிமை மனப்பான்மை. அறிவின் அளவுகோலோ ? வேலைதேட

'லைசென்ஸ்'ஸோ ? ஒரு பட்டதாரிச் சான்றிதழ். [சான்றிதழுக்குமேல் சான்றிதழ்] கல்வியா — கலையா — இலக்கியமா... எல்லாம் வணிபம். வணிபமும் ஆதாயமும். இதனால் ஏற்படுத்தப்பட்டுவிட்ட லெளகீக இலக்கிய மதிப்பீடுகள். கல்லோயா 'மோலாஸ'லில் கலை வளருமாம் ; ஞானம் பிறக்கும். அறுவடை நொண்டியாக இருப்பினும், அஃதே உச்சவரம்பென்னுந் திணிப்பு. வழக்காளியும் நீதிபதியும் ஒருவரே ! கோழியும் அவர்களாய், புழுங்கலரிசியும் அவர்களாய் அமைந்துவிட்ட பேறு. காலத்தின் கோலமன்று காலத்தின்யோகம் ! காலத்தின் குரல்கள் என்னும் இத்தொகுதியை வாசிக்கும்பொழுது, மன வெள்ளாடு இப்படி நுனிப்புல் மேச்சலிலே சுகிக்கின்றது. சுகமா ? ஏனில்லை ; அழுவதிலுஞ் சுகமிருக்கின்றது.

'காலத்தின் குரல்க'ளில் ஒலிக்குஞ் சில குரல்கள் 'கதைப் பூங்கா'விலும் 'விண்ணும் மண்'ணிலும் ஒலித்ததைக் கேட்டோம். அக்குரல்களுடன் புதுக்குரல்களும் ஒலிக்கின்றன. இளவல்களின் நம்பிக்கை ; நமது நம்பிக்கை. தெம்பு பிறக்கின்றது. 'சிறுகதை இலக்கியமல்ல' என்ற செற்கிடங்குக் குரல், வலுவிழந்தாலுஞ் செவிப்பறைகளிலே விழுகின்றது. 'இழிசனர் வழக்கே கதை வழக்கு' என்னும் பிறிதொரு—சற்றுப் பழைய—குரல்... இவற்றின் மத்தியில், பல்கலைக்கழக இளைஞரின் மூன்றாவது சிறுகதைத் தொகுதியான 'காலத்தின் குரல்கள் !' கதைகளும் கலைத்துவமும். இத்தனை அரசிமா இழைகளை, இத்தனை முடிச்சுகளுட் புகுத்தி அவிக்கும் இடியப்பத்தில் குஷினிக் கலை தொடக்கம், முடிதிருத்துந் தொழிலிலே கலையாகியது வரை, எல்லாம் கலைகளாம், எனினும், கதைக்கலை உயர்ந்து நிற்கின்றது.

கதைகளின் ஆற்றுப்படை. முறை முறை. ஒரு வகை மரபு. விளாம்பழத்தின் ஓடு கடினமானது ; திரேசாவின் உள்ளம் கனிவானது. முதற்கதை முதற்கதைதான். மனித்துவத்தில் கலையழகை மீறியும் கந்தையன் மனிதாபிமான விசாரணையில் ஈடுபடுகின்றான். உணர்ச்சியே உருவான் ரோஸலினுக்குக் கழுவாய் கிடைக்கின்றதா ? வேலுவின் வயதிலேயே வர்க்கப் பிளவு பாரம்பரியமாகத் தோன்று

வதைத் தெய்வானை உணருகின்ருள். அன்பின் அணைப்பில் பார்வதி தாயன்பையும், அணைப்பில் சுப்பையர் தந்தையன்பையும் உணர்ச்சிப்பலிதமாகவே கொட்டுகின்ருர்கள். அசைவில் குழந்தையின் ஏமாற்றப் பின்னணியில் தாயன்பு அலருகின்றது; வாழ்க 'கண்டக்டர்'! சாநி ஒரு சாதியான கதை; கந்தர் எங்கேயாவது வாழ்ந்தாலும், முருகேசு கற்பனைப் பெயரே. உதிரி உதிரியாக நிற்கின்றது: தங்கத்தின் பால் சிந்தல் ஒரு சோகக்குரல். கடைசிக் கதையாகப் பிரசுரிக்கப் பட்டிருப்பினும், தரத்தில் சில கதைகளைக் குட்டி முந்துகின்றது.

இறுதியில், கூட்டினுலுந் தானம்; கழித்தாலுந் தானம். தானத்திற்கான மதிப்பு. ஒன்பது குரல்கள்; அதிலும் ஒருமை. துயர் கண்டு துடிக்கும் உள்ளம்; சமத்துவக் கொள்கை; கதை சொல்லுங் கலையை வாலாயப் படுத்தலாம் என்னும் நம்பிக்கை;—ஒன்பதிலும் ஒன்றுதான். கனவுலகக் காதற் கதைகளும், வாலிபப் பருவத்து ஆசாபங்கமுற்ற வேட்கைகளும் இடம் பெருமை, தொகுதியின் பிரக்ஞைப் பிரயத்தனத்தைக் காட்டுகின்றது. 'பல்கலை'யின் 'காலத்தின் குரல்கள்', ஈழத்துச் சிறுகதை இலக்கியத்தின் வருங்கால வளத்திற்குக் குரல் எழுப்புகின்றன.

எஸ். பொன்னுத்துரை

வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம்,
செங்கலடி. 26-2-64.

### க. பரராஜசிங்கம்

# விளாம்பழம்

சின்னக்கடையின் காட்டுக் கூச்சலுக்குள் "அந்தோனியாரே" என்ற திரேசம்மாவின் சப்தம் தண்ணீருக்குள் விழுந்த கல்லாக அமிழ்ந்து போய்விட, சும்மாட்டின் மேல் தலைக்கு இருபுறமும் தொந்தி விழுத்தி இருந்த கறிக்கடகத்தை இறக்கிக் கீழே வைக்கிறாள். சும்மாட்டை இறக்கிக் கீழே வைத்து விட்டு, வேர்வையால் மண்டையில் ஒட்டிப் போயிருந்த தலைமயிரைக் கைகள் கிளறிவிட, கண்கள் சுற்றுமுற்றும் சுழருகின்றன. ஞாயிற்றுக்கிழமை வியாபாரத்தில் உள்ள மிச்ச சொச்ச மெல்லாவற்றையும் எப்படியும் கட்டியடித்து விடலாம் என்ற நம்பிக்கையோடு வேகமாகச் சாக்குகளில் வாழைப்பழச் சீப்புகளை அடுக்கிக் கொண்டிருக்கும் பெண்களுக்குள் தங்கம்மாவைக் காணாத அவள் கண்கள் ஏமாற்றத்தால் சுழன்றாலும், மனம் அவளுடைய வியாபாரத்துக்கு வேண்டியவற்றைச் செய்வதற்குத் தூபம் போடுகின்றது. கடகத்துக்கு மேல் தும்புக் கயிற்றால் கட்டி வைத்திருந்த சின்னவாளியை அவிழ்த்து எடுத்துச்கொண்டு போய், றோட்டோரம் இருக்

கும் பைப்பில் தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்து பக்கத்தில் வைத்து விட்டு, கடகத்துக்குள் மடங்கியிருந்த ஓலைத் தடுக்கை எடுத்துப் பக்கத்தில் வைத்து உள்ளே உள்ள மீன்களைப் பதினிமாக எடுத்தெடுத்துக் குமித்து வைக்கின்ருள்.

> ' இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமையாம் நாத்து ஆமை இறைச்சி கொண்டந்திருந்தால் பறக்க வித்திருக்கலாம் அண்டைக்கு அவன் அந்தோனியன் குடல் அழுகின ஆமையைத் தந்து விட்டு எனக்கு நாப்பது உறுவாக்குக்கிட்ட அள்ளிவைட்டு. இஞ்சை இவளவையெல்லாம் ஆமைதான் கொண்'டந்திருக்கிருளவை.. ஏன் இதுகளும் பெரிய மீனுகள் தான்'' ஒரு மாதிரி வித்துப் போடலாம்.'

வாளித் தண்ணீருக்குள் கையை நனைத்து, மீன்களைத் கடவி விடும் மென்மையில் அந்தோனியனில் எழுந்த ஆத்திரமும் கழுவுப் பட்டு மனதில் நம்பிக்கை படர்கின்றது. கடுதாசிப் பைகளும், உமல்களும், பிரம்புக் கூடைகளும் கொண்டு வருபவர்கள் மேல் அவளுக்குக் கண்ணுயிருந்தாலும், தங்கம்மா வரமாட்டாளோ என்ற ஏக்கத்தோடு கண்கள் அடிக்கடி இறைச்சிக்கடைத் தெருவைப் பார்த்தபடியே இருந்தன.

> '' எணை, இதைச் சொல்லணை!''

மூலையில் குமித்து வைத்திருந்த விளைக்குட்டிகளில் விரலைச் சுட்டி, அந்த மனிதன் கேட்க அவள் நிமிர்ந்து பார்க்கிருள்.

> '' மூண்டு உறுவா குடுத்திட்டு எடு.''
>
> '' மூண்டு ரூவாயோ? என்னெணை கடகத்தோடை விலை சொல்லுறியோ?''
>
> '' இஞ்சை இது உங்கினை ஆரிய குளத்துக்கை பிடிக்கிற யப்பான் மீனில்லை; அவ்வளவும் செவ்விளைக் குட்டியள். இந்தக் கடகத்துக்கை கிடக்கிற இவ்வளவும்

எண்பது உறுவா. நேற்றும் முந்தநாளும் அடிச்ச காத்துக்கை அவங்கள் போய் இதையெண்டாலும் புடிச்சுக் கொண்டு வந்தாங்களே !''

'' சரி. சரி... குடுக்கிற விலையைச் சொல்லு''

'' இஞ்சை காலத்தாலை முன்னம் முன்னம் கைவியளமா அந்தோனியாராணை நான் கூட்டிச் சொல்லேல்லை. எனக்கு நட்டம் போனாலும் பறுவாயில்லை. இருவத்தைஞ்சு சதத்தைப் புடிச்சுக் கொண்டு தா !''

'' இரண்டு ரூவாத் தருவன். விருப்பமெண்டால்ச் சொல்லு, என்ன... போடுறியே?''

'' எப்பவும் எனக்குக் கைவியள யாவாரம் கையிலை கடிக்காமல் விடாது. சரி... சரி... பையைப் பிடி.''

இரண்டு ரூபாத் தாளை வாங்கி இரண்டு கண்களிலும் ஒற்றி விட்டு ஓலைத் தட்டுக்குக் கீழே செருகி வைக்கின்றாள்

சுருட்டுக் குடித்துக் குடித்துத் தடித்துப்போன உதடுகள் காய்ந்து ஒட்டாமல், நாக்கைச் சுழற்றி நக்கிக் கொண்டே, விலைப்பட்ட மீன்களின் இடத்தை நிரப்ப புதிய மீன்களால் கோபுரம் கட்டுகின்றாள்.

அவித்த மரவள்ளிக் கிழங்கு விற்கும் கிழவியும் அவசர அவசரமாகக் கடைபரப்பிக் கொண்டிருக்கிறாள் !

தங்கம்மாவின் வரவை அடிக்கடி ஆவலோடு பார்க்கும் திரேசாவின் கண்கள் திரும்பவும் திரும்பவும் மீன் கடகத்துக்குள்ளேயே விழுந்து விடுகின்றன,

' சீ... அவள் இண்டைக்கு வரமாட்டளோ? ஐயோ அந்தோனியாரே அந்தச் சின்னப் பொடிச்சியைப் பாக்காமல் என்னண்டு இருக்கிறது... வீணாத் தங்கம்மாவையும் நேற்றுப் பேசிப்போட்டன்... ?

கடற்கரையில் மல்லாக்காகக் கிடத்திய ஆமை அடிக்கடி மூச்சு விடுவதைப்போல், அவளுடைய மனதிலும் தங்கம்மாவையும், அவளது குழந்தையையும் பற்றிய நினைவுகள் மூசுகின்றன. முடிச்சுப் போடப்பட்டிருந்த 'றவுக்கை' விம்மித் தணிகின்றது.

மரவள்ளிக்கிழங்கு விற்கும் கிழவி வியாபாரத்தை ஆரம்பித்து விட்டாள். அகன்ற பூவரசம் இலையில் கிழங்கும், மிளகாய்ச் சம்பலும் அர்ச்சகர்களிடமிருந்து பக்தர்கள் கைக்குச் செல்லும் அர்ச்சனைத்தட்டமாகக் கை மாறிக்கொண்டிருக்கின்றன,

திரேசாவுக்கு வழக்கம் போல் இரண்டு துண்டு மரவள்ளிக்கிழங்கு 'கடிக்க' வேண்டுமென்ற உணர்வு, பசி வந்து விட்டதாகப் பாவனைகாட்ட. கடகத்தின் மூலைக்குள் ஒதுக்கி வைத்திருந்த சின்ன மீன்கள் நாலைந்தைத் தூக்கி வெளியில் போடுகிறாள். வாழைப்பழ வியாபாரிகள் பக்கம் எழுந்து சென்று எடுத்து வந்த வாழைச் சருகைச் சுருட்டி வைத்து அதன் மேல் மீன்களை அடுக்கி, நெருப்பைத் தட்டிச் சருகில் வைத்துவிட்டு. மீன்கள் சுடுபடும் வரை தங்கம்மாவும் பிள்ளையும் வருகின்றனரோ என்று பார்வையைத் தெருவில் படர்த்திக் காவலிருக்கிறாள்.

'என்ன... இண்டைக்கு வரமாட்டாளோ? எல்லாப் பெண்டுகளும் வந்திட்டாளவைம்......?

சருகிலிருந்து கிளம்பிய புகை, பக்கத்தில் இருந்த பாறியின் மூக்கில் புகுந்து மனதில் எரிச்சலை எழுப்புகின்றது.

"எடியே! உனக்கு மீன் சுடுறதுக்கு இதிலை தானே இடம் அம்புட்டது. அங்கினை அந்தக் கானுச்கை போட்டுச் சுடன். எங்கினையோ நரகம் புடிச்ச வேதக்காறி."

"நீ பெரிய சைவக் காறியோடி...? செம்பாட்டு வேசா... நான் எங்கை போட்டும் சுடுவன் நீ ஆரெடி அதெல்லாம் கேக்கிறது? கனக்கக் கதைச்சியெண்டால்... மிதி மிதிச்சுப் போடுவன். லோப் பேசுறு... லோ...''

அவ்வளவோடு பாறி அடங்கிப் போய் விடுகிருள். திரேசா ஏதோ புறுபுறுத்துக் கொண்டே தன்வேலையில் கவனமாக இருக்க, சின்னக்கடைக்குள் நடக்கும் ஆயிரத் தில் ஒரு சண்டையாக இதையும் ஒரு கணம் பார்த்து விட்டு மற்றவர்களும் தங்கள் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற னர். மாதாகோவிலிலிருந்து ஒலித்த மணியோசைக்கு ''அந்தோனியாரே'' என்று குரல் கொடுத்த திரேசா பழைய திரேசா வாகி விடுகின்ருள். நெருப்புத்தணிந்த சாம்பலுக்குள் சுடுபட்டுக் கிடந்த மீன்களைத் தடிக்குச்சி யால் தட்டி எடுத்து, சருகிஞல் செதிள்களைத் தட்டிப் பதப்படுத்தி விட்டு, கிழங்கு விற்கும் கிழவி பக்கம் திரும் புகின்ருள். அவளின் பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளும் வாடிக்கை காரக்கிழவி, பூவரசம் இலைகள் இரண்டைக் காம்பிஞல் பொருத்திய ஏதனத்தில், சுருத் துண்டு போலப் பதமான இரண்டு கிழங்குகளை வைத்துக் கொடுக்கின்ருள். வாழைச்சருகிலே கையைத் துடைத்து விட்டு, சுட்ட மீனேடு கிழங்கை அசை போடுகின்ருள்.

மனம்?

தங்கம்மாவின் குழந்தை திரேசாவின் மடியில் உட் கார்ந்திருக்க, மரவள்ளிக்கிழங்கை பிய்த்துப் பிய்த்து, குஞ் சுக்கு இரையூட்டும் புருவாக, அதன் பஞ்சு வாய்க்குள் திணித்துக் கொண்டிருக்கிருள். குழந்தை ஒரு காலை ஆட் டிக் கொண்டு ஆனந்தத்தோடு மிண்டி விழுங்கிக் கொண் டிருக்கிறது.

வேகமாக நடந்து வந்த தங்கம்மா, அவளுடைய மடி யிலிருந்து குழந்தையைப் பிடுங்கி, வாய்க்குள் அதக்கி வைத்திருந்த கிழங்குத் துவையலை விரலை விட்டுக் கிண்டி வெளியே எடுத்தெறிகிருள்.

''மூதேவி, கண்டஇடமெல்லாம் போகாதை யெண்டு எத்தினைதரம் சொல்லுறது. வீட்டையும் நிக்காமல் குழறிறது......... இங்கை வந்து கண்ட கண்ட இடமெல் லாம் வேண்டித் திண்டுகொண்டு திரியு ருய்.........?''

திரேசாவுக்கு மனதிலே ஆத்திரம் சந்தனம் அரைக்கின்றது! குழந்தை விழுங்கிக் கொண்டிருந்த கிழங்கையும் தங்கம்மா எடுத்தெறிந்து விட்டது அவளுக்கு மேலும் ஆத்திரத்தைக் கிளப்ப —

'ஏனெடி ஆத்தை குழந்தைப் பிள்ளையோடை பாயுருய்?

என்ரை கையாலே இவ்வளவு நாளும் நான் அதுக்குத் தீத்திவிடேல்லையே...... வாய்க்கை கிடந்ததையும் எடுத்தெறிஞ்சு போட்டாய்......நீ என்ன பிறப்பெடி'?'

''அங்கினை யிஞ்சினை ஓடித்திரியிற பிள்ளையைப் புடிச்சுத் தீத்தி விடெண்டு உன்னட்டை நான் சொன்னனுனே? என்னத்துக்குச் சம்பளமில்லா உத்தியோகம் பாக்கிருய்? உந்த நாத்தலெல்லாத்தையும் பிள்ளைக்குத் தீத்திப்போட்டு நாளைக்கு அதுக்கொரு வருத்தம் வந்தால் நீயே பார்க்கப் போகிருய்?''

வார்த்தைகள் முத்துகின்றன!

''என்னடி பெரிய லோப் பேசுருய்? என்னவோ ஒரு ஆசைக்குத் தீத்திவிட்டன்... விருப்பமில்லாட்டி உன்ர கண்டறியாப் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு போவன். நீதான் ஏதோ பெரிய புள்ளையைப் பெத்திட்டாய்......''

''ஓமடி அது பெரிய பிள்ளைதான்ரி எனக்கு. உன்னைப்போலை பெத்துப் பெத்துச் சாகக் குடுத்துப்போட்டு எருமை மாதிரித் திரியிறனே நானும் .....''

''இஞ்சார், அந்தக் கதையளொண்டும் உனக்குத் தேவையில்லை. நீ புள்ளைப்பெத்த லெச்சணம் எனக்குத் தெரியாதோ? என்னட்டை ஏன் கேக்கிருய் அறம்புறமாய்... போ...போ...''

''என்னெடி சொல்லப்போருய்...சொல்லடி பாப்பம். உன்னேமாதிரி முலேப்பால் வித்துச் சீவிக்கிறஞுங்கள் எண்டு நினேச்சியோடி? இஞ்சை மற்றவையளோடை தனகிறமாதிரி என்னேடையும் தனகாதை... விளங்கிச்சுதோ ?''

''என்னடி செய்து போடுவா வேசா......''

உரக்கக் கூறிக்கொண்டே எழுந்த திரேசாவை மற்றவர்கள் பிடித்துக் கொள்ள இருவரும் வாயாலேயே சண்டையிட்டுக் கொள்கின்றனர். குழந்தை தங்கம்மாவின் இடுப்பில் அழுதுகொண்டிருக்கிறது.

சாப்பிட்டு முடித்து பூவரசம் இலேயைக் கைக்குள் வைத்துக் கசக்கி எறிந்துவிடும் வேகத்தில் நினேவும் உதறுப்பட்டுவிட, வியாபாரத்தில் கவனமாகிருள். மீன் வியாபாரிகளின் கூச்சல் காதைத் துளேக்கிறது. ஆமை இறைச்சி வாங்கக் கட்டாதவர்கள் மீன் வாங்க வருகின்ருர்கள்.

'' இந்த மூலேயான் எவ்வௌவெணே ? ''

'' நாலு உறுவா''

'' ஒண்டரை ரூவாத் தாறதோ ? நாலு ரூவாய் குடுத்து உதை வாங்கிற நேரம் அருமந்தாப்போலே நல்ல இறைச்சி வாங்கிப் போடலாம்.''

'' பின்னேப் போய் வாங்கன். நீதான் மீன் வாங்கித் தின்னிற ஆள். தூ......''

கட்டிய கணவனேயே அடக்கியாளும் அவளுக்கு இவர்களெல்லாம் வால்ப் பேத்தைகள் மாதிரி. சின்னக் கடை தொடங்கின நாளிலிருந்து அவளும் வியாபாரம் செய்கிருள்தான்; அதுவரையில் அவள் யாருக்குமே தலேவணங்கியதாகச் சரித்திரம் இல்லே. அவள் நாளாந்தம் போடுகின்ற சண்டைகளெல்லாம், மீன்காரப் பிரான்சிஸுக்கு திருக்கை வெட்டும் அரிவாளால் அடித்து மண்டையில் காயம் ஏற்படுத்திய சம்பவத்துக்கு உறைபோடவும் வராது என்பது அங்குள்ளவர்களின் அபிப்பிராயம்; ஆனுல் அதை யாரும் துணிந்து வெளியே சொல்வது கிடையாது.

மிதப்பில் கண்ணுயிருக்கும் மீன்பிடிகாரனைப்போல், அவள் வியாபாரத்திலே கண்ணுயிருந்தாலும். மனம் தங்கம்மாவையும் குழந்தையையும் சுற்றி வலைபோட்டுக் கொண்டிருக்கிறது.

"என்ன வரமாட்டாளோ இண்டைக்கு? நேரம் மதியமாகப் போகுது. இஞ்சை இவளவையெல்லாம் வித்துத் தள்ளுறுளவை......சீ...அந்தப் புள்ளைதான் என்ன பாடோ தெரியாது......?

அவளுடைய வாடிக்கைக் காரர்கள் அதிகமாக விலை பேசாமல் கேட்பதைக் கொடுத்துவிட்டு மீன்களை எடுத்துக் கொள்கிறார்கள். சில்லறை குமிய ஓலைத்தட்டுப் பொருமும் வேகத்தில், மீன் கடகத்தின் கனம் குறைந்து கொண்டு போகின்றது.

"இதைச் சொல்லு!"

"மூண்டு உறுவா...?"

"ஒரு ரூவா தாறதோ?"

"என்ன மனிசியிற்றைச் சட்டியைக் கழுவச் சொல்லிப்போட்டுவந்தனீரே மீன் வாங்க. காச்சட்டையும் மாட்டிக் கொண்டு வந்திட்டார். சும்மா போம்......"

"எணை ஓம் இல்லையென்னுறதுக்கு உனக்கேன் அந்த இந்தக் கதையள். கரையாடிச்சிக்கு வாய்மிஞ்சிப் போச்சு...உங்களையெல்லாம் பாத்துக் கொள்ளுறன்.

"உங்களைப் போலை அறுவது வெள்ளாளரைக் கண்டிருப்பன். என்னை ஒருதராலையும் அசைக்கேலாது"

"இந்தா வாய்காட்டாதை...உங்களை நடத்திற மாதிரி நடத்த வேணும்"

"ஓம்...ஓம்... போட்டு வாரும்"

மீன்வாங்க வந்தவர் ஏதோ செய்யப்போகிறவர் மாதிரி வேகமாக நடந்து, தெருவைக் கடந்து, தலையைக் குனிந்து

கொண்டு ஆறுதலாகப் போகின்றார். அவள் அவரைப்பற்றிய கணிப்பே இல்லாமல் மற்றவர்களுக்கு விலை சொல்வதில் ஈடுபடுகிறாள்.

வியாபாரம் கொஞ்சம் ஒய்கிறது !

சுடகப் பெட்டிக்குள் இருந்து எடுத்த குறைச் சுருட்டைப் பற்றவைத்துப் புகைத்துக் கொண்டே தூரத்தில் பார்வையால் தூண்டில் எறிகிறாள்.

> ' அதிலை வாறது தங்கம்மாவோ ? தனிய வாறாள். பிள்ளையைக் காணேல்லை...'

தங்கம்மா கடகத்தைச் சுமந்துகொண்டு நடந்து வரும் தோற்றம் அவள் கண்களுக்குள் நிறைகிறது. வலது கையை விசுக்கி விசுக்கி நடக்கும் அவளின் நடை திரேசாவுக்கு நல்ல பழக்கம். அதைவிடப் பக்கமான அந்தக் குழந்தையின் 'தத்தக்க' நடையைப் பக்கத்தில் காணாத அவளின் இதயத்தில் யாரோ முள் மிதியடியோடு நடக்கிறார்கள்.

> ' எடெ இந்த அறுவாள் இண்டைக்குப்பிள்ளையை வீட்டிலை விட்டிட்டு வந்திட்டாளோ? அங்கை ஆர் இருக்கினம் அதைப் பாக்க...தாய்க்கிழவிதான் இருக்கெண்டு முந்தியொருநாள் சொன்னவள்'

தங்கம்மா கடகத்தை இறக்கி விட்டு, சாக்கை விரித்து வாழைப் பழச் சீப்புகளை எடுத்து அடுக்கிக் கொண்டிருக்கிறாள். மற்றப் பெண்கள் எல்லாரும் முக்கால் வாசிக்கு மேல் வித்து முடித்து விட்டதைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டே அடுக்குகிறாள். கடகத்தைப் பக்கத்தில் கவிழ்த்து விட்டு, பழங்களைக் கொத்தவரும் காகங்களைக் கலைக்க பக்கத்தில் கிடந்த தடியையும் எடுத்துக் கொண்டு 'சப்பாணி' கட்டி இருக்கிறாள்.

திரேசா விக்கித்துப் போய் இருக்கிறாள் !

> ' இவள் ஏன் பிள்ளையைக் கூட்டியரேல்லை ; அதுக் கேதன் சுகங்கிகம் இல்லையோ... அந்தோனியாரே

தங்கம்மாவுக்கும் வியாபாரம் கொஞ்சம் நடக்கிறது திரேசா தண்ணீரால் மீன்களை நனைத்து விட்ட படியே

அவளின் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். தன்னுடைய வியாபாரத்தில் அக்கறை இல்லாமல் 'அருவிலை' கேட்பவர்களுக்குக் கூடத் தன்வழக்கமான ஏச்சுக்கள் இல்லாமல் மீன்களைக் கொடுத்து முடித்துக் கொண்டிருக் கிறாள்.

மரவள்ளிக் கிழங்கு வியாபாரத்தை முடித்துக் கொண்ட கிழவியைப் பக்கத்தில் கூப்பிட்டு தங்கம்மாவின் குழந் தையைப்பற்றி விசாரிக்கும்படி சொல்லியனுப்பி விட்டு அவள் அடி பெயர்த்து நடப்பதையே பார்த்துக் கொண் டிருக்கிறாள்.

குழந்தையைப் பற்றி விசாரிக்கும் கிழவியிடம் தங்கம்மா தன் ஆத்திரத்தையெல்லாம் கொட்டிப் பொரிகிறாள்.

"அந்த அறுவாளாளை தான் பிள்ளையை இண்டைக்குக் மொண்டரேயில்லை…ஆ… வீணு அந்தக் குஞ்சைப்போட்டு அடிச்சும் போட்டன்"

"இப்ப ஆரோடை விட்டுட்டு வந்தனி புள்ளையை ?"—கிழவியும் துடிப்போடு விசாரிக்கிறாள்.

"பேத்தியாரோடை நிக்கச் சொல்லிப் போட்டுவிட அது புள்ளை குளறு குள றெண்டு குளறினதிலை, கிளுவந்தடியாலை போட்டு அறம்புறமாய் அடிச்சுப் போட் டன். கொண்டந்தா இந்தப் புள்ளை யளைத் தின்னி அதுக்குக்கண்டது நிண்ட தெல்லாத்தையும் தீத்தி விடுறாள்."

அவள் சொல்வது திரேசாவின் ஆத்திரத்தை கிளறு கின்றது.

"என்னை ஏனடி சும்மா திட்டுறு…வேசா… நீதான் பெரிய பிள்ளையைக் கண்டிட் டாய்……நீ புள்ளை பெத்த லெச்சணம் எனக்குத் தெரியாதோ ?

"ஓமடி உன்ரை லெச்சணம் பெரிய லெச் சணம்தான். உன்னைப்போல கண்டவை நிண்ட வைக்கும் முலைப்பால் வித்து நாங் கள் சீவிக்கேல்லை"

கிழவி விலக்குப் பிடித்து விடுகிருள்.

" இதுக்கு ஏனடி ஆத்தை வீணுய்ச் சண்டை புடிக்கிறியள் ? மெய்யே தங்கம்மா...... இப்ப புள்ளை என்ன செய்யுது ?"

" அதுதானணை நான் கிளுவந்தடியாலை அடிக்க அதுக்குக் கண்ணிலை பட்டு ஒரு கண் சிவத்து வீங்கிப் போச்சு. பரியாரிட்டைக் கொண்டுபோய்க் காட்டிக் குளிசை எடுத்துக் கொண்டுபோய் ஆச்சீற்றைக் குடுத்திட்டு வந்திருக்கிறன். எல்லாம் இந்த அறுவாளாலைதானே...... இல்லாட்டி அருமந்தாப்போலை பிள்ளையை இஞ்சை கொண்டுருவனே ! "

மாலையில் ஓட்டமும் நடையுமாக வெறும் கடகத்தைச் சுமந்து கொண்டு வீட்டுக்கு வந்த தங்கம்மா படலையைத் திறந்ததும் வீட்டுத்திண்ணையில் இருந்து சிரட்டைக்குள் முலைப்பாலைக் கறந்து கொண்டிருக்கும் திரேசாவைக் கண்டு திடுக்கிட்டுப் போய் நிற்கிருள். திரேசாவின் கையில் இருந்த பாற் சிரட்டையை வாங்கி, பிலாவிலையால்க் கிள்ளிக்கிள்ளி மடியில் கிடத்தி வைத்திருக்கும் குழந்தையின் இடது கண்ணிற்குள் விடும் கிழவியை, தாய்மையின் கனிவோடு திரேசா பார்த்துக் கொண்டிருக்கிருள்.

தங்கம்மா திண்ணைக்கு வருகிருள்.

திரேசா திடுக்கிட்டு எழுந்து விடுகிருள் !

" பரியாரியார் சொன்னபடி புள்ளையின்ரை கண்ணுக்கு முலைப்பால்விட நானும் அயலுக்கை கேக்காத இடமில்லை புள்ளைக்குக் கண்ணும் வீங்கிக் கொண்டிருந்தது. நல்லூரர்க்கந்தன் அனுப்பினமாதிரி இந்த மனிசிதான் புள்ளையைப்பாக்க வந்த இடத்தில்...... "

கிழவி சொல்லிக் கொண்டே போக, தங்கம்மா கரைந்து போய் நன்றியோடு திரேசாவைப் பார்க்கிருள்.

திரேசா கடைசித் தடவையாக குழந்தையைக் கண் குளிரப் பார்த்து விட்டு கடகத்தை எடுத்துக் கொண்டு நடக்கிருள்.

" நான் போட்டு வாறன், தங்கம்மா "

---

"குந்தவை"

# மனிதத்துவம்

கவிந்து வந்த அந்தகாரத்தினுல் இருட்ட டிப்புச் செய்யப்பட்ட கடல் கன்னங்கரே லாய் அச்சுறுத்துகின்றது.

மடிந்து விழும் அலைகளின் இரைச்சல் ஒலி பூதாகார மாகப் பெருகி, செவிப்பறைகளில் வந்து மோதுகின்றது.

கூட நின்ற பெண்கள் எல்லாரும் தம் கணவன்மார் கொண்டு வந்தவற்றை விற்கப்போய் விட்டனர். தங்கம்மா மட்டும் தன்னம் தனியளாய் கரையில் காத்து நிற்கின்ருள்.

கால்களுக்குக் கீழ் மணலை அரிக்கும்கடலலைகள்; கால் களையே பறித்து இழுத்து கடலிற்குள் கவிழச் செய்வது போன்ற தடுமாற்றம்.

'குப்' என வந்து முகத்தில் அடிக்கும் கடல் காற்றின் உக்கிரத்தில் ஏற்படும் மூச்சுத் திணறல்.

கரையில் இழுத்துப்போட்ட வள்ளங்கள்; தூரத்தில் மணல் மேட்டில் மினுங்கிடும் விளக்கின் சிதறல்கள் இரண் டிலும் அந்த வட்டாரத்தினரின் வழமையான இயக்கம் தெரிகின்றது.

கடலுக்குப் போனவர்கள் மீண்டு விட்டனர். ஆனால் இன்னும் அவள் கணவன் கந்தையன் மட்டும்......

திகில் அவளுள் மகத்தானதாய் பெருகி, விசுவரூபம் எடுக்கின்றது. 'ஏன், ஏன்' என்ற கேள்வி, அவள் நெஞ்சில் வந்து வந்து மோதுகின்றதேயன்றி, அகற்காக பதிலே அவளால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

வதைக்கப்படும் நெஞ்சகத்தின் வேக்காட்டிலே--கரையில் வந்து சிக்கிய அலை நுரைபோல் அவள் பரிதவிக்கின்றாள்.

'இப்படியே நின்றால்? மற்றவர்களிடம் சொல்லி அவர்களைத் தேடிவர அனுப்பியாவது...' மனத்தைத் துண்டமாக்கும் இந்த எண்ணம் எழுந்த பொழுது......

''தார் அது இருட்டுக் குள்ளை?'' அருகே ஒரு குரல். நிலைத்துவிட்ட அவள் திரும்பிப் பார்க்கின்றாள். அருகே கனகலிங்கம். அவன், கந்தையனுக்கு வேண்டாதவன்தான். 'பெரிய இடத்தின் ஆள்' என கந்தையன் அடிக்கடி சொல்வானே! ஆனால் அதுவெல்லாம் பார்க்க இதுவா நேரம்?

''அண்ணே! அண்ணே! கடலுக்குப் போன 'இதை' இன்னம் காணேல்லை. நான் இப்ப என்ன செய்ய?'' அவளின் தவிப்பும் தாபமும் 'சட்' என தடைப்பட--

இருந்தாற் போல், மின்சாரத்தின் நீண்ட ஒளிக்கற்றை இருளில் பெருங்கோடு கிழித்தாற் போல் பாய்ந்து வருகின்றது. அது உப்புமாலில் இருக்கும் 'கஸ்டம்ஸ்' காரரின் 'சேர்ச்லைட்'

அதன் ஒளியில் சற்றுத் தூரத்தில் படகை கரைக்கு இழுத்து விடும் மூவர். அவன் தனியாகத்தானே போனான்? ஆனால் படகு அவனுடையதேதான். கனகண்ணனை மறந்து அவள் துடிப்பே நடையாய் அதனருகே பாய்கிறாள்.

கரும் இருட்டில் கணவன் உருவம் அருகே வருவது தெரிகின்றது. ''ஏன் இவ்வளவு நேரம்?'' அவளின் சொற்கள் களிப்பினால் குலுங்குவது போல வெளி வருகின்றன.

''பிறகு சொல்லுறன் இந்தா மீன் கொண்டுபோ', அவன் பின்னால் இரு கரிய நிழல் உருவங்கள்.

'' தார் இது ''

"ரெண்டு இந்தியாக்காறர் நீ போட்டு வா எண்டு றன்'' கந்தையனின் குரல் அவளருகே கிசுகிசுக்கின்றது.

* * *

தன் குடிசையின் வெளி முற்றத்தில் சுற்றி அடைக்கப் பட்டகிடுகு வேலிக்குப் பின்னல் அந்த இருவரோடும் கந்தை யன் படுத்திருக்கின்ருன்.

கடல் பிரயாணத்திலுைம் அப்பொழுது பெற்ற கொடு ரமான அனுபவங்களினுலும் களைத்துச் சோர்ந்திருந்த அவ் விருவரும் பாயில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கின்றனர்

ஆனல் அவன் மட்டும்—உடல்களைத்துத் தான் இருக் கின்றது.

ஆனல் நெஞ்சம் சுழன்று அந்த நினைவுப் பரப்பிலேயே மிதந்து வர துவக்குகின்றது. அதை மீட்க முடியாத மன நிலை

நீருள் நீந்தி வரும் வெண் குமிழியாய், விழுந்து எழும் கடலிடையே இரு உயிர்களைக் காப்பாற்ற அவன் நடத்திய போராட்டம், வருகிறது.

கூடவே, வள்ளத்தைக் கரையில் இழுத்துச் சேர்க்கும் பொழுது உடம்பை வந்து தாக்கும் அதன் கனம் போல் நெஞ்சை வந்து தாக்கும் அந்த நிகழ்ச்சியின் கனம்.

அவன் இன்று வழக்கத்தை விட அதிக தூரத்திற்கே போயிருந்தான். மற்ற மீனவர்களும் ஒரு முறையும் போகாத இடம் அது.

மூழ்கி, எழுந்து தெரிந்த அந்த இரு தலைக் கறுப்புகளை சட் என அவன் கண்கள் கண்டு கொண்ட விதம்.

நிலைமையை உணரவே அவனுக்கு அரிய சில வினடிகள் தேவைப்பட்டன.

வள்ளத்தை அவற்றின் அருகே செலுத்தியபொழுது, ஏக்கப் பரிதவிப்புடன், நிராசையும் ஆசைத்துடிப்பும் போட்டியிட, வள்ளத்தைத்தொட்ட, வெடவெடத்த வெளி றிய அந்த ஒரு முகம்.

இது எல்லாவற்றையும் விட, தனியாளாய் இருவரை யும் வள்ளத்தில் ஏற்றி, வேண்டிய சிகிச்சை அளித்து ஆசு வாசப்படுத்திய பின், அவர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ் சமாக அவன் விளங்கிக்கொண்ட அந்தப் பயங்கரச் செய்தி.

அதை நினைக்கும் பொழுது, உடலெங்கும் ஓடி விறைக்கின்றது.

ஏமாற்றும் தரகர்களின் சூழ்ச்சியினால். தாயகத்தை விட்டு, அயல் நாட்டைப் பொன் கொழிக்கும் நாடாக எண்ணி ஓடி வரும் அவர்கள் கூறிய கதை......

மன அடித்தளத்தில் சிக்கியிருக்கும் ஆசைகளுக்குத் தூபம் போடப்பட்டு, அவைகள் சுவாலையாக்கப்படும் நிலையில், இருக்கும் உடமை, சொத்துகளைவிற்று, தலைக்கு நூறு, இருநூறு என தாருகாரர்களுக்கு கூலி கொடுத்து, இருள் போர்வையில். இந்தியக் கரையை உதறிவிட்டு படகு ஏறிய பத்துப் பேரையும் அந்தக் குரூரமான படகுக்காரன்--

முக்கால் வழியில், ஏதோ ஒரு ஒளியைக் கண்டு பயந்த படகுக்காரன் அவர்களை இறங்கிக் கரைக்கு நீந்திப் போகுமாறு கட்டளையிடுகின்றான். நீந்தத் தெரியாதென, இறங்க மறுக்கும் இவ்விருவரும் கடலில் பலவந்தமாகத் தள்ளப் படுகின்றனர். திணறித் திக்கு முக்காடியவாறு இவர்கள், படகைப் பிடிந்தவாறு கெஞ்சுகின்றார்கள். பதிலாக. துடுப்பின் வீச்சு, பலமாக நீரைப் பிளந்து கொண்டு, இவர்கள் மேல் விழுகின்றது. இதனால் பிடி தளர்ந்து நையும் இவர்களிடமிருந்து தப்பி அவசரமாகத் திரும்பிச் செல்கின்றது படகு. கை சளைத்து, உடல் ஓய்ந்து, சாவிற்கும், உயிருக்கும் இடையில் அவர்கள் தத்தளித்த வேளையில்தான் அவன் அவர்களைப் பார்க்கின்றான்.

நம்பியவர்களை நடுக்கடலில் தூக்கி எறிந்து, அவர்களின் உயிர் முனையிலே தம் சௌகர்யத்தைத் தேடிக் கொள்ளும் அந்தப் பணத்தாசை பிடித்த அரக்கர்களின் நினைவில், அதிரும் கடலாய் உள்ளம் நடுங்குகின்றது.

நேரம் ஊர்கின்றது.

நினைவோட்டத்தினால் அலைக்கழிக்கப்படும் உணர்வுகள், நெடுநேரம் நெஞ்சில் நின்று விறுவிறுக்கின்றன.

பின் சிறிது சிறிதாய், உடலின் அசதியினால், அவை மழுங்கி உறக்கத்தில் கரைந்து நழுவுகின்றன.

* * *

அவனின் நித்திரை கலைக்கப் படுகின்றது. படபடப்புடன் மோட்டார் படகு ஒன்று நீரைக் கிழித்துச் செல்லும் ஓசை.

மோட்டார் படகு......கஸ்டம்ஸ்காரர்கள்.........ஊரில் சில பிரமுகர்கள்...தர்மலிங்கத்தார்.

நினைவுகள் தூக்கமயக்கத்தில் தொய்ந்து தொடர்பற்ற பஞ்சுப் பொதிகளாய் மிதக்கின்றன.

ஒரே பாணியில் அடுக்கு அடுக்காக முளைக்கும் பெரிய வீடுகள்......'விர்' எனப் பறக்கும் படகுபோன்ற கார்கள்.

அன்றொரு நாள், எங்கிருந்தோ, அந்த கடற்கரையில் வள்ளம் வள்ளமாக வந்து இறங்கிய சரக்குகள்; அவற்றைத் தூக்கி ரோட்டு அருகே நின்ற லொறியில் அடைக்க போட்டியிட்டு உதவிய அந்தப் பகுதி மக்களுக்கு நோட்டு நோட்டாகக் கிடைத்த காசு.

கந்தையன் புரண்டு படுக்கின்றான்.

அருகே அவர்கள்......

இதயத்தில் இருந்தாற் போல் ஒரு நெருடல்

ஒரு பெரிய மனிதரின் உதவியை எதிர்பார்த்து வந்ததாக அவர்கள் கூறினர்களே......

''ஒரு நாள் தர்மலிங்கத்தார் தன்னைக் கூப்பிட்டனுப்பிப் பட்டும் படாமலுமாய்'' சொன்ன தன் 'வியாபார'ரகசியம்.

நினைக்கும் பொழுதே, கறை பிடித்த இரும்பை, உப்புத் தாளால் உரசுவது போல நெஞ்சில் ஒரே அரிச்சல்.

''இஞ்சைபார் கந்தையா! உனக்கு என்ரை விஷயம் தெரியும் தானே. எனக்கு நல்லா வள்ளம்விட தெரிஞ்ச ஆட்கள் தேவை. நீ இதுக்கு வந்து விடன். நல்லா சம்பாதிக்கலாம். நீயும் எத்தனை நாளைக்குத்தான் இந்த மீன் பிடிக்கிற தொழிலைச் செய்யப் போகிறாய்? அண்டு பிடிச்சு அண்டு சாப்பிடுறதை இனி விட்டு விடலாம்''.

அவருக்கு கோபம் வராத முறையில், அதை ஏற்க மறுக்க அவன் காட்டிய வினயம்.

''சரி சரி நீ போ! மற்றவங்கள் எண்டா எங்கை என்னட்டை வரலாம் எண்டு இருக்கிறாங்கள். நீ என்னடாண்டா......''

சாதாரணமாகச் சொல்வதுபோல இருந்தாலும், அதற்குள் உள்ளோடியிருந்த சோபம் அப்படியே தெரிந்தது.

அவரின் 'வியாபாரத்தில்' இதுவும் ஒரு ரகம்!

பளையில் இருக்கும் அவருக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலத்தில் பாடுபட உபயோகப்படுத்தப் படுவர்கள் இந்த 'இவர்கள்'

வேலை பெற்று கொடுத்ததற்காகப் பெருந்தொகையான முன் பணத்தை, அவர்களின் சம்பளத்திலிருந்து எடுத்துக் கொண்ட பின்......சம்பளம் கொடுத்தே வேலை வாங்கப்பட வேண்டுமென்ற நிலை அடைந்ததும், அவர்கள் பொலீஸில் ஒப்படைக்கப்படுபவர்கள்.

எதைக் கண்டு இவர்கள் இங்கு ஓடி வருகின்றார்கள்? தரகர்களின் வஞ்சனைச் செயல்களுக்கும், துருவும் 'சேர்ச் லைட்'டின் கண்காணிப்பிற்கும் தப்பி, இக்கரையில் வந்து ஒதுங்கும் இவர்களுக்கு, இத்தகைய--இன்னும் இதைவிட மோசமான, அடிமை, நரக வாழ்வுதானே காத்திருக்கின்றது.

அவனுக்கே புரிபடாத தவிப்பு நிறைந்த ஆதங்கம், அவன் நெஞ்சை ஆக்கிரமித்துப் பிசைந்து கொண்டிருக்கின்றது.

அதன் வேகத்திலே, துடிக்கும் மீனைக் கையில் ஏந்தும் பொழுது படபடக்கும் விரல் போல்' உள்ளம் படபடக்கின்றது.

ஏன் இந்தத் தவிப்பு அவனுக்கு மட்டும்? ஒரு மனிதனின் நிலை கண்டு மற்ற மனிதனிடம் பீறிடும் இரக்கத் துடிப்பா இது? அப்படியானல் இந்த மனிதத் துடிப்பு, கடலில் தள்ளி, துடுப்பால் அடித்த அந்தப் படகுக் காரனுக்கும், சம்பளமின்றி வேலை வாங்குவிக்கப் போகும் அந்தப் பிரமுகருக்கும் ஏன் ஏற்படாது இருக்கின்றது!

இந்த அலைப்பினிடையேயும் ஒரு தீர்மானம்.

'நாளைக்கு இவர்களைத் தர்மலிங்கத்தாரிடம் போக விடக்கூடாது. அந்த வாழ்க்கை இவர்களுக்கு வர வேண்டாம். போலீஸிலே ஒப்படைத்துத் திரும்ப அவர்களின் நாட்டிற்கே அனுப்புவதுதான் சரி'

* * *

விடிகின்றது.

மன உளைச்சலில் சோர்வினால் அப்பொழுதுதான் லேசாகக் கண்ணயர்ந்திருந்த கந்தையன் விழிக்கின்முன்.

படலைக்கு வெளியே யாரோ கூப்பிடுகின்முர்கள்.

எழுந்து வெளியே வருகின்முன். அவன் முன்னால் சில போலீஸ்காரர்கள், அப்பகுதிக் 'கிராம சேவகர்', அவர்களோடு தர்மலிங்கத்தார்.

''சில கள்ளக் குடியேற்றக்காரர்களுக்கு நீ அடைக்கலம் குடுத்திருப்பதாய் கேள்விப்பட்டோம். உன்ரை வீட்டை சோதினை போடவேணும்''.

தொடர்ந்து படலையைத் தள்ளிக்கொண்டு சப்பாத்துக் கால்கள் உள்ளே போகின்றன.

விறைத்தவனாய் நிலைத்து விட்ட கந்தையன் தர்மலிங்கத்தாரைத் திரும்பிப் பார்க்கின்முன்.

'இவர் ஏன் இங்கு?' எண்ணப் புதிர் வலையாய் பின்னலிடுகிறது.

'கிராம சேவகர்' விளக்குகின்முர்.

'' படகில் பத்து பேர் வந்ததாகத் தெரியுது. கரையில் காத்து நிண்டு நீந்தி வந்த எட்டுப் பேரை பிடிச்சுப் போட்டம். மற்ற ரெண்டு பேரும் உன்னிடம் இருப்பதாக இவர்தான் சொன்னர்...''

கந்தையன் தான் கரைக்கு வந்த பொழுது, மனைவியோடு கூட நின்ற கனகலிங்கத்தை நினைத்துக் கொள்கின்முன். சிக்கல் தெளிவாகின்றது.

அவன் மூலம் செய்தி அறிந்த தர்மலிங்கத்தார், அதனுல் ஆபத்து வருமென அஞ்சி தானே போலீஸிற்குத் தகவல் கொடுத்து; மற்ற எட்டுப்பேரையும் பிடிக்க உதவியதோடு, போலீஸை இங்கும் அழைத்து வந்திருக்கின்முர்.

இதனுல், அன்று வலிய அழைத்த பொழுது மறுத்த கந்தையனை பழி வாங்கிய திருப்தியும் கூட.

போலீஸ்காரர்கள் திரும்பி வருகின்முர்கள். அவர்களின் நடுவே அந்த இருவரும். பின்னுல் ஒப்பாரி வைத்து அரற்றும் அவன் மனைவி.

"சட்ட விரோதக் குடியேற்றக்காரர்களுக்கு உதவி, பாதுகாப்பு அளித்த குற்றத்திற்காக உன்னைக் கைது செய்யுறோம்."

கந்தையன் அதிர்ந்து நிற்கின்றான். அவனிலா குற்றச் சுமை?

எல்லாவற்றுக்கும் காரண கர்த்தாவாக இருந்த ஒருவர் நல்ல வேஷம் போடுகின்றார்.

வெறும் மனித நியதியின் உந்தலினால், கடலில் தத்தளித்த இருவரைக் காப்பாற்றி, ஒரு இரவு அவர்களுக்குத் தன் குடிசையில் ஓய்வளித்த குற்றத்திற்காக... அவனுக்கு?

எண்ணப் பொருமலில் கொதி நிலை அடைந்த பாலாய் அவன் குமுறும் வேளையில்--

ஏமாற்றுக்காரர்களை நம்பிய குற்றத்திற்காகக் 'கள்ளத் தோணி' என இழிவு படுத்தப் படும் அந்தப் பரிதாப கரமானவர்கள் அவன் கண்ணில் படுகின்றனர்.

நேற்று. மூச்சுத்திணறி நீர் குடித்துத் துவண்ட அவர்களுக்குத்தான் உயிரளித்த காட்சி பளிச்சிடுகின்றது.

அவர்களை, அவன் நிராதரவான அண்டை நாட்டார் என்பதற்காகவோ, தம்மினத்தவர் என்பதற்காகவோ காப்பாற்றவில்லை. வாழத் துடிக்கும் இருமனித உயிர்கள் என்ற மனிதாபிமானத்திற்காகத் தான் காப்பாற்றினான்.

மனித இயல்பு அற்றுப் பேயாட்டம் போடும் அரக்கர் மத்தியில் அவன் தன் மனிதத் தன்மையைக் காட்டியிருக்கின்றான்.

அவன் இருஜீவன்களுக்கு 'உதவி' இருக்கின்றான். உயிர் அளித்திருக்கின்றான்.

இந்நினைவு, அகப்பையாகி அவன் கொதிப்பை ஆற்றுகின்றது.

மனைவியை ஆத்திரத்துடன் பார்த்து விட்டு போலீஸ் வானில் ஏறிக்கொள்ளுகின்றான்,

வாகனம், வல்வெட்டித்துறைப் போலீஸ் நிலையத்தை நோக்கி விரைகின்றது. கந்தையன், பெரும் ஆட்டம் கண்டு ஓய்ந்த நெஞ்சினனாகின்றான்.

———

எம். ஏ. எம். சுக்ரி

# கழுவாய்

அன்று திங்கட் கிழமை......!

நீண்ட தொடர் வண்டிகள் பூட்டப்பட்ட 'உருகுணைக் குமாரி' உறுமிக்கொண்டே பிளாட் பாரத்தை வந்தடைந்தது. முட்டிமோதிக் கொண்டே, முண்டியடித்துக்கொண்டு, புகையிரதத்தில் இடம்பிடிக்க முனைந்தது சனக்கூட்டம். கன்னித் தன்மை குன்றாத பருவமங்கையர் – வாழ்க்கையின் அனுபவத்தின் பிரதிமையாக முகத்திலும் – நெற்றியிலும் சுருக்கங்கள் விழுந்த வயோதிபர்கள் – வாழ்க்கையின் அடிச் சரடுகள் - ஆசாபாசங்கள் – மனோவிகாரங்கள் இவற்றால் பாதிக்கப்படாத கைக்குழந்தைகள்.....அத்தனைபேரும் புகையிரதத்தில் இடம்பிடிக்க நடத்திய போட்டா போட்டி... போட்டியின் பிரதிபலிப்பாக எழும் மன உளைச்சலின் விளைவுகள்தானா வாழ்க்கையின் போராட்டங்கள்......?

அவர்களுள் ஒருவனாக நானும்.........ஒருவாறு கதவின் கம்பியைத் தொத்திப் பிடித்துப் புகையிரதத்துள் ஏறினேன். புகையிரதம் சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. திங்கட் கிழமையாதலால் வழமையைவிட கூட்டம் நெரிசலாகத்தானிருந்தது. இடந்தேடி என் கண்கள் துழாவின.

ஒரு மூலையில் சற்றே இடைவெளியிருந்தது......முண்டியடுத்துக் கொண்டு இடத்தைப் பிடித்துவிட்டேன். சனக் கூட்டத்தின் நெரிசலில் சிக்குண்டதால் ஏற்பட்ட ஆயாசம் வியர்வையாக வழிந்தது. ஜன்னல் மூடியை நீக்கிவிட்டு வெளியே நோக்கினேன். பனிப்புகார் இன்னும் முற்றாக நீங்கவில்லை.

புகையிரத நிலையக்கடிகாரம் மணி ஆறு அடித்து ஓய்ந்தது. புகையிரதம் நகன்றது......

குளிர்காற்று வீசி வியர்வையின் ஆயாசத்தைப் போக்கி உடலுக்குத் தெம்பூட்டியது. நெடுந்தூரம் பரவிய பசுமையின் சித்திரம். எங்கும் பசுமைக் கம்பளம் விரித்தாற் போன்ற தோற்றம். மெல்லிய காற்றில் சலசலக்கும் பச்சிலை மரங்கள்.........ஆதவனின் கிரணங்கள் அப்பொழுதுதான் கதிர்களின் மேல் செறிய......அவை பழுத்த நெற்கதிர்களின் மேல்பட்டு அவற்றின் நிழலாக மாறி நீண்ட தூரிகையினால் வண்ணங்கள் தீட்டின. வெண்ணிற மேகங்கள் வானவரம்பில் படிந்து கிடந்தன. இந்தக் காட்சியில் எனது உள்ளம் ஒன்றித்து -- இணைந்து -- நான் என்னையே இழந்த நிலையில் ரெயிலின் உள்ளே நோக்கினேன்.

பக்கத்து முன்னே 'சீட்'டில் நடுத்தரவயதுள்ள ஒரு பெரியவர். நாற்பதுக்கு மேற்படாத வயதாயிருக்கலாம். சற்றுப் 'பசையுள்ளவர்' என்ற உண்மைக்கு அவரது உடை சான்று பகன்றது. ஆங்கிலப் பத்திரிகையை விரித்துப் படித்துக் கொண்டிருந்தார். பத்திரிகையைப் படிக்கும் நிலையில் அவரது மூக்குக் கண்ணாடி கோணி சரிந்திருந்தது. இடைக்கிடை அந்தப் பெரியமனிதர் தமக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த இளம்பெண்ணைப் பார்த்து விட்டு, மீண்டும் பத்திரிகையில் மனஞ்செலுத்தியதை நான் அவதானித்தேன்.

அவள்...அவ்வளவு பிரமாதமாகச் சொல்லமுடியாவிட்டாலும் சுமாரான அழகியாக இருந்தாள்... பதினெட்டு வயதிருக்கலாம்... வாளிப்பான உடற்கட்டு... துரு துருவென்ற இளமுகம்... பெரிய கருவிழிகளில் வெட்கத்தின் வெளிப்பாட்டின் படபடப்பு... கீழே நோக்கியவாறு நகத்தால் சீட்டை சுரண்டிக் கொண்டிருந்தாள்.

நான் அவர்கள் இருவரையும் நோக்கினேன்... சனக் கூட்டத்தின் நெரிசலில் காலைக்கூட நீட்டமுடியாத நிலை. அந்தப் பெரிய மனிதர் மூக்குக்கண்ணாடியைக் கழற்றினார். பத்திரிகையை மடித்துவைத்தார்

நான் காலை நீட்ட முயன்றேன்... அது அவரது காற் சட்டையில் படிய...

"எக்ஸ்யூஸ்மீ..." நாகரிகமாக ஆங்கிலத்தில் நான் கூற ...

"ஓ... தட்ஸ் ஒல்ரைட்..."என மரபுவழிப்பதிலை பெரியவர் ஒப்புவிக்க... ஆரம்பமாகியது உரையாடல்

"தம்பி கொழும்புக்கா...?" என்றார் பெரியவர்...

"ஆம் !" என்றேன்...

"நீங்கள்...?"

"நான் ஊர் காலி. வீட்டுக்கு ஒரு வேலைக்காரப் பெண்ணைக் கூட்டிப் போகவந்தேன்."

'வேலைக்காரி'... அவளைப் பார்த்ததும்–அந்த வார்த்தையைக் கேட்டதும் என் உள்ளம் சற்று அதிர்ந்து ஓய்ந்தது. என் முகத்தில் தோன்றிய திடீர் மாற்றத்தை அந்தப் பெரியவர் அவதானித்தாரோ என்னவோ...?

"என்ன தம்பி ! வேலைக்காரி என்றதும் அப்படிப் பார்க்கின்றீர் ! ஓஹோ ! வேலைக்காரிகள் கிடைப்பதே அருமையாக இருக்கும் இந்தக் காலத்தில் எனக்கு எப்படி இவள் கிடைத்தாளென்று ? நானும் எவ்வளவோ முயற்சி செய்துதான் கடைசியில் இவள் கிடைத்தாள் !"... எனது உள்ளத்தின் பாதிப்பையும், வேதனையையும் உணராது பெரியவர் பேசிக்கொண்டே போனார்.

எனது உள்ளத்தின் உட் சதையை கூரிய நகங் கொண்டு பிராண்டுவதுபோன்ற பிரமை. மனத்தின் ஆழத்தில் புதைந்து கிடந்த அந்தச் சம்பவக் கோவைகளை யாரோ பலவந்தமாக வெளியே நினைவுலகுக்குக் கொண்டு வரச் செய்யும் ராட்சஸ முயற்சியின் உணர்வு......அழிந்த நினைவுகள்......மறைந்த சுவடுகள் மீண்டும்......

அன்று ஞாயிற்றுக்கிழமை......ஓய்வு நாள்...சாய்வுநாற் காலியில் அமர்ந்து அன்றைய செய்திப் பத்திரிகையைப் புரட்டிப் படித்துக் கொண்டிருந்தேன். பத்திரிகையில் மூழ் கிக் கிடந்த என்னை "கேட்டின்" 'கிறீச்' சப்தம் நினைவுல குக்குக் கொண்டுவந்தது...தலையை உயர்த்தி நோக்கினேன்.

அங்கே......அவள் நின்றாள்......வாரிச் சுருண்ட கேசங் கள்......முகத்தில் இளமையின் களை...பருவத்தின் சாயல்... இவற்றுக்கெல்லாம் மெருகூட்டுவது போன்று நாட்டுப் புறச் சிங்களப் பெண்கள் அணியும் உடை அவளுக்கு மிக வும் எடுப்பாக இருந்தது.

''மஹத்தயா ! நான் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்த வள்........ஏதாச்சும் வேலையிருந்தால் கொடுங்க... .....எந்த வேலையானாலும் சரி...'' என்று நாட்டுப்புறப் பேச்சு வழக் கச் சிங்களத்தில் அவள் பேசியது கேட்க மிகவும் இனிமை யாயிருந்தது.

அவளுடன் பேசியதிலிருந்து பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவளென்றும்... அவள் வேலை தேடி நகரத்துக்கு வந்தாளென்றும் தெரிந்தது... அவளது பேச்சும், பண்பும், எனக்கு மிகவும் பிடித்துவிட்டது...

அன்று முதல்... ரோசலின் ! ஆம் ! அதுதான் அவள் பெயர் .. எங்கள் வீட்டு வேலைக்காரியானாள்.

ரோஸலின் வந்து ஓரிரு வாரங்கள் கழிந்துவிட்டன. ஓடியோடி சுறுசுறுப்பாக வேலை செய்யும் அவளது பண்பு வீட்டில் எல்லோருக்கும் பிடித்துவிட்டது... ரோஸலின் எங்களுள் ஒருத்தியாக தன்னைக் கருதிக் கொண்டே எங்க ளோடு பழகினாள்... காலையில் எழுந்ததும் வீடு வாசல் பெருக்குவது... சமையல் செய்வது... குழந்தைகளைப் பரா மரிப்பது... அத்தனை வேலைகளையும் விருப்போடு அவள் செய்தாள். வீட்டுக்குக் கிடைத்த வேலைக்காரிகளுள் ரோஸலின்தான் மிகச் சிறந்தவளென்றும் அவளைப் போன்ற ஒரு வேலைக்காரியை இலகுவில் தேடமுடியாதென்றும் அம்மா அடிக்கடி கூறுவாள்.

காலமென்னும் பெருவெள்ளத்தில் பல சுழிப்புகள்... அன்றுதான் ரோஸலின் போக்கில் பெரும் மாற்றம் விளை வித்த அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

அன்றுதான் கொழும்பிலிருந்து எங்கள் வீட்டில் சில நாட்கள் தங்கும் எண்ணத்துடன் எனது மாமாவும், மாமியும் வந்தனர். அவர்கள் வந்த அந்த நாள்முதல் ரோஸலினுக்கும், அவர்களது இரண்டு வருடக் குழந்தைக்கும் தொடர்பு ஏற்பட்டது. அந்தக் குழந்தையுடன் ரோஸலின் அடிக்கடி கொஞ்சுவாள். சில நேரங்களில் வீட்டு வேலைகளைக் கூட மறந்து அந்தக் குழந்தையுடன் பொழுது போக்குவாள்.

ரோஸலின் அந்தக் குழந்தையுடன் கொஞ்சும் பொழுது அவளுக்கும் அந்தக் குழந்தைக்கும் ஏதோ ஆன்மீக, சூட்சுமத் தொடர்பிருப்பது போன்ற உணர்வு தொனிக்கும். தாய்மையினடியாக எழும் பாசத்துடிப்பு—சகோதரபாசத்தின் வாஞ்சையின் வெளிப்பாடு அத்தனையும் குழைந்து உருவெடுத்த நிலையில் அவளது முகம் காட்சி நல்கும்.

ரோஸலின் அந்தக் குழந்தையுடன் கொஞ்சி விட்டு வேலைகளைச் செய்யாது பொழுதுபோக்குவதாக அம்மா ஆரம்பத்தில் குறை கூறினாள். காலப்போக்கில் எனது மாமியாரும் ரோஸலின் போக்கை வெறுத்தாள். எல்லோரின் பாராட்டுதலுக்கும் ஆளான ரோஸலின் வீட்டாரின் வெறுப்புக்கு ஆளானாள். இந்நிலையில் நான்......

நானும் ரோஸலினை வெறுத்தேன். வழமையில் காலையில் நான் குளிப்பதற்கு குளிக்கும் தொட்டியில் தண்ணீர் நிறைப்பதுமுதல் எனது எல்லா வேலைகளையும் செய்த அவள் காலப்போக்கில் அவற்றைக்கூட ஒழுங்காகச் செய்யத் தவறினாள். அவளுக்கு எதிராக வீட்டிலுள்ளோர் சுமத்திய குற்றச்சாட்டுகளில் நானும் கலந்து கொண்டேன்.

ஆனால் அத்தனைக்கும் காரணம்...

அந்தக் குழந்தை... அப்படி அந்தக் குழந்தைக்கும் ரோஸலினுக்கும் என்ன பந்தம்... பாசம்... உறவு...?

அன்று திங்கட்கிழமை... காலையிலேயே ஒரு வேலைக்காக வீட்டை விட்டுக்கிளம்பவேண்டியிருந்தது. ரோஸலினுக்குக் குளிக்கும் தொட்டியில் தண்ணீர் நிறைக்கும்படி கூறினேன்.

ஒன்பதுமணிக்குப் புறப்படும் பஸ்சுக்கு இன்னும் அரைமணித்தியாலமே இருந்தது. அவசர அவசரமாக குளிக்கும் அறையுள் நுழைந்தேன்... அங்கு... தொட்டி வெறுமையாக இருந்தது.

எனது நெற்றி நரம்புகளெல்லாம் ரத்தவேகத்தினுல் படபடத்தன. உணர்ச்சிக் குவியல்களெல்லாம் முறுகித் திரண்டு வெறியாக நின்றன...

"ரோஸலின்" பாழடைந்த கிணற்றினுள்ளிலிருந்து வெளிவரும் எதிரொலி கலந்த இரைச்சலில் பேய்க்குரலில் கத்தினேன்.

வெறுமை... சூன்யம்...

ரோஸலின்... மீண்டும் என் குரல் கற்பாறைகளில் பட்டு மீண்டு வரும் எதிரொலியின் பைசாச இரைச்சலில் அதிர்ந்தது...

மீண்டும் மௌனம்...

வீட்டின் பின்பக்க வாசலுக்குச் சென்றேன்.

அங்கு ரோஸலின்......குழந்தையை தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டே......வேலைசெய்து மரத்துப் போன அவள் முரட்டுக் கைகள் குழந்தையின் ரோஜாக் கன்னங்களை......மென்பட்டுத் தோலை வருடிக் கொண்டிருந்தன.

நான் வெறிநாயானேன். என்னுள் உள் சரடாக ஓடிக் கொண்டிருந்த கோபம் பூதாகார உருவெடுத்து அதிர...... நான் தன்னிலையிழந்தேன்! மறுகணம்! ரோஸலினின் கையிலிருந்த குழந்தையை வெடுக்கெனப் பிடுங்கினேன்! என் தசைத் திரட்சியின் முறுக்கேறிய கால்களின் முரட்டுத் தாக்குதலின் பிடியில் சிக்கிய ரோஸலின் தரையில் உருண்டாள்......

அவளது தலை சுவரில் மோதுண்ட... சட்டை சிவப்பாக மாறியது.

நான் இரத்தவெறிபிடித்த பேயா? இதயத்து உணர்ச்சிகளெல்லாம் மரத்துவிட்ட மரக்கட்டையா?

5

கேள்விகள் என்னுள்ளேயே எழும்பி......நெரிசலாகி... குமைந்து......மறுகணம் !

அத்தனை கேள்விகளையும் மீறிய உணர்வுநிலையில்--

வெறியும்; மிருகத்தனமும் தலைதூக்க...அவளுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும் என்கின்றேனு? நான்... நான் நானுக அந்த நேரம் இல்லாது நானல்லாத ஒன்று என்னுள் இருந்து என்னை ஆட்டியதா ?

மறுநாள்......

ரோஸலினைக் காணவில்லை.

ரோஸலின்......அவள்...என் உள்ளத்தின் தசைத்திரட்சியில் செந்தணலை நிறைப்பதுபோன்று உள்ளம் நெருப்பாய் அவிய......ரோஸலின்...அவளை எங்கே தேடுவது......அவளை வெறுத்த நான்...அடித்த நான்......இப்பொழுது அவளைத் தேட......

என்ன ? நான் நானுகின்றேனு ? நானல்லாதது என்னை விட்டு அகன்று விட்டதா ?

ரோஸலினைத் தேடிப் பார்த்தேன்......

பலனில்லை.

நாட்கள் நகர்ந்தன...

அறையில் இருந்து புத்தகம் படித்துக்கொண்டிருந்த நான் அம்மாவின் குரல் கேட்டு வெளியே வருகின்றேன்.

அங்கு... ரோஸலின். அவள் கையில் ஓர் குழந்தை... எங்கள் வீட்டுக்குழந்தையை உரித்துவைத்தாற் போல... அதே மாம்பழக்கன்னங்கள்... துரு துருவென்ற இளமுகம்... வட்டக் கருவிழிகள்... கன்னங்குழிய புன்னகைத்து கை ஆட்டிச்சிரித்தது அந்தக் குழந்தை...

உலகத்தின் கள்ளமும், கயமையும், குணதோசங்களும் எட்டியும் பார்க்கமுடியாத குழந்தை உலகின் பிரதிநிதியாக அது அங்கே சிந்திய புன்னகை. எனக்கு அன்புலகை அறிமுகப்படுத்தியதா ?

"ரோஸலின் !" வார்த்தைகள் என் இதயத்தின் வேதனையைச் சாறு பிழிந்த நிலையில் அடித்தொண்டையினூடாக வெளிக்கிளம்பின.

"மாத்தயா! நீங்க என்னை அண்டக்கி அடித்திங்க! அதைப்பற்றி பரவாயில்லே! நீங்க எசமான்! நான் ஒங்கட வேலேக்காரி! ஒங்களுக்கு என்ன எதுவும் செய்ய ஏலும்! ஆனுல் அந்த கொழந்தையை என்னிட மிருந்து பறிச்சீங்க? என்னுலே அதே பொறுக்கமுடியலே; இது எங்கட அக்காவுட கொழந்தை! அதைப் பிரிஞ்சி என்னுலே இரிக்கவே ஏலாது! ஏன்ட அக்கா கூட சென்ற மாதத்திலிருந்து சுகமில்லாம கிடக்கிரு. இந்தக் கொழந்தையையும் அக்காவையும் காப்பாத்தனும்னுதான் நான் வேலேசெஞ்சி பொழக்க வந்தேன். இந்தக் கொழந்தெயே பிரிஞ்சி இருக்கவே என்னுலே ஏலாது! ஆனு ஏங்கட கொழந்தையை கண்டதும் எனக்கு கொஞ்சம் அமைதி. அதைக் காணுறப்போ இந்தக் கொழந்தையை காணுற போல இருக்கும்! அதாலேதான் ஒங்கட வீட்டில ஏண்ட துக்கத்த மறந்து இரிக்க முடிஞ்சிது. அதாலேதான் ஒங்கட கொழந்தையோட அன்பா நிதமும் பழகினேன்! அது ஒங்களுக்குப் பிடிக்கலே! அதுக்குப் பொறவும் நான் இந்த வூட்டில இருந்தா வேறென்ன கரச்சல் வருமோண்டுதான் நான் வூட்ட விட்டு போனேன்! என்று சிங்களமும், தமிழும் கலந்த ஒரு நடையில் பேசிமுடித்தாள் ரோஸலின்.

நான் சிலேயானேன்.

"மாத்தாயா! நான் போறேன்! ஒங்கட கொழந்தை நல்லா இருக்கணும்!! என்று கூறிக்கொண்டே தான் கொண்டு வந்த ஒரு பார்சலே தனது குழந்தையின் கையில் கொடுத்து அந்தக் குழந்தையின் கையால் எங்கள் குழந்தைக்குக் கொடுத்தாள்.

குழந்தையும் குழந்தையும் பரிமாறிக் கொண்டன.

ஒரு உலகத்தின் இரு பிரதிநிதிகள்.......

நான் அந்த உலகிற்கே தகுதியற்றவனுக ஒதுங்கி நின்றேன்

'கிறீச்' சப்தத்துடன் கேட் பூட்டப்பட்டது.

ரோஸலின் நடந்தாள்!

உலகில் மனிதன் கடமையோடு மட்டும் பிறக்கவில்லே; உணர்ச்சிகளோடும் பிறக்கிறுன். அந்த உணர்ச்சிகள்

பங்களா வாசிகளுக்கும். பெரிய மனிதர்களுக்கும் மட்டுமல்ல வேலைக்காரிகளுக்கும் உண்டு என்ற ஒரு பெரும் உண்மையை எனக்குக் கற்றுத்தந்த ஒரு ஆசானாகத் தான் அவள் எங்களை விட்டு வெளியேறுகிறாள் என்ற உணர்வு அவளுக்கில்லை என்பதை அவளது நடை காட்டியது. ஆனால் அந்த உணர்வு என்னுள் நிறைந்திருந்தது.

காலி கட்டுகொடை பாலம் நெருங்கியதும் அடுத்த ஸ்டேசனில் இறங்க ஆயத்தமானார் அந்தப் பெரியவர்.

பெரியவருக்கும் ரோஸலின் கற்றுத்தந்த உண்மையைச் சொல்ல வேண்டுமென என் உள்ளம் துடித்தது.

''பெரியவரே! இதுதானே உங்கள் வேலைக்காரி!'' என்றேன்.

''ஆமாம்!'' என்றார்!

''வேலைக்காரி என்றால் என்ன! அவர்களும் எங்களைப் போன்ற மனிதர்கள்தானே! பந்தம், பாசம், உறவு ஆகியவற்றுக்குக் கட்டுப்பட்டவர்கள்தானே! இதை நாம் சில சமயம் மறந்து விடுகின்றோம். இல்லையா பெரியவரே!'' என்றேன்.

அனுபவத்தினடியாக உணர்ச்சிக் குவியலாக, குற்றவாளியின் மனோநிலையில் வெளிவந்த அந்த வார்த்தைகள் அவரது இதயத்தில் ஆழமாகப் பதிந்திருக்கவேண்டும்!

''முக்காலும் உண்மை!'' என்று ஆமோதித்தார் பெரியவர்.

காலி ஸ்டேசனும் வந்துவிட்டது.

பெரியவர் விடைபெற்றுக் கொண்டார்.

வேலைக் காரியும் பெரியவரைத் தொடர்ந்து சென்றாள். புகையிரதம் புறப்பட்டது......

''ஏதோ ஒரு பெரிய குற்றமொன்றுக்கு கழுவாய் செய்துவிட்ட அமைதியும், சாந்தியும் என்னை ஆட்கொண்ட நிலையில் வெளியே நோக்கினேன்...

எங்கும் அமைதி...சாந்தி......ரெயில் மட்டும் கடகடென ஓடிக்கொண்டிருந்தது.

---

செம்பியன் செல்வன்

# பாரம்பரியம்

நாகஸ்வரத்தின் இன்னிசை காற்றில் கலந்து, அலை அலையாக இழைந்து கொண்டிருக்கிறது. அந்த ஓசையிலே தெய்வானை துயில் கலைந்து கண் மலர்த்தி எழுகின்றாள். குடிசையினூடாக வந்து விழும் சூரிய கிரணங்களின் ஒளியின் தாக்கம் அவள் கண்ணின் கரும் 'பாப்பா'வைக் கூச வைக்கின்றது.

'அட பொழுது விடிஞ்சு இவ்வளவு நேரம் அடிச்சுப் போட்டது போல......பிணம்மாதிரி தூங்கியும்.........உடல் அசதி மட்டும் போகேல்லயே!......'' —என்ற சிந்தனையினூடாக, இரவு வெறும் வயிற்றில் துணியை நனைத்துப் போட்டுக் கொண்டு கிடந்ததுபோல், நீரைமட்டும் வேண்டியளவு குடித்துவிட்டு, பசியோடு கிடந்தும், 'பசி! பசி!' என்று கத்திவிட்டு அவள் மகனும், பசிக்களைப்பில் தூங்கி விட்டதும் நினைவுக்கு வருகின்றது.

வெளியே, இன்னிசை கரும்பாறைகளில் மோதிப் பின் வாங்கும் பயனற்ற கடலலைகளாக, அவள் செவிப்பறையில் வந்து முட்டி, மோதிக்கொண்டிருக்க......

மகனைத் திரும்பிப் பார்க்கிறாள்.

ஒட்டுத் துணிகள் பல போட்டு, துண்டுத் துணிகளா லேயே தைக்கப்பட்டதோ என்ற ஐயத்தை எழுப்பியவாறு காட்சியளித்த காற்சட்டை, இடுப்பினின்றும் நழுவி, கால் களிடையே சிக்குண்டு கிடக்க, முதுகின் அடித்தண்டின் கீழ்பரப்பு பளிச்சிட அவள் மகன் அலங்கோல நிலையில், பசிக்களைப்பில் தன்னை மறந்து, அயர்ந்து தூங்கிக்கொண்டி ருக்கிறான்,

தெய்வானை மெல்லச் சிரிக்கிறாள்

பணக்காரர்கள் பல துண்டு வர்ணத் துண்டுகளை ஒட்டுப் போட்டுத் தைத்தால் அது--'பாஷன்.'

ஏழைகள் தமது மானத்தை மறைக்க, கிழிசல்களை இணைக்க, ஒட்டுப் போட்டால் அது--'ஏழ்மை'

வெளியே இன்னிசை அமோகமாக ஒலிபரப்பாகி ஊ ரெங்கும் பரவிக் கொண்டிருக்கின்றது.

'......ம்......இசை என்னமோ நல்லாத்தானிருக்கு...... இதுகளை எல்லாம் நாங்களே காசுபோட்டு வாங்கி...அனு பவிக்க முடியுமா?......எங்களைப் போல உணவுக்கே வழி யில்லாதவன் இதுகளுக்கெங்க போவான்...பணக்காரன்... தனது செல்வச் செருக்கை வெளியே காட்ட முற்படும் பொழுது.....புல்லுக்கும் பொசியும் நீரைப்போல......கேட் டுத்தான் திருப்திப்படவேண்டும்......''

மகனுக்கும் நித்திரை கலைந்து விட்டதா?... கலைத்து விடப்பட்டதா?...

பசியா?... இசையா?...

கண் விழிக்கும் அவன், அன்னையைப் பார்க்கிறான்.

''அம்மா!... பசிக்குதம்மா!...''—முகம் சிணுங்குகிறது.

''பசியா!...''—ஏதோ ஆச்சரியமான வார்த்தைகளைக் கேட்டவள் போல, தெய்வானை வாய்விட்டுச் சிரிக்கிறாள்.

'அம்மாவுக்குப் பைத்தியமா?...'—அவன் ஆச்சரியத் துடன் 'பூளை' சாறிக்கிடக்கும் கண்களை அகட்டி, அவளைப் பார்க்கிறான்.

'பசி'—என்றதும் வழக்கமாக முதுகிலே விழும் 'பட் !... பட்... !'களை இன்று காணோம். அடித்து விட்டு முகம் விசித்து, விசித்து அழும் 'பாவி அன்னை'யையும் இன்று காணோம். மாருக—

சிரிக்கும் அன்னை !

''எனை அம்மா...... ஏனணை...... உனக்கென்னணை...... ஏனம்மா சிரிக்கிருய் ?''—என்று சந்தேகக் கண்களுடன் கேட்டுக் கொண்டே தாயை அண்டி ஒட்டி நிற்கிருன் அவன்.

''டேய் வேலு !... உனக்கென்னண்டு சொன்னுய் ?... பசியா !... பசிக்கலாமாடா உனக்கு... பணமிருப்பவனுக் கல்லவா பசிக்க வேண்டும்... ம்... பணம் இருக்கிறவனுக் கெங்கே பசி இருக்கப் போகிறது ! வேலு இப்ப உனக்கு காதில ஒண்டும் கேக்கேலியாடா !...''

''ஓ !... நல்லாக் கேக்குதே !... பீப்பீ !... சோக்கா இருக்குதணை !...''

''போதாதாடா !... காதுக்கு இனிமையா இதெல்லாம் இருக்கேக்க...... பசிக்கலாமாடா !...'' —அவள் சிரிக்கிருள். அந்தச் சிரிப்பு—

''கல்லுக்குள் தேரைக்கும் உணவளிக்கும் காருண்யனை' யும் தீய்க்கும் நெருப்பு !

''வேலு !... இந்த ஆடம்பரத்தல உன்ர பசி போகா தாடா !... கேவலம்... ஒரு உயிரின் பசியை போக்க இயலாத ஆடம்பரத்தால... உலகுக்கு ஏன் இந்த அகம்பாவம் !... உண்ண ஒரு வாய் சோற்றுக்கு வழியில்லாம... ஒரு சீவன் தவிக்கேக்க... வீட்டில் உணவருந்தி விட்டு, விருந்திற்கு வந்து விரலால், நாசுக்கா உணவைத் தொட்டு எச்சில் படுத்தி விட்டு ஒருவருக்கும் பயன்படாம செய்யும் ஆடம்பரம்... பணக் கொழுப்பா ?...... நாளையை உணராத நிலையா ?... உலகின் போக்குணராத உன்மத்தமா ?...''

— சிந்தனையில் அவள் மனம் தோய்ந்து, விழி மடை உடைப்பது –கண்ணீரா ?... இரத்தமா ?...

உலகுணர்ந்த தத்துவார்த்த சிந்தனை இது ஒன்றுதான் அவளின்–அவன் அவளுக்கு விட்டுச் சென்ற மூலதனம்.

அவன் நினைவுகள் அவள் இதயத்தடாகத்தில் தேனலை களைத் தோற்றுவித்து, அதில் தெறிக்கும் துகள்களின் சுவைப்பின் இரசிப்பில் அவள் தன்னை மறந்து நிற்கிருள்.

## 2

அப்போது அவள் பருவப்பெண். தன்னுள்ளே பல ரகஸ்யங்களை உள்ளடக்கி நிற்கும் மோகன மொட்டுரோஜா. தந்தையின் செல்லப் பெண். வீட்டின் இளவரசி.

பகலில் தந்தை வேலியடைப்பு, கிணறு இறைத்தல் என்று சென்றுவிட, வீட்டை அரசோச்சும் எழிலரசி.

தந்தை வெளியே சென்றுவிட, வீட்டு வேலையை முடித்து வைத்துவிட்டு. தானும் தனது நெஞ்சரகஸ்யத்தின் துணையுமாக அவள் கதை பேசி நிற்கையில்...

அதுவே அவளுக்குத் துணை.

திடீரென்று அவர்கள் குடியிருந்த இடத்திற்கு அருகே எருக்கலஞ்செடி முளைத்துக் கிடந்த காணியினை யார் யாரோ பார்வையிட வந்தார்கள். மறுநாள் கல்லும் மண்ணும் லாரிலாரியாக வந்து குவிந்தன. கட்டிடம் ஒன்று எழும்பத் தொடங்கியது ஜனங்களின்—கூலியாட்களின்—பரபரப்பான நடட்டபம் அப் பகுதியைக் கலகலக்க வைத்து அதுவரை நிலவி வந்த அமானுஷ்யத்தைக் கலைத்தது.

தன் வீட்டிலிருந்தவாறே கட்டிடம் எழுப்பும் வேடிக்கையை கவனிப்பது தான் அவளின் தற்போதைய பொழுது போக்கு.

கூலியாட்களில் ஒருவனுக அவன், வியர்வை மேனி வெயிலில் பளபளக்க, வேடிக்கைப் பேச்சுகளை உதிர்த்தவாறு வேலை செய்து கொண்டிருப்பான். அவனைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். அவனின் நகைச் சுவைப் .பேச்சுகள் அவள் காதிலும் சில வேளைகளில் வந்து விழும். அவள்'களுக்' என்று தன் மனதுக்குள்ளே சிரித்துக் கொள்வாள்.

ஒரு நாள் 'கண்டிராக்டர்' வந்து அவள் தந்தையுடன் நீண்டநேரம் பேசிவிட்டுச் சென்ருர்.

" ஏனணை அப்பு கண்டிராக்டர் வந்திட்டுப் போருர் ?"

"அதைச் சொல்லத்தான் பிள்ளை நானும் உன்னைக் கூப்பிட இருந்தனுன் !" என்று அவள் கையில் நாலைந்து பத்துரூபாய்த் தாள்களைக் கொடுத்தார்.

"இது ஏதணை இவ்வளவு காசு!"

"கண்டிராக்டர் ஒரு புது வியாபாரத்துக்கு வழிகாட்டிட்டுப் போறார் பிள்ளை... இங்கவேலை செய்யிறாக்களுக்கு சாப்பாடு சமைச்சுப் போடட்டாம். கூலியாட்களுக்கு இந்தச் சாப்பாட்டுச் சங்கதி பெரிய கஷ்டமாக இருக்குதாம் அவை சாப்பிட ஏத்த கடைகளும் இங்கே இல்லையாம். அதால எங்களை இவங்களுக்கு சாப்பாடு போடமுடியுமா எண்டு கேட்டார்... நானும் சரி எண்டு சொல்லிப்பிட்டன் பிள்ளை..."

"என்னணை அப்பு இவ்வளவு பேருக்கு சமைக்கிற தெண்டா சும்மா லேசே!... அதுக்கு வேண்டிய பாத்திரங்களுமில்லை... அதோட வேலைசெய்து நாரியெல்ல முறிஞ்சு போடும்!... நான் ஒத்துக்கொள்ள மாட்டன்"

"உதொண்டும் கஷ்டமில்லைப் பிள்ளை!... நானும் உனக்கு துணையாக இங்க வேலை செய்யலாம்... அதோட தொட்டாட்டு வேலைக்கும் ஒரு பொடியனைப் பெட்டையைப் புடிச்சுக் கொண்டாப் போச்சுது... உதால கொஞ்சம் லாபமும் வரும்போல கிடக்குது... ஒரு ஆறேழுமாதத்துக்கு நானும் வெளியில வேலைக்கெண்டுபோக வேண்டியதில்லை. ஒவ்வொரு நாளும் உன்னைத்தனிய விட்டிட்டு போகேக்க 'நெருப்பைக் கட்டிக்கொண்டு போறதுபோல என்ர மனம் படுறபாடு உனக்கெங்க பிள்ளை தெரியப்போகுது!... இதால கொஞ்சம் ஏதாவது பணம் தேறினா அதைக் கொண்டு ஒரு வெத்திலைக்கடை வைச்சாலும், வாய்க்கும் வயித்துக்கும் சிவனேண்டு ஏதாவது கிடைச்சுக் கொண்டு இருக்கும்... இப்ப நீ என்ன பிள்ளை சொல்லுறாய்?"

"இனி என்னணை அப்பு சொல்லக் கிடக்குது! உனக்குச் சரி யெண்டா எனக்குஞ் சரிதான்!"

அடுத்த நாளே அவர்கள் வீட்டில் சாப்பாட்டுக்கடை ஆரம்பமாகிவிட்டது.

வாடிக்கைக் காரனாக நுழைந்த அவனும் வாழ்க்கைத் துணைவனானான். அவனின் வேடிக்கைப் பேச்சுகளே அவளை அவன் பால் இழுத்தது. அப்புறம் அவள், நாளெல்லாம் அவன் பேச்சுகளிலேயே மயங்கிக் கிடந்தாள்.

* * *

''என்னனை சும்மா இருக்கிருய்? எனக்குப் பசிக்கு தம்மா!''

--அவள் சிந்தனை காற்றில் பறக்கும் ஏடுகளாக சிதறு கின்றன. அவளையறியாமலே அவள் கை சேலேயின் தலைப் பின் முடிச்சை பழக்க உணர்வில் தடவிப் பார்க்கின்றது அங்கே--

முடிச்சைக் காணவில்லையே!

''என்னட்டை ஒரு சதம்கூட இல்லியேடா!...... நான் என்னடா செய்வேன்!......'' --அவள் விம்முகிருள்.

'அவரா...... அவரா...... இருந்தால் காசு இல்லாட்டி யும் உன்னை எப்படியும் தேற்றி விடுவாரேடா!... அவருக் குத்தான் அந்தத் திறமையுண்டு......அவர் தான் பேச்சை எப்படி எப்படியெல்லாம் திருப்பி, விசயத்தையே மாற்றி, சிரிக்க வைத்து விடுவாரே!......அப்படித்தானே அன்றும் அதை இன்று நினைத்தாலும் சிரிப்பாக இருக்கிறது!......' நினைவுகள் என்ன தேனீக்களா? நாளெல்லாம் எங்கெங்கோ பறந்து சென்று தேனெடுத்து, பின்னர் கூட்டை அடைவது போல, அவள் நினைவும் எங்கெங்கோ படர்ந்து சென்று பின் அவள் கணவனின் நினைப்பில் நிலைக்கிறது.

கோயில் கொடியேறி--திருவிழாக்கள் 'காணிவலாக'வும் 'பொருட்காட்சியாகவும், உரசல் இன்பம் பெறும் 'மதன விழா'வாகவும் அமோகமாக, அமர்க்களமாக நடை பெற் றுக் கொண்டிருந்தது. அவனும், அவளும், வேலுவும் திரு விழா பார்க்கச் சென்றிருந்தார்கள்.

''பலூன்...! பலூன்!......ஐஞ்சியம் பலூன்!......பத்சம் வலூன்!......போறுக்கிடையாது! வாழக்காய் பலூன்!... பொழுதுபட்டாக் கிடையாது!......''

''ஐஞ்சியம் தாணை அப்பு பலூன் வாங்க!......'' வேலு பிடிவாதம் பிடிக்கிருன். அவள் அவனைப்பார்க்க, அவன் தனது மடியைப் பார்க்கிருன். அது—

துடைத்துவிட்ட விதவையின் நெற்றியாக பாழிட்டுக் கிடக்கிறது. அவன்முகம் சுருங்குகிறது. ஒரு விநாடிதான். மறுவிநாடி —

''தம்பி இண்டைக்கு வேணும் !... இன்னொரு நாளைக்கு வாங்குவம் நல்ல பலூனை ?...''

''...ம்...ம்... இப்ப வேண்டித்தா !...ம்...ம்...ம்...!''

''இப்ப வேணுமா சரி!... இப்ப உனக்கெதற்கு பலூன்?'

''விளையாட...ம்...ம்!...''

''விளையாடவா... எப்படி விளையாடுவாய்?...''

''கையில வைத்து வேடிக்கை பாப்பன் !...''

''அப்ப அந்த பலூன்களை வேடிக்கை பாரண்டா ராஜா !...''

''அதை எப்படிக் கையில வைத்து விளையாடுவாய் ?...''

''நூலைக் கையில பிடித்திருப்பன்... அப்ப அது மேல பறக்கும்...... நீ வேண்டித்தா ! ...ம்...ம்...ம் !...''—அவன் சிணுங்குகிறான்.

''அட பயித்தியக்காரா !... நூலைக் கையில பிடிக்கிறதுக்காக யாராவது காசைக் கரியாக்குவினமே. அந்த நூலை அந்தப்பெடியன் பிடிச்சிருந்தா என்ன நீ பிடிச்சிருந்தா என்ன... மொத்தத்தில பலூன் மேலதானே பறக்குது... நூலைக் கையில வைச்சிருந்தாலும் இல்லாட்டியும் இருவருக்கும் பலூன் மேலதானே !... இப்ப அந்தப் பெடியனைப் பார்... பலூன் வெடிச்சிட்டுது எண்டு அழுகிறதை... தான் வைச்சிருக்காத பலூன் மேலே வெடிச்சிட்டுது எண்டு இவன் அழுகிறான். யாராவது காசைக் கொடுத்து அழுகையை வேண்டுவினமே !... நீ வா நான் தோளில உன்னை தூக்கி வைக்கிறன்... நாங்க சப்பரம் பாப்பம்... அங்கபார் சாமி சப்பரத்தில எவ்வளவு அழகா வருது எண்டு !...''

—வேலு பலூனை மறத்துவிட்டு சப்பரப்தை வேடிக்கை பார்ப்பதிலீடுபடுகிறான். அவளுக்கு வாய்கொள்ளாச் சிரிப்பு. அவன் அறிவில் பெருமிதம், பொருளாதாரச் சிக்கலைத் தீர்ப்பதில், எந்தப் பொருளியல் அறிஞனும் அவனுக்கு முன் நிற்கமுடியாது.

* * *

''என்னணை அம்மா !... பசி !... பசி !... எண்டிறன் நீ சும்மா இருக்கிறாய் ?...''—அவள் சிந்தனை மீண்டும் சிதறுகிறது.

''நானென்னடா செய்வன் !... வெளியே போய்ப் பாப்பம் ஏதாவது கடன் கிடன் கிடைக்குதாண்டு !...''

—வெளியே நடக்கிறார்கள்.

## 3

பூரண அலங்கார நிலையில் மணப்பெண், கணவனின் கைப்பிடியில் மயங்கிக் கிடப்பதுபோல் காலை மஞ்சள் வெயிலின் தழுவலில் புத்தெழில் பெற்று உறங்கிக் கிடக்கிடக்கின்றது—அந்தப் புத்தம் புதுக் கட்டிடம்!

கட்டிடத்தின் வெளியே தெருச்சுவரோரமாக, நீண்ட பிச்சைக்கார வரிசையொன்று கால்கடுக்க நின்றுகொண்டிருக்கிறது.

நப்பாசை நினைவில் எங்கோ அலைந்து விட்டு அங்கே வருகிறார்கள்—அவளும், மகனும்.

'அந்த வரிசையில் நின்றால் எங்கள் கொதிக்கும் வயிறும் நனையுமோ?...'—அவள் மனம் ஒருகணம் துணுக்குறுகிறது 'எந்த மானுபிமான உணர்வுகளின் எழுச்சியில் அவள் தனது 'மதிப்பை' உயர்த்திக் கொண்டாளோ, அந்த மதிப்பை 'வயிற்றின்'முன் தாழ்த்திக் கொள்வதா?...

மான நரம்புகளின் உயிர் முடிச்சை எதுவோ அசுர பலத்துடன் திருகி எறியும் வேதனை.

மாடிக்கட்டடத்தை 'அண்ணாந்து' பார்த்தாள். விழிகள் உயரத்தை அளந்தன. 'தொண்டை முடிச்சு' வலித்தது.

'அம்மாடி! எந்தளவு உயரம்!...'

'இந்த உயரத்திலிருந்தா... அவர்... விழுந்து... ஐயோ!' நெஞ்சம் நினைவின் 'வலி'யில் அலறுகின்றது. விழிமடல்களின் விழிம்பின் ஓரத்தில் ஈரம் கசிகின்றது.

'கட்டிடம் உருவாக, ஊனை உருக்கி உழைத்தார்... உழைப்பை உண்டு கட்டிடம் உருவாகிவிட்டது? உருவாக்கியவர்...ம் கட்டிடம் அவரைப்'பலி' வாங்கி விட்டதா? தாயைத்தின்னிப் பிள்ளையா, இந்தக் கட்டிடம்!...'

'மனக்கல்'லில் நினைவுகள் பலமாக உரச, நேற்றைய நடப்புகள் உயிர் பெறுகின்றன.

* * *

அன்று வாரக் கூலித் தினம்.

'இண்டைக்கு வாரச் சம்பளக் காசு கொண்டருவார். பாவம் இவ்வளவு நாளும் காசில்லாம வெறும் சோத்தையும், மரவள்ளிக்கிழங்கையும் திண்டு திண்டு அதுகளுக்கும் நாக்கெல்லாம் சுணப்புக் கெட்டுப்போயிருக்கும்!... நாளைக்கு 'நாயிறு' தானே... அவரை நாளைக்கு சின்னக்கடைக்கு அனுப்பி ஆமையானில வாங்கிவரச் சொல்லிக் காய்ச்சிக் கொடுக்கவேணும்!...' என்ற சிந்தனையில் அவள் குடிசையின் வாசலில் நின்று தெருவை விழிகளால் விழுங்கத் தொடங்கி நீண்ட நேரமாகி விட்டது.

தெருவின் நிழலும் நீள நீளத் தொடங்கி... முற்றுகக் கரிந்தும் விட்டது.

ஒன்றின் அசாதாரண வளர்ச்சி, அதன் அழிவின் அபாய விளக்கா?

"தம்பி வேலு!... எனக்கு மனசை என்னமோ செய்யுதடா. ஒருக்கா உன்ர அப்பா வேலை செய்யிற இடத்தில் அவரைப் பாத்துவாறியா?" —என்று மகனை அனுப்பி, அவன் சென்று மறுவீடு மூனையைக் கூடக் கடந்திருக்க மாட்டான். அவள் வீட்டுவாசலிலே வந்து நிற்கிறது ஒரு கார்!

'எங்கட வீட்டுக்கு காரில் வருவது யார்?...'—என்ற வியப்புக் கலந்தபயத்துடன் நிற்க, காரிலிருந்து இறக்கப் படுவது—

"ஐயோ!...என்ர ராசா!... ராசாவுக்கென்ன!...சொல்லுங்கோவன்!... என்ன நடந்தது!..."—என்று அலறுகிருள்.

"கட்டிடத்தில்...மூண்டாவது மாடியில் நிண்டு வேலை செய்துகொண்டிருக்கேக்க, "சாரம்" கழண்டு விழுந்ததில் சீவன்......"

"ஐயோ!...என்ர ராசாவே!..."—மயங்கிச் சாய்கிருள் எல்லாம் முடிந்துவிட்டது!

அவளும், வேலுவும் அனுதையாக, நாலுநாள் அன்னுகாரமின்றி, சோர்ந்துபோய்க் கிடக்கின்ருர்கள்.

"எணை தெய்வானை! நீ இப்படியே கிடந்தா, என்ன பொருள்!... இனி நடக்க வேண்டியதைக் கவனிக்காம!...,"

''நடக்க வேண்டியது இனி என்னக்கா கிடக்கு... எல்லாம் நடந்து முடிஞ்சி போச்சு !...'' விரக்தி, இதழ் பிரிக்கின்றது.

''தெய்வி !... வீணு மனசைப் போட்டு அலட்டிக் கொள்ளாதை !... நீ மட்டுமண்டா இப்படிப் பேசலாம் !... இந்தக் குழந்தையுமொண்டெல்ல இருக்கு !... அதைப் பாத்தியா !... பாவம் !... அதுவும் உன்னோட சேர்ந்து சோறு தண்ணியில்லாம... முகமெல்லாம் வாடிக் கிடக்குது...''

''இப்ப நீ என்னை என்ன செய்யச் சொல்லுறுய் ?...''

''நீ மனசை தளரவிடாத... இனி நீயும் பிள்ளையும் வாழுறதில்லையே !... அவர் வேலை செய்த இடத்தில போய் ஏதாவது கேள் ஏதாவது உதவி செய்வினம்...''

பிள்ளையும், அவளும் அந்த 'முதலாளி'யின் முன் நிற்கிறார்கள்.

''என்ன வேணும் !... .. எங்க வந்தனீங்க !......என்ன வேணும் ?...''

''இங்க வேலை செய்து காலமான...''

''ஓ !... அவன்ர பெஞ்சாதியா ?...''

''நாங்க இப்ப அனதையா !... ஒரு ஆதரவுமற்று இருக்கிறம். நீங்க ஏதாவது உதவி செய்தீங்களெண்டா !...''

''நான் இப்ப வெளிய போறன் !... 'கிளாக்'கிட்ட சொல்லிட்டுப் போறன்கேட்டு வாங்கிக்கிட்டுப் போ !'' அவர் வெளியேறுகிறார்.

''என் கணவனின் உயிர் கேவலம் இதுதானு பெறும்... உண்மை உழைப்பாளியின் உயிர்... இதுதானு ?... இதால நீங்க என்னை மட்டும் அவமானப் படுத்தவில்லை!...''— எங்கள் வர்க்கத்தையே ! தொழிலாள இனத்தையே கேவலப் படுத்திறீங்க !'' அவள் உந்திக் கமலத்தில் உற்பத்தியான பெருந்தீ. எதிரே இருந்த 'கிளாக்'கை சுட்டுப் பொசுக்குகின்றதா ?...

''நான் என்னணை செய்யிறது ! முதலாளி சொல்லுறதைத் தானே செய்ய முடியும் !''

"நான் பிச்சைக்காரியில்லை... தொழிலாளியின் மனைவி... போ !... இந்தப் பணம் முழுவதையும் கொண்டுபோ...... நீயும் உன்ர முதலாளியைப் போன்றவன் தானே !... ஆனா உனக்கும் ஒரு நாளைக்கும் இந்தக் கதிதான் மனசில வைச்சுக் கொள் !... வாடா வேலு போகலாம் !..." —மகனையும் இழுத்துக் கொண்டு புயலாக வெளியேறுகிறாள்.

அந்தக் கட்டிடம் தான் இன்று 'திறப்பு விழா' கொண்டாடுகின்றது.

* * *

"சேச்சே !... இங்கொண்டுமில்லை !... ஏன் இங்க கூட்டம் போடுறீங்க !... போங்க போங்க" — அங்கு வந்த பெரிய 'மனுஷர்' தங்கள் கட்டிடத்தை இந்தக் கும்பல் அசிங்கப் படுத்துவதாக எண்ணினாரோ !

அவள் அவ்விடத்தை விட்டு மெல்ல நகர்ந்தாள். நினைவு மயக்கத்தில் சிறிது தூரம் நடந்தவள், ஏதோ உணர்வில் தன் மகனை நினைத்துத் திரும்பினாள். மகனைக் காணவில்லை.

## 4

'பட் !......படார் !......'

—குழந்தைகள் 'பட்டாசு' சப்தத்தில் தம்மை மறந்து கைகொட்டிச் சிரிக்கின்றார்கள். வீட்டில் விசேஷமென்றால் அதனைப் பரிபூரணமாக அனுபவிப்பவர்கள் சிறுவர்கள் தாமே ! புத்தாடை அணிந்து, கை நிறைய 'பட்டாசு' கொளுத்துவதில் ஏற்படும் மகிழ்ச்சிப் பிரவாகம் அவர்கள் முகங்களில்.

வேலு வேடிக்கையில், அந்த மகிழ்ச்சிச் சிறுவர்களில் தானுமொருவனாக, பசி மறந்து நிற்கிறான்.

"உனக்குப் பட்டாசு வேணுமா ?..."

—வேலு ஆவலுடன் தலையசைக்கிறான்.

"போ !...போய் உன் அப்பாட்ட கேள் !" —ஏமாற்றி விட்ட களிப்பில் சிரிக்கிறார்கள்.

"டேய் ரவி !... பட்டாசுக்கு திரி எரிஞ்சுபோட்டுதடா ;

"அப்படியெண்டா !... புஷ்வாணம் விடுவமடா !......"

"என்னண்டடா?......"

"இந்த வெடி மருந்தை எல்லாம்..... ஒரு இடத்தில் கொட்டிவிட்டு நெருப்பு வைச்சா புஷ்வாணம் மாதிரி அழகா இருக்குமடா!......"—என்றவாறு மருந்தை ஒரு கடதாசியில் கொட்டிவிட்டு, நெருப்புக் குச்சியைக் கிழித்து அதன் அருகே கொண்டு சென்று; பின் தயக்கத்துடன் பின்னிழுக்கிருன்.

'டேய் என்னடா!...... பயமா இருக்காடா!...... நான் கொளுத்தட்டா!"

"வேண்டாம் ரவி!......பொறு...!"—என்றவாறு அவன் வேலுவை நோக்குகிருன்.

"நீ கொளுத்திறியா?..."—வேலு, குழந்தை ஆவலில் தலையசைக்கிருன்.

தெய்வானை வருகிருள்.

'உலகம் நீண்டநாள் இப்படியே இருக்காது. விரைவில மாறத்தான் போகுது......அப்போது வர்க்க வித்தியாசம் இருக்கமாட்டாது... இந்தக் குழந்தைகள் உலகம் போல!...'

வேலு நெருப்புக் குச்சியை நெருப்பருகே கொண்டு போக......மருந்து 'குபீ' ரென்று 'ஜுவாலை'யுடன் பிரகாசமாக எரிந்து, கரிகின்றது.

"ஐயோ!..." என்ற அலறல் தெய்வனையை கலங்க வைக்கிறது நெருப்புச் சுட்ட வேதனையில் வேலு அலறுகிருன்.

அதனையும் வேடிக்கையாக எண்ணி, அந்தப் பணக்கார வீட்டுச் சிறுவன்கள் கைகொட்டி நகைக்கின்ருர்கள்.

'அட ஆண்டவனே!......இந்தக் குழந்தைகளின் நெஞ்சங்களிலுமா இந்த நச்சு எண்ணங்கள்... ஒருத்தன் வேதனையை...துன்பத்தை தனது சந்தோஷமாக கருதுவது...... பெரியவர்களின் பழக்கம் தான் குழந்தைகளிடமும் படிந்து விடுகிறதா?... அல்லது பாரம்பரியமாக இரத்தத்தில் ஊறிக் கிடக்கும் உணர்வுகளா?...' இப்படியே போனல் காலம்...... உலகம் ஒருபோதும் மாறுபடாதே!......அப்படியானல் எங்களுக்கு வாழ்வே கிடையாதா?......'

அவள் நேத்திரங்களில் வழிய, இப்போது இரத்தம் கூட இல்லை.

———

க. நவசோதி

# அன்பின் அணைப்பில்

எங்கும் வெள்ளை வெளே ரென்ற பனித்திரை. வானத்தைத் தொடும் உயர்ந்த மலைகளைக் காண முடியவில்லை. பாதாளம் போன்ற பள்ளத் தாக்குகள் இருந்த இடமே தெரியவில்லை.

காலைக் கதிரவன் அப்பனி மறைப்பின் ஒரு மூலையில் மெல்ல எழுகிறான். தனது சிவந்த கதிர்களை நீட்டி அந் தப் பனித்திரையைக் கிழிக்கிறான். இருந்த இடம் தெரியாமல், பனி எங்கேயோ ஓடி மறைகிறது.

இயற்கையன்னை புத்தாடை புனைந்து புன்முறுவல் பூக்கிறாள்...... எங்கும் பச்சைப் பசேலென்ற தோற்றத்தை வெளிக்காட்டுகின்றன, மலைத்தொடர்கள். அவை- பொன் விளையும் பூமி; ஆமாம், தேயிலைத்தோட்டங்கள். இலங்கைக்குச் செழிப்பை அளிக்கும் செல்வச் சுரங்கங்கள்! அத் தோட்டங்களில் ஒன்றுதான்—'லட்சுமி தோட்டம்.'

லட்சுமி தோட்டத்தின் வளைந்து வளைந்து செல்லும் பாதை பாம்பு போலத் தோன்றியது. அப்பாதையில் ஒரு தொழிலாளர் கூட்டம் சென்று கொண்டிருந்தது. அவர்கள் லட்சுமி தோட்டத்தில் வேலை செய்பவர்கள்.

அதோ அந்தக் கூட்டத்தின் கடைசியிலே, தனித்து தளர்ந்த நடையில் செல்கிருளே, அவள் தான் பார்வதி. அவளுக்கு இரண்டு பிள்ளைகள். அவளுடைய கணவனுகிய சுப்பனுக்கு, நெடுநாட்கள் இவ்வுலகில் வாழப் பலனிருக்க வில்லை. தானுண்டு, தன்பாடுண்டு என்று இருக்கத் தெரியாதவன். ஏனைய தொழிலாளர்களைப் போல அவனும் தொழிலாளர் சங்கத்தின் பெரும் தலைகள் கூறியதைப் போல ஏதோ நன்மைகிடைக்கும் என்ற எண்ணம் அவனை அதில் சேரவைத்தது,

தொழிலாளரின் சம்பள உயர்வுக்காக 'ஸ்றைக்' செய்ய வேண்டும் என்று சங்கத்தில் தீர்மானம் கொண்டு வந்தனர். தொழிலாளர்களின் குடும்பத்தைப்போல தனது 'ஆமா' போட்டுத் தன் சம்மதத்தைத் தெரிவித்தான் சுப்பன். வேலை நிறுத்தம்— தொழிலாளரின் உரிமைப் போராட்டம் ஆரம்பித்தது. முடிவு — மூன்று தொழிலாளரின் உயிர் பலியிடப்பட்டது. பலர் காயத்திற்குள்ளானுர்கள்.

தனது உயிரும் பலியிடப்படுமென சுப்பன் நினைத்தே யிருக்கவில்லை. மக்களைக் காக்கவேண்டிய கனவான்கள்— பொலிஸ்காரர்கள் அவனுயிரைத் தமது துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கினர்.

சுப்பனின் மறைவுக்கும் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனுதாபத் தீர்மானம் பசியைத் தீர்க்குமாளுல் நல்லதுதான். ஆளுல், சுப்பன் அனுதரவாக விட்டுச் சென்ற அவனது மனைவிமக்களின் நீண்ட பசியை அது தீர்க்க வில்லையே.

பார்வதிக்கு விதவை என்ற பட்டத்தை உலகம் அளித்தது. 'அப்பா' என்று அன்புடன் அழைக்க யாரு மற்றவராளுர்கள் இரண்டு குழந்தைகளும்.

லட்சுமி தோட்டத்தில் வேலைக்குச் சென்று கொண்டிருந்த பார்வதியின் முகத்திலே வழமையான மலர்ச்சி இல்லை. அவளுடன் சென்று கொண்டிருந்தவர்கள் அதை அவதானிக்கத் தவறவில்லை. 'இறந்துபோன கணவனின் எண்ணம் வந்து விட்டதாக்கும்' என்று எண்ணி பார்வதியோடு அதிகம் கதைக்காமல் சென்றனர்.

ஆனால், அவர்களிடையே குசுகுசுப்புக் காணப்பட்டது.

பார்வதியிடம் கலகலப்பு இல்லை. அமைதியான நடை. மௌனமாகச் சென்றாள். அவளது உள்ளமோ அவளைப் போட்டுச் சித்திரவதை செய்தது. அன்று அதிகாலையில் நடந்த அந்தச்சம்பவம் எண்ணத் திரையில் மீண்டும் மீண்டும் தோன்றியது அவளது உள்ளத்தைக் கழுகு போல கொத்திக் கொத்திக் குதறியது.

ஒரு கணக்கு அப்பியாசப் புத்தகம் வாங்கப் பதினைந்து சதம் கேட்டான் அண்ணன். லெட்பென்சில் வாங்கப் பத்துச் சதம் கேட்டாள் தங்கை. 'காசு தரா விட்டால் பள்ளிக்குப்போக முடியாது மாஸ்ரர் அடிப்பார்' என்று காசு தரும்படி விடாப் பிடியாய் நின்றனர், இருவரும். பார்வதிக்கு அவர்களின் கரைச்சல் பொறுக்க முடியவில்லை. மூன்று பேரின் மூன்று நேரக் கஞ்சிக்காகப் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கும் அவளால் அந்த நிலையில் என்ன செய்ய முடியும்!

அவளிடம் இப்போது பணம் என்று இருந்தது இரண்டு ரூபாய் மூன்று சதம் தான். அதில் இரண்டு ரூபாய் அடுத்த லயத்திலிருக்கும் மாரிமுத்துவுக்குக் கொடுக்க வேண்டிய கடன் காசு. அந்த மாரிமுத்துவின் நச்சரிப்பை இன்னும் பொறுக்க முடியாது இன்றே கொடுத்துவிட வேண்டும்.

அவள் அவசரமாகப் புறப்படும் நேரத்தில் பிள்ளைகள் காசு கேட்டுச் சிணுங்கியதைப் பார்வதியால் பொறுக்க முடியவில்லை.

"காலங்காத்தாலே யாரிடம் போய்க் கடன் கேட்க நாளைக்குத், தர்ரேன், போங்கடா பேசாமே" என்று எரிந்து விழுந்தாள். அவர்களோ போவதாக இல்லை. விடாப் பிடியாய் நின்றனர்.

தோட்டத்திலே வேலை தொடங்குவதற்கு சங்கு ஊதியது.

"பார்வதீ வேலைக்கு வல்லியா"—அடுத்த வீட்டுத் தங்கம்மாவின் குரல் காதுகளில் ஒலித்தது.

"நீ வச்சிக்கிற காசைக் கொடேன் ஆயா"—வெடுக்கென்று கேட்டான் பையன்.

பார்வதிக்குப் பொத்தென்று கிளம்பியது ஆத்திரம். அந்த ஆத்திரத்தில் அவள் பத்திரகாளியானாள்.

சொருகியிருந்த அகப்பையை விருக்கென்று இழுத்தெடுத்தாள். இருவருக்கும் தாறுமாறாக அடித்தாள். துடிக்கத் துடிக்க அடித்தாள். அகப்பை முறிந்துவிட்டது. அவளின் ஆத்திரமோ அடங்கவில்லை. இரண்டு கைகளாலும் மாறி அடித்தாள். ஆத்திரம் தீருமட்டும் அடித்து ஓய்ந்தாள்.

பையனின் உடம்பெங்கும் காயத் தழும்புகள், முருங்கைக் காய்போல வீங்கிக் கிடந்தன. இளையவளின் முகம் 'பொம்' என்று வீங்கி விட்டது. ''போய்த் தொலைங்க பள்ளிக்கு''—பார்வதி சீறினாள்.

அண்ணன், தங்கையின் தோள்களில் கையைப் படர்த்தி அணைத்துக் கொண்டே லயத்தின் படியில் இறங்கினான். அப்போது அவனுக்கு அவனது தந்தையின் ரோசம் வந்ததோ என்னவோ! திடீரென்று பின்னே திரும்பித் தாயை முறைத்துப் பார்த்தான்.

''நீ கூடாத அம்மா''—விம்மலுக்கும் பொருமலுக்குமிடையே சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தான்.

பார்வதியின் ஆத்திரம் அடங்கி அழுகையாக மாறிற்று. கண்ணீர் மல்க, தான் பெற்ற செல்வங்கள் கதறலும் கண்ணீருமாக கைகோத்துச் செல்வதைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

தனக்கேற்பட்ட துயரத்தை ஓரளவு அடக்கிக் கொண்டான் பையன்—அவன் ஆண் குழந்தைதானே! ஆனால் தங்கை அழுது கொண்டே மலைச்சரிவில் இறங்கிச் சென்றாள். அவளது விம்மல் ஒலி அவள் வெகுதூரம் போகுமட்டும் பார்வதியின் காதில் கேட்டுக்கொண்டேயிருந்தது. தாயின் நினைவு தன் பிள்ளைகளுடனே சென்றுகொண்டே இருந்தது.

தோட்டத்தில் வேலை செய்யக் கூடிய நிலையில் அவள் இல்லை அவளது மனம் வெடித்துச் சுக்கு நூறாகிச் சிதறிக் கிடந்தது. ஆயினும் என்ன செய்வது. வேலைக்குப் போகாவிடிலோ ஒரு நாள் பட்டினி கிடக்க வேண்டியதுதான். மனதிலே போராட்டம். உடலிலே சோர்வு. இவற்றைக் காட்டியது அவளது நடை.

மூன்று நேரக் கஞ்சியை எதிர்பார்க்கும் ஒருசாண் வயிற்றுக்கும், பாசவெள்ளத்தினுள் என்றோ அமிழ்ந்து போன உள்ளத்துக்குமிடையில் போராட்டம் ஓயாத போராட்டம்!

அவளது நடை தளர்ந்தது;

போராட்டம் வலுத்தது; நடை இன்னும் தளர்ந்தது;

ஈற்றில்......

போராட்டம் முடிந்தது; ஒரு சாண் வயிறுசெத்து மடிந்தது!

நின்றுள்!—திரும்பி விட்டாள்!

இப்பொழுது அவள் நடக்கவில்லை! ஒரே ஓட்டமாக ஓடினுள்!

குடிசையை நோக்கி அல்ல.

அதை அவள் தாண்டிவந்துவிட்டாள். பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடினுள். ஒருநாள் பட்டினி கிடக்கவேண்டுமேஎன்ற எண்ணத்தை மறந்து ஓடினுள்—இல்லை! அந்த எண்ணத்தைக் காலால் மிதித்துச் சிதைத்துக் கொண்டே ஓடினுள்.

பள்ளிக்கூடத்தை அடைந்த பார்வதி வாசலிலே அப்படியே நின்று விட்டாள் மாணவர்கள் வரிசையாக நின்று தேவாரம் பாடிக்கொண்டிருந்தனர்.

''அம்மையே அப்பா, ஒப்பிலா மணியே, அன்பினில் விளைந்த ஆரமுதே......''—அந்த அமைதியான சூழ்நிலையில் அந்தத் திருவாசகம் அவளை உருக வைத்தது. தட்டியின் இடுச்கு வழியே எட்டிப்பார்த்தாள்—

அவளது மகன் முருகன்—பச்கத்தில் மகள் வள்ளி அந்த முகங்களில் இன்னும் கண்ணீர் காயவில்லை. கைகூப்பி, கண் மூடி மாணவர் வரிசையில் நின்று பாடிக் கொண்டிருந்தனர். முருகனின் கணீரென்ற குரல் அங்கு தெளிவாக ஒலித்தது,

பார்வதியின் கண்களில் நீர் திரண்டது. கைகள் கூம்பின. ''அன்பினில் விளைந்த ஆரமுதே......'' ஆசிரியர் திருப்பித் திருப்பி அதைச் சொல்லிக் கொடுத்தார். அந்தத் தொடர், அவளது உள்ளத்தைக் கசக்கிப் பிழிந்தது. 'ஓ' வென்று அழவேண்டும் போலிருந்தது பார்வதிக்கு. அழுகையை அடக்கிக் கொண்டாள்.

தேவாரம் முடிந்ததும் "கடவுளே! ஆசிரியர் கொப்பி யும் பென்சிலும் கொண்டு வராததுக்காக என் குழந்தை களை அடிக்காமல் பார்த்துக் கொள்" என்று பார்வதி வேண் டிக்கொண்டாள். ஆசிரியர் முன் செல்ல அவளுக்கு மனம் துணியவில்லை.

குழந்தைகளை எப்படி ஆற்றுவது, அவர்களின் காயங்களை எப்படிப் பார்ப்பது? தட்டியின் மறைவிலேயே நின்று விட்டாள். சற்றுநேரம்--பின் என்ன தோன்றியதோ, தட் டியின் இடுக்கு வழியே பார்வையைச் செலுத்தினாள். அவள் அங்கே கண்டது--ஆசிரியர் முருகனை அணைத்து அவனின் முதுகுக் காயத்துக்கு மருந்து பூசிக்கொண்டிருந்தார் நீண்ட பெருமூச்சு --ஆசிரியரின் உருவத்தில் இறைவனையே கண் டாள் பார்வதி

"ஏண்டா! உன் அப்பன் செத்த பிறகு உன் அம்மா வுக்கு என்ன வெறியா வந்திருக்கு?"--ஆசிரியரின் வார்த் தைகள் அம்பாக வந்து காதைத் துளைத்து உள்ளத்தில் தைத் தது. இனி அவளால் அங்கு நிற்க முடியாது. நின்றால் அவளது உள்ளம் வெடித்துச் சுக்கு நூறாகிவிடும். குடி சையை நோக்கி ஓடினாள். துயர வெள்ளத்தைத் தாங்கிக் கொண்டு ஓடினாள்.

வெள்ளத்தின் பாய்ச்சல் அணையை உடைத்து விட்டது.

குடிசையுள் குப்புற விழுந்து குமுறிக் குமுறி அழுதாள்!

சூரியன் தலைக்குமேல் வந்து ஒரு மணித்தியாலமாகி விட்டது. லயத்தின் வாசலில் நின்றுகொண்டிருந்தாள், பார்வதி. அவளது உள்ளத்திலே உவகை; முகத்திலே மலர்ச்சி. பாடசாலையிலிருந்து கைகோத்துக் கொண்டு வரும் தன் குழந்தைகளை நோக்கி விரித்த கைகளுடன் ஓடி னாள். இருவரையும் இரண்டு கைகளுள்ளும் அணைத்துக் கொண்டு, குடிசைக்குள் நுழைந்தாள். மாறி மாறி இருவ ருக்கும் முத்தங்கள் சொரிந்தாள்.

"அம்மா எங்க மாஸ்ரர், நல்லவரு"--முருகன் பேசினான். பார்வதி ஊமையாகி விட்டாள்.

"எங்க மாஸ்ரர், எனக்குக் கொப்பியும் தங்கச்சிக்கு லெப்பென்சிலும் வாங்கிக் கொடுத்தாரு"--பார்வதி இப்

பொழுதும் பேசவில்லை. தன் இரு குழந்தைகளையும் மார் போடு அணைத்துக்கொண்டு கண்ணீர் சொரிந்தாள்,

தான் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி அவள் உள்ளம் மன்றாடியது.

''ஏ...மா அழகுறே''--பெற்றெடுத்த தாயின் கண்ணீர் வள்ளியின் உள்ளத்தை உருக்கியது.

''ஐயோ, கண்ணே''---பார்வதி அலறியே விட்டாள்.

தன் இரு குழந்தைகளுக்கும் தான் உண்டாக்கிய காயத் தழும்புகளில் மாறி மாறி முத்தமாரி பொழிந்தாள். பாச வெள்ளம் பாய்ந்தோடியது. அதைவிட மாற்று மருந்து வேறு எதையுமே அவளால் கொடுக்க முடியவில்லை.

'உங்க ரெண்ணு பேரையும் காலேலே நன்ஞ அடிச்சுட் டேன். என்னை மன்னிச்சுக்கோங்க''--தாயின் கண்ணீரைத் துடைத்தாள் வள்ளி.

''அம்மா! அண்ணனும் நானும் பணிஸ் வைச்சிருக் கோம், நாம் மூனுபேருஞ் சாப்பிடுவோம்''---வள்ளி பேப் பரில் சுற்றியிருந்த பணிசை வெளியே எடுத்தாள்.

குழந்தைகளை இறுக அணைத்தாள் பார்வதி. வேலைக்கு போகாததால் அன்றைய கூலி தனக்கு இல்லை என்பதை அந்த நிலையில் அவளால் எப்படி உணர முடியும்?

அதை உணரமுடியாமலாக்கி விட்டது-அவளின் பாசம்!

அதை அழித்துவிட்டது---அவளின் அன்பு!

அன்பின் அணைப்பில் துன்பம் ஏது!

---

செல்வ பத்மநாதன்

# அசைவு

நான் குதி பிடரியில் அடிக்கும் நிலையை அடைகிறேன். ''கலஹா'' பஸ்ஸின் சக்கரங்கள் சுழன்று நகர்வதை எனது கண்கள் கண்டுவிட்டன என்னுள் ஊடுருவி நின்ற பரபரப்பும் சற்று பதுக்க மடைய ஆரம்பிக்கிறது. சுழலும் சக்கரத்தின் வேகம் தாழ்ந்திருந்ததால், அது எனக்கு ஏமாற்றத்தை அளிக்கத் தவறுகிறது.

பாய்ந்து ஏறிய எனக்கு நடுவில் காணப்பட்ட ஒரு வெறும் ''சீட்'' தன்னிடம் என்னை அமருமாறு வெற்றுப் புன்னகை பரப்பிய வண்ண மிருக்கிறது—என் முகத்தில் சிறிது மகிழ்ச்சியின் மலர்ச்சி துளிர் விட்டுச் செல்கிறது. பஸ்ஸின் சக்கரங்கள் விரைவாகச் சுழலுவது போன்ற உணர்வு— கரையோரமாக இருந்த என்னை வெளியிற் தெரியும் காட்சிகள் கவர்ந்து தன்னுள் சேர்க்க முனைகிறது. இதனால் என் கண்களும் வெளியிற் தெரியும் காட்சிகளில் சுழலும் நிலையுள் தவித்துப் பாய்கிறது.

என் தலையில் சற்று நகர்வு— மறு கரைச் சாளர வழிக்கு ஊடாக சுழலும் கண்கள் நுழைகின்றன.

அங்கு— சுழற்சி நிலையுள் நிற்கும் காற்ருடி ஒன்று அதைத் தன்னுள் ஈர்க்கிறது. அதில் சிறிது நேரம் லயித்து இருந்த கண்களைக் காற்ருடி தன்னைப் பிடித்திருந்த கையினுடாக, அதற்குச் சொந்தமான முகத்திற்கு இழுக்கிறது.

அப்பிஞ்சு முகத்தில் ஒருவித குதூகலம் நிறைந்த உணர்ச்சி. என் உள்ளத்தினுள்ளும் அது நெகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. குழந்தையின் முகத்தைக் வெகு குறு குறுப்பாக உள் நோக்குகிறேன்.

குழந்தையையும் அந்தக் காற்ருடியையும் திரும்பத் திரும்ப மாறி மாறிப்பார்த்த வண்ண மிருக்கிறேன். குழந்தையின் முகமும், காற்ருடியும்-- அதன் சுழற்சியும் எனது எண்ணத்தைச் சுழற்ற-

காற்ருடி விரைவாகச் சுழலுகின்றது- குழந்தையின் குதூகலமும் சுழலும் காற்ருடியைப்போல நகர்ந்த வண்ண மிருப்பதை நான் காண்பது போன்ற பிரமை- என்னை அதிலிருந்து விலக்கி மீண்டும் குழந்தை விளையாடுவதைப் பார்ப்பதற்கு ஏதோ ஒருவித துடிப்பு நரம்புகளுடாகப் பரவுகிறது.

குழந்தையின் உணர்ச்சியின் வேக அதிகரிப்பு அதன் வாயில் நெழிவை ஏற்படுத்தித் திக்கித் திணறிய வார்த்தைகளாகச் சில வெளிவர ஆரம்பிக்கின்றன.

''யம்மா, னேக்கு இம்பிட்டு பேந்தும் காத்தாட்டி வாங்கிட்டு வந்து தாறியா ?''

குழந்தை காற்ருடி சுற்றும் மகிழ்ச்சினூடே- அவ்வித மகிழ்ச்சியில் தானும் இன்புற்றுத் தன்னை மறந்த நிலையில் இருந்த தாயை அப் பேச்சுத் தன்னுள் ஈடுபடுத்துகின்றது.

''மறு முறை வாறப்போ சல்லி கிடைச்சேண்ணுநெசமா கண்ணுக்கு வாங்கிட்டு வந்து தருவேண்டா; இம் முட்டுயேன் ஒடம்புலே சக்தி கெடக்கிற மட்டும் ஒழைச்சு நீ கேக்கிறை யெல்லாம் வாங்கிட்டு வந்து தருவேண்டா''

அவள் தன் கையை நீட்டிக் காற்ருடியைச் சுற்றி விட்டு குழந்தை உள்ளுக்கு இழுத்திருந்த கையையும் சாளரத்தின் வெளியே பிடித்து விடுகின்ருள்.—மீண்டும் காற்ருடி சுழன்ற

வண்ணமிருக்கிறது. குழந்தையின் முகத்தில் குதூகல உணர்ச்சி தொடர்ந்தும் இழையிட்டு நகர ஆரம்பிக்கிறது. தாயின் உள்ளமும் பூரித்து—முகத்தின் உள்விட்டு விரிகிறது. அதன் மூலம் அவளும் தன் மகிழ்ச்சிச் சக்கரத்தை கண்க ளால் நகர்த்த முனைகிருள். அந்த இரு உள்ளங்களின் மகிழ்ச்சிச் சக்கரங்களும் காற்ருடியுடன் போட்டியிட்ட வண்ணம் சுழல ஆரம்பித்து விடுகின்றன.

சரியான நெரிசல் இருந்ததிஞல் பஸ்ஸும் கன வேகத் தில் நகர்ந்து சென்று கொண்டிருக்கிறது. அதற்கேற்ப காற்ருடியும் விரைவுடன் சுழல ஆரம்பித்து விடுகிறது. ஆஞல்......

இருந்தாற் போல் அந்த இரு முகங்களிலும் திடீர் மாற்றம்—மகிழ்ச்சிச் சக்கரம் வேகம் தாழ்ந்து விடுகிறது.

குழந்தை தாயின் மடியிலிருந்து மெல்ல எழுகிறது. அது எழுந்த வண்ணம் ஏக்கங் கலந்த முகத்தையும் தன் கைகளையும் வெளியே விட்டபடி நிற்கிறது. ஒரு விதவெறித்த வெறுப்பின் சாயல் முகத்தில் படிவு கொள்கிறது. இடைக் கிடை தாயின் முகத்தையும் திரும்பிப் பார்க்கிறது.

எனது கவனம் மிக உன்னிப்பாய் அங்கு விழ, அதன் கை வெறுமையாகத் தொங்குகிறது; அதன் முகம்—முன் பிருந்த உணர்ச்சியை இழந்து வெளுறிய முகமாகக் காட்சி யளிக்கிறது.

குழந்தையின் முகக்குறிப்பில் நிறைந்திருந்தது ஏமாற் றம்.—வீடு சென்று விளையாடுவதை யிட்டுக் கட்டிய கற்ப னைக் கோட்டை; எல்லாம், இந்தச் சொற்ப நேரத்திற் குள் கை விட்டுச் சென்றதையிட்டு அதன் மனதில்; எழும் ஏமாற்றக் கோலங்களை—என்ஞல் உணர முடிகின்றது.

அவை அதன் வாயிலிருந்து வார்த்தைகளாக உதிரா விடினும் முகத்தின் பாவனைகளும், நெளிவு, சுழிவுகளும் மனதின் நிலையை அப்படியே அப்பட்ட மாகப் பறை சாற் றிய வண்ணம் இருக்கின்றன—குழந்தையின் பார்வையில் முன்பிருந்த மகிழ்ச்சிக்குப் பதிலாக ஒருவித அதீதமான ஏமாற்ற உணர்ச்சி—அதனிடையே தனக்குள் தானே தாழ்வு கொண்டு புழுங்குவது போன்ற ஒருவகை முகத்தின் சுருக்குகள்--அந்தப் பால் தளம்பிய சொக்குகளில்.

அது என்னை வேறொரு திசைக்குத் திருப்ப முனைந்து விட்டது--

பார்வைக்கு –

இந்தியத் தோட்டத் தொழிலாளத் தாயின் உதரத்தினின்றும் உதித்த அந்த உருவம்; அந்தத்தாயின் முக மலர்ச்சி மாறி அதன் வழியாக வந்த, இரக்கத்தின் அடியிற் பிறந்த கழிவிரக்கப் பார்வை அப்பார்வையை அளித்த அவளது கண்களினூடே கலங்கிய நீர் துளிர்க்கிறது. துளிர்த்த அந்த நீர் கண் மலர்களை கவலை என்னும் திரையை அதன் முன் விழுத்தி மறைக்கிறது.

அதற்கும் அதை நீடிக்க விருப்பமில்லைப் போலும். திரையிடப்பட்ட அந் நீர்ச் சிதறலினூடே அவளது பார்வை ஊடுருவிப் பாயமுனைகிறது. அதனால் தட்டுண்ட, ஒன்று சேர்ந்த துளியொன்று மண்ணிறமாகத் தோற்றமளிக்கும் அவளது சேலையைச் சிறு பொட்டாக நனைக்கிறது. இதனால் உண்மை நிறத்தை மூடி மண்ணிறமாகத் தெரிந்த அந்தச் சேலையில் பொட்டாக விழுந்த இடத்தை முந்திய நிறத்திற்கு இயன்றளவு –இல்லை பொட்டளவாவது கொண்டு வர முனைந்து அதிற் சிறு வெற்றியும் பெற்று விட்டது--அத்துளி. அதே போன்று அவள் கண்களும் சிறிதளவாவது முந்திய மகிழ்ச்சி நிலையை அடைந்து காணப்படுகின்றன. அதனூடாகச் சில சொற்கள் குழந்தையைப் பார்த்தபடியே தனக்கே உரிய சிறு தளர்ச்சியுடன் வெளி வருகின்றன.

"நாமள் மறுமுறே இங்கிட்டு வர்றேக்கை உங்கிட்டே இருந்ததைவிட நல்லொண்ணு காத்தாட்டி வாங்கிட்டு வந்து தாறேன்டா" என்ற அவளது தளதளத்த குரலே குழந்தையையும் பேசவைக்கிறது.

"யெம்மா, னேக்கு தோட்டங்கிட்டேப் போயிட்டதும் மிட்டாயி வாங்கிக்க சல்லி கொஞ்சம் தாரியாணே"

இவர்கள் எண்ணங்களைக் குழப்புவதுபோல "கண்டக்டர்" அங்கு வந்து சேர்கின்றான். வந்ததில் ஓர் அவசரம்--- அவன் வாய் கேட்கிறது–சிங்களத்தில் ;

"கொ காட்டதே" எனப் போகும் இடம் வினவ. அவளும் தனக்குத் தெரிந்த அந்த மொழியில் ;

"கலஹாட்டத எக்காய் மாருய்" எனக் கூறுகிருள். பணமுஞ்-சீட்டும் கைமாறப்பட்டது. அதைத் தொடர்ந்து கண்டக்டரின் வாய் சற்று மெதுவாக ஒலிக்கிறது-அவனது அவசரமும் சிறிது தணிகின்றது. "சத்த பஹக்க இத்துறு சல்லினே" என ஐந்து சதம் மிச்சந்தர இல்லையென்று மெல்லிய குரலில் கீச்சிடுகிருன்.

மிச்சப்பணத்திற்காகக் காத்து அவன் முகத்தைப் பார்த்திருந்த அத்தாயின் முகத்தில் ஏமாற்றத்தின் சாயழு தழையிடுகிறது.

எனக்குள்ளேயே இதைப்பற்றிய யோசனை இழையிட்டு ஓடுகிறது--

"இவன்கள் இப்படி இப்படி ஐந்து சதம் இரண்டு சதம் எனச்சேர்த்து தங்களுக்குள்ளேயே ஒரு சம்பாத்தியம் வைத்திடுவான்கள் போலே இருக்குதே. இதைப்போல எத்தனை ஏழைத்தாய்களிடம் இவ்வாறு மிச்சந்தரச் சில்லறையில்லையென்று, அதையெல்லாம் சேர்த்துச் சேர்த்து ஏப்பம் விட்டிருப்பார்கள். ஆனல் அதற்கு மாருய் அவர்கள் சேர்க்கும் பணத்தில் குறைந்தால்-- அவர்கள்தானே போடவேணும். அது- அவர்கள் கடமையில் சரிவரக் கவன மில்லாததால் ஏற்படும் பிழையல்லவா ?

முந்திய மாதிரிச் செய்வதானல்......?'

இந்தத் தாய்க்கு, அந்த ஐந்து சதம் இருந்திருந்தால் அவள் ; தன் குழந்தையிடம் அதைக் கொடுத்துத் தாக்காட்டியிருக்கலாம். அதன் கவலையை மாற்றி அவற்றை வேறு வழிகளிற் திருப்பி இருக்கலாம். அதற்கும் மிட்டாய் வாங்கப்பணம்கிடைக்கும். அதனல்அதுமகிழ்ச்சி அடைய நேரிடும்அதுதான் கேட்டதிலும் சிறிது நேரம் முந்தியே பணம் கிடைத்து விட்டது என்பதாலும் ஒரு வித இரட்டிப்பு மகிழ்ச்சியை அடையும். பின்பு மிட்டாய் வாங்கியதும்-- அதைத்தின்பதால் ; தின்னும் போதுள்ள மகிழ்ச்சியுடன் நெடுநேரம் அப்பணத்தைத் தன்னிடம் வைத்திருக்கும் போது, அது தனக்குள்ளேயே ஒரு சிறு மனக்கோட்டை கட்டியெழுப்பி அதை எண்ணி எண்ணி தனக்குள் மகிழலாம்,

மிச்சப்பணமின்றி ஏமாற்றப்பட்டதாயின் முகத்தில் கருமை பரவுகின்றது. அதனூடாகச் சில கவலைக்குறிகள் இமையோடிக்கருவிழியுள் புகுதற்கு எண்ணுகிறது. இதனால் அவள் விழிகள் இரண்டும் அங்கு மிங்கு மாய் விரைந்து நகர்கின்றன,

தாயின் பார்வை மகனின் பக்கந் திரும்புகிறது. அவள் மனம் என்னென்னவோ தோற்றமெல்லாம் சொல்ல எண்ணுவதை முகம் வெளிப்படுத்துகிறது. ஆனால் வாய் வார்த்தைகளாக அவற்றை வெளிவிட மறுக்கிறது.

அதைக் கையாவது தன் செய்கையால் செய்வமா— விடுவமா என்ற இருதலைக்குள் இருந்து விடுபட்டு ஒருமுடிவுக்கு வந்தது போன்று தன் ஸ்பரிசத்தால் குழந்தையின் முகத்தைத் தடவிக் கொடுக்கிறது.

நெற்றி சுருங்குகிறது—எதையோ கண்டு பிடித்து நினைத்து விட்டவள் போல முகத்தோற்றம் பொலிகின்றது. அதைத் தொடர்ந்து அவள் நினைப்பும் கையும் ஒருங்கு சேர்ந்து செயல்பட விழைகின்றன.

குழந்தையைத் தடவிக் கொடுத்த கை—அதன் இடையிலிருந்து தன் இடையைத் துழாவுகின்றது. இடுப்புச் சேலையில் கோணியாகக் கட்டப்பட்ட "மடி" விரிக்கப் பட்டு விட்டது. அதன் மடிப்புளிருந்த "கொட்டப் பெட்டியை" எடுத்துத் திறக்கிறாள். அதனுள் தன் இரு விரலினால் தேடித் தடவி பழைய ஒரு சத நாணயம் ஒன்றை எடுக்கிறாள்; அது பின்பு அக்குழந்தையின் குஞ்சுக் கைக்குள் திணிக்கப்படுகிறது.

அவள் அதை எடுப்பதற்கு உற்ற தயக்கம்—தாமதம், அதன் தோற்றம்—ஒரு சத செம்புக் காசு துருப்பிடித்து கருமை கொண்டு காணப்படுகிறது. ஊரில் "கொட்டப் பட்டி திட்டாமல்" ஒரு சதமாவது அதற்குள் போட்டு வைக்காவிடில் தம்மிடம் பணம் வந்து தங்குவது குறைந்து விடும் என்ற நம்பிக்கை; வெற்று நிலையை அது அடைந்தால் அதன் விளைவை எண்ணி அங்குள்ளவர்கள் பேசுவது —என் நினைவிற்குள் புகுந்து விடுகிறது.—இந்தத் தாயும் அத்தகைய மனப்போராட்டத்தின் முடிவில் செய்தது—.

காசைப் பெற்றவுடன் குவிந்த, குழந்தையின் குஞ்சுக் கைகள்—பொத்திப் பிடித்து அதிக நேரம் வைத்திருக்க முடியாதபடி அகலத் திறக்கச் செய்கிறது—அந்தப் பழைய ஒரு சத நாணயம்.

முகத்தோடு அந்தப் பாற்சொக்கையினூடே இழைந்து, அதனைச் சிவப்பேற்றிக் காட்டிய கவலையின் ரேகைகள் மெது மெதுவாக அழிந்து சிதைய ஆரம்பித்துவிடுகின்றன. கவலையால் சுருங்கிய அந்த முகம்—அடிமரத்தின் விரிந்த பட்டைபோல் சற்றுத் துலக்கமாகத் தெரிய ஆரம்பிக்கிறது.

விரிந்த கையிலிருந்த அந்த நாணயத்தை மற்றக் குஞ்சுக்கை தனது மூன்று விரல்களாலும் குவித்து எடுத்துக் கண்ணின் முன் பிடிக்கின்றது. கண் மகிழ்ச்சியைத் தெரிவிக்க மெதுவாக நகர்ந்து சுழல ஆரம்பித்து விட்டது. தாயும் குழந்தையின் கண்களைப் பார்த்து சிறிது வெண் திரையிட்டது போன்ற புன்னகையுடன் தன் கண்களையும் சுழற்றுகிறாள். இருவரின் மகிழ்ச்சிக் கண்களும் குத்திட்டு ஒன்றையொன்று ஏறிட்டு நோக்குதற்கு முயற்சி எடுக்கின்றன—குழந்தை இடம் வலமாகச் சுற்றியபடி பின்னால் தன் கழுத்தை முறித்து கரையாக இருந்த என்னைப் பார்க்கிறது. அதன் பிஞ்சு இதழ்களிடையே குறுநகை மயிரிழையாக ஓடுகிறது தன் மகிழ்ச்சியை அங்கிருந்த பலருக்கும் வெளிக்காட்ட நினைத்திருக்க வேண்டும். நானும் பதிலுக்கு ஒன்றை அதற்கு அளிக்கிறேன்!

ஆனால் ஒன்றுமட்டும் உண்மை குழந்தை மாத்திரம் திரும்பவும் முன்பிருந்த நிலையை அடைந்திருக்கிறது.

குழந்தையின் உள்ளக் கோட்டை உயர்ந்து வளர்கிறது மார்பினடியில் இருந்த குஞ்சுக் கைகளும் வாயளவுக்கு உயர்கிறது, அதிலிருந்த--துருப்பிடித்த நாணயம் அதன் வாயுள் நுழைகிறது. குழந்தை அந்த நாணயத்தை உமியும் சத்தத்தை மெதுவாகக்கேட்கிறேன். உமிழ் நீரைக் கடைவாயால் சிந்தச் செய்கிறது—அந்த ஒரு சதம்! மீண்டும் காசு கையை அடைகிறது. ஆனால் சிறிது மினுக்குடன் அது காணப்படுகிறது! வாயிலும் உயர்ந்த இடத்தை அடைய விழைகின்றதாக்கும். 'பஸ்' சாளரத்தின் கீழ்ச்

சட்டத்தை அதற்கேற்றதாகத் தேர்ந்தெடுக்கிறது. அச் சட்டத்தில் வைத்தபடி நாணயம் சுழற்றப்படுகிறது. அதற்கும் குழந்தையின் கை துணைநிற்கிறது.

சுழன்று நகர்கிறது அந்த நாணயம்; சாளரக் கதவின் பீலியை அணுகியதும் அதனுள் சென்று ஒளிந்து கொள்கின்றது. குழந்தை எழுந்து அதனுள் பார்வையைச் செலுத்தி--இரண்டாந்தரமும், மூன்றாந்தரமும் முயற்சிக்கிறது. அதன் உள்ளக்கோட்டையும் நெஞ்சின் அடியில் அசைந்து சென்று ஒளிந்து கொள்கிறது. மறுபடியும் ஏக்கம்—

குழந்தை தாயின் முகத்தைப் பார்க்கிறது--தாயின் முகமும் குனிந்து அதை நோக்குகிறது. அந்தக் குஞ்சுக் கைகள் அவளின் மடியைத் தடவுகின்றன.

செங்கை ஆழியான்

# சாதி

பொழுது 'பல பல' வென்று விடிந்து நிலம் வெளுக்க முன்னமே, சாக்குக்கட்டிலை உதறிச் சுவரோடு சாற்றிவைத்து விட்டு, வீட்டிற்கு வெளியே வந்தார், கந்தர், இரவு மழை பெய்திருந்ததால் நிலத்தில் ஊறியிருந்தது, நீர், மண்ணில் கால்கள் பதிந்ததும், 'சில்' லென்று குளிர் உச்சிக்கு ஏறியது.

வாசலில் படுத்திருந்த நாய், எசமானனைக் கண்டதும் எழுந்து, உடலை உதறிப் பின்னுடல் வளையக் கூடிய விதமாக வாலை ஆட்டியபடி அவருக்குப் பின்னால் ஓடிவந்தது.

''சீ... மூதேசி...!''

கால்களுக்குள் ஓடிவந்த நாயை, ஒரு உதை உதைத்துத் துரத்திவிட்டு, வெளிப்படலையைத் திறந்து கொண்டு, வீதிக்கு வந்தார்.

இரவு பெய்த மழையினால் தார்வீதி நன்கு கழுவப்பட்டு கருநாவற்பழ முகமாகப் பளபளக்க, கற்கள் விலகிய சிறு கிடங்குகளில் மழை நீர் தேங்கி, பருக்கள் வெடித்த முகமாகக் காட்சிதந்தது.

பனி மூட்டம் இன்னும் நன்கு கலையவில்லை.

அங்கொன்று மிங்கொன்றுமாக வீதியின் கரைகளில் நின்றிருந்த நாய்கள் ஒன்றையொன்று பார்த்துக் குரைத்துக் கொண்டிருந்தன.

'சாப்பாட்டுக்கு வழியில்லாட்டியும், வீட்டுக்கு ஒவ்வொரு நாய் வளக்க மட்டும் எங்கடை சனங்கள் தவற மாட்டினம்! என்று கந்தர் எண்ணிக்கொண்டார்; பாவங்கள்... பிழைச்சுப்போகட்டும்!' என்ற இரக்கவுணர்வும் கூடவே எழுந்தது.

உடலைச் சில்லிடவைத்த காற்றின் தாக்கத்திலிருந்து விலக வெண்ணித் தனது துப்பட்டியால் உடலை இறுக்கமாகப் போர்த்துக் கொண்டதோடு, மடியில் இருந்த சுறுட்டொன்றை எடுத்துப் பற்ற வைத்தும் கொண்டார்.

அவரால் நன்கு விடிந்து, வெய்யில் காயுமட்டும் படுக்கையில் கிடக்க முடிவதில்லை. அவருடைய மூத்தமகன்--இருபத்தைந்து வயது இளந்தாரி--சூரியன் கிழக்கே, ஆல மரத்துக்கு மேலாக எழுந்த பின்புதான் படுக்கையை உதறுவான். அதுவும் தாய்க்கிழவி போடுகிற சத்தத்தைப் பொறுக்கமுடியாமல் எழும்புவான்,

அதிகாலையில் எழுந்து பாளைக்கத்திகளைத் தீட்டி, தளநாரையும், முட்டிகளையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டால்தான், வெய்யில் காய்கிறதிற்குள் ஆறேழு தென்னைகளில் ஏறி இறங்கமுடியும். கந்தருக்கு வயது அறுபது அறுபத்தைந்தைக் கடந்து கொண்டிருந்தபோதிலும் அவருடைய உடல் வைரம் பாய்ந்தது. வேலை செய்து, வேலை செய்து, எட்டுப்பேர்களைக் கொண்ட குடும்பத்தைக் காப்பாற்ற அவர் ஒருவராகவே கஷ்டப்பட்டு, தொழிலின் தழும்புகளை மார்பில் பெற்றதுபோல, வாழ்க்கையின் ஏற்றவிறக்க அனுபவத் தழும்புகளை மனதில் பெற்றவர்.

வாழ்க்கையில் நன்கு அடிபட்டவர்.

இரண்டு கலியாணங்களையும், இரண்டு செத்த வீடுகளையும் அவரொருவராகவே நின்று ஒப்பேற்றி வைத்திருக்கிறார். இப்போதுதான் அவருக்குக் கொஞ்சக்காலமாக நிம்மதி, குடும்பமும் கஷ்டமின்றி ஓடுகிறது.

மூத்த மகன் சின்னப்பு ஓட்டுமடத்தில் கள்ளுக் கொட்டில் ஒன்று வைத்துப் பிழையில்லாது உழைக்கிறுன்; அவனுக்குக் கீழே சீவிக் கொடுக்கப் பத்துப் பன்னிரண்டு பேர் இருக்கிறுர்கள். கடைசி மகன் தியேட்டர் ஒன்றில் வேலைக்கு இருந்து சம்பாதிக்கிறுன். இரண்டு பெண்பிள்ளை களையும் நேரகாலத்தோடேயே ஒவ்வொருவனுடைய கைகளிலே பிடித்துக் கொடுத்ததாலே, அவர்களும் பிள்ளை குட்டிகளோடு சந்தோஷமாக வாழ்கிறுர்கள்.

கிழவருக்கு என்ன குறை?

'ராசாத்திபோலை நானும், என்ரை அவளும் இருக்கிறம்! இரண்டு மல்லரைப் பெத்துவிட்டம்...... உழைத்துப் போடு றுன்கள்! உழைக்கிறதெல்லாத்தையும் அப்படியே தாய்க் கிழவியிடம் கொடுத்து விடுறுன்கள்...! அவள் அதிலை மிச்சம் பிடிச்சுப் பொம்பிளைப் பிள்ளையின்ரை பிள்ளைய' ளுக்கு நகையாயும், சாமான்களாயும் அனுப்புகிறுள்...!

கந்தருக்குத் தன்னுடைய ஆண்பிள்ளைகளைப்பற்றி வலு பெருமை. செல்லனுடைய மக்களைப்போல உழைக்கிற தெல்லாவற்றையும் சினிமா, பீடி, சிகரெட்டென்று செல வழியாமல், அப்படியே ஒரு சதம் எடுக்காமல் தாயிடம் கொடுப்பதால் அவருக்கு மிக்க ஆனந்தம்.

'எல்லாம் நான் வளத்த வளர்ப்புத்தான்!'

கந்தர் வீதியில் மெதுவாக நடைபோட்டார். அதி காலை வேளையில் உடம்பைப் போர்த்துக் கொண்டு, சுருட்டை வாயில் வைத்துப் புகை விட்டபடி, சிறு நடை போடுவதில் அவருக்கு வெகு பிரியம்.

நடந்து கொண்டே, அந்த வீதி அரசடி வீதியோடு சந்திக்கும் சந்தி மட்டும் வந்து விட்டார். சந்தியிலிருந்த மேக்கியூரி விளக்கு இன்னும் அணைக்கப்படவில்லை. சந்தியி லிருந்த தேனீர்க்கடை திறக்கப்பட்டு விட்டது. தேனீர்க் கடைக்கு இரண்டுகடை தள்ளியிருந்த சலூனின் ஒற்றைக் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தான், முருகேசு.

"என்ன, கந்தர்! உனக்குப் பனியெண்டும் மழை யெண்டும் ஒரு கோதாரியுமில்லையா... விடியப்புறம் புறப் பட்டிட்டாய்...!"

"இல்லைப் பாரும்... அது பழகிப் போச்சு...!" என்றபடி சுறுட்டைக் கானுக்குள் வீசிவிட்டுத் திரும்பி நடந்தார், கந்தர்.

முருகேசுவைப் பற்றிக் கந்தருக்கு எப்போதும் நல்ல அபிப்பிராயம். அந்த நல்ல அபிப்பிராயத்துக்கு முருகேசு, 'தாழ்த்தப்பட்டோர் மகாசபை'யின் தலைவன் என்பது மட்டுமல்ல, நல்ல குணசாலி என்பதும் காரணமாகும். 'பேச்சளவோடு நில்லாமல், செயலிலும் காட்டக்கூடிய திறமைசாலி அவன்' என்பது கந்தரின் அசைக்க முடியாத எண்ணம்; நம்பிக்கை.

கந்தரின் மகன் சின்னப்பு, தாழ்த்தப்பட்டோர் மகாசபையின் உறுப்பினன்; முருகேசு மேல் அளவுக்கு மீறிய பக்தி வைத்திருக்கிறவன்.

"எங்களைச் சிறுபான்மையினரெண்டு, இவங்கள் மேல் சாதிக் காரரெண்டு சொல்லுறவங்கள் அடக்கியடக்கி வருகிறுன்கள்! தாழ்த்தப்பட்டவர்களாம் நாங்கள்!...... நாங்க எளிய சாதியாம்! அவங்க பெரிய சாதியாம்...! எணை அப்பு மனிதருக்குள்ளை என்னனை வித்தியாசம்? நாங்களும் உழைக்கிறம்...! அவங்களும் உழைக்கிறுன்கள்! பிறகென்ன உயர்சாதி...... கீழ்சாதி......? இதுகளுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டவேணும்......!" என்று சீறுவான் சின்னப்பு.

கந்தருக்கு இதைக் கேட்டதும் சிரிப்புத்தான் வரும்:
"எட சின்னப்பு! உங்களை யாரடா மோனை. சிறுபான்மையினரெண்டது?...... இந்த இலங்கையிலே தமிழர் எல்லாரும் சிறுபான்மையினர் தானேடா? பேந்து, அதுக்குள்ளை நீங்க வேறே...?"

சின்னப்பு இதைக் கேட்டுவிட்டுச் சிரிப்பான்:

"உனக்கெணை, அப்பு! ஒரு தாலியக்கட்டும் விளங்காது! நாங்க கீழ்ச்சாதியாம்......! அடிமைகளாக இருந்திருந்து அவங்களுக்கு வாய் பொத்திச் சேவகம் செய்ததாலை உங்களுக்குச் சூடு சுரணை எதுவும் கிடையாது, கண்டியோ? அவங்களைப் போல நாங்க உத்தியோகம் பார்க்க முடியுமோ?"

கிழவர் இடைமறிப்பார்:

"ஏன்ரா, முடியாது? எங்கடை இராசன்ரை நடுவிலான் கிளரிக்கலிலே இருக்கிறான்! ஆனைக்கோட்டை மணியன்ரை மூத்த மருமோன் போஸ்ற்றுமாஸ்ரராக இருக்கிறான்!... உங்களுக்கென்ன உத்தியோகம் தராமல் வைச்சிருக்கிறான்களே? நல்லாப்படிச்சு முன்னுக்கு வாருங்கோவன்...!'

''முன்னுக்கு வரத்தானேனே தடையாய் நிக்கிறான்கள்... ஹரியனங்களெண்டு எங்களை எல்லாத்திலேயும் ஒதுக்கி, ஒதுக்கி... கோயிலுக்குள்ளே போகமுடியாது...... தேனீர்க்கடைகளிலேபோக முடியாது... எங்களுக்குப் புறம்பாப் பள்ளிக்கூடம்... புறம்பா எல்லாம்... இதெல்லாம் என்னெண்டு கேக்கிறன்?''

''கோயிலுக்குள்ளை தானேடா இப்ப எல்லாரும் போகலாம்... திறந்து விட்டுட்டான்களே? தேனீர்க்கடைகளுக்குந்தான் இப்பபோகலாமே? பஸ்ஸிலே ஒண்டா இருந்து பிரயாணம் செய்யிறியள்! றெயிலிலே ஒருவருக்கொருவர் மேலே படுத்துத் தூங்கி விழுந்து நித்திரை கொள்ளிறியள்... இதுக்கு மிஞ்சி என்ன வேணும் எண்டு கேட்கிறியள்...?''

"எணை, அப்பு! கோயில்களைத் தாங்களாகவே திறந்து விட்டவங்கள்? இல்லைக் கேட்கிறன், எல்லாக்கோயில்களையும் திறந்து விட்டுட்டான்களே? நாங்க எல்லாரும் கூடிப் போராடியதாலே தானே திறந்தவங்கள்...! எங்கடை மகாசபையும், தலைவர் முருகேசுவும் போராடாட்டி வெற்றி கிட்டியிருக்குமே? சாப்பாட்டுக் கடையளுக்கைதான் விட்டிருப்பான்களே? இன்னும் என்ன வேண்டும் என்றே கேட்கிறாய்?... எவவளவோ வேணும்... பாரென், இருந்து... எங்கடை தாழ்த்தப்பட்டோர் மகாசபை போராடிப் போராடி எங்கடை சமூகத்தை முன்னேற்றுட்டி... வெற்றி பெறுட்டி...!'',

''உன்னோடு கதைக்க முடியாதடா... இளந்தாரிப் பிள்ளையள்!'' என்று பேச்சுக்கு முற்றுப்புள்ளிவைப்பார். கந்தர்.

மகனோடு இவ்வாறெல்லாம் தர்க்கித்து விட்டு, இருந்து யோசித்துப் பார்ப்பார். சின்னப்பு சொல்கிறதும் சரியென்றுதான் அவருக்குப்படும். தாங்கள் முன்பு மேற்சாதிக்காரரைக் கண்டதும், மேல் துண்டை எடுத்துக் கமக்கட்டுக்குள் வைத்துக் கொண்டு போவதையும்......

ஒருநாள்—

அப்போது கந்தனுக்கு இருபது வயது தான் இருக்கும். கந்தனின் தகப்பனர் உடையார் சின்னத்தம்பியின் தென்னந்தோட்டத்தில் வேலையாளாக இருந்தார். கந்தனும், தகப்பனருக்குதவியாக அவருடனேயே இருந்தான். ஒவ்வொரு சனிக்கிழமையும் உடையார் தென்னந்தோட்டத்திற்கு வருவார். அப்படி ஒருநாள் வந்தபோது, கந்தன் அயதி மறதியாக, பொம்மிய தலைமயிரைத் துண்டினல் கட்டியிருந்தவன், அவிழ்க்க மறந்து போனன். அதைக் கண்ட உடையார் அவனைக் கைப் பிரம்பால் அடித்த அடி…

கந்தருக்கு அது இன்றும் நினைவிருக்கிறது. அதை எண்ணும்போதெல்லாம் அவருக்கு ஆத்திரமாக வரும். ஆனல், உடையார் தனது கடைசிக் காலத்தில், கந்தரின் தந்தைக்கு ஐந்து பரப்புக் காணியை எழுதிக் கொடுத்ததை எண்ணும்போது நன்றியால் நெஞ்சம் விம்மும். அது அந்தக் காலம்……

'இப்போதுதான் இம்முறையெல்லாம் தம்பாட்டிற்கே மாறிப்போய் விட்டன. இன்னும் கொஞ்சக் காலத்தில் சாதிப்பிரிவே அழிந்து போய்விடும்! சமூகக் கட்டுத்தான் எவ்வளவு தூரம் தளர்ந்து போய்விட்டது? சாதிப் பிரிவினை பற்றி இப்போது யார் கவலைப்படுகிருர்கள்? அந்தக் காலத்திலே பெரும்பெரும் பணக்காரர்களும், நிலப் பிரபுக்களும் இருந்தார்கள்! குடும்பத்திலே பணக்கஷ்டம் இல்லாம இருந்தது…… சாதியைப் பற்றியும் அடக்கி வாழ்கிறதைப் பற்றியும் எண்ணினர்கள்! இப்பதான் ஒருவேளைப் பொழுதே கழிவது பிரச்சனையாக எல்லாருக்குமிருக்கிறது! தன் குடும்பத்தைப் பார்க்கவே ஒருவனுக்கும் நேரம் போதாமலிருக்கேக்கை, யார் சாதியைப்பற்றிக் கவலைப் படுகினம்……'

தளர்ந்து வரும் சமூகக்கட்டை நல்ல முறையில் பயன் படுத்திக் கொண்டது, தாழ்த்தப்பட்டோர் மகாசபை என்பதைக் கந்தர் நிச்சயமாக ஒப்புக்கொள்வார். அச்சபையின் ஒரு அங்கத்தவன் தன் மூத்த மகன் என்பதில் அவருக்குப் பெருமைதான். அம் மகாசபையில்தான் எத்தனை விதமான தொழில்களைச் செய்பவர்கள் இருக்கிருர்கள்?…

தலைமுடி திருத்துவோர்... சலவை செய்வோர்... மரமேறு வோர்... மீன்பிடிப்போர்... தோட்டிகள்... இப்படிப் பல தொழிற் பிரிவினர்.

'தொழிற் பிரிவினர்' என்ற வார்த்தையைக் கந்தர் முதன் முதல் தாழ்த்தப்பட்டோர் மகாசபையின் ஒரு பொதுக்கூட்டத்தில் தான் கேட்டார்.

''நாங்கள் தாழ்ந்தவர்களாம்!—உயர்சாதிக்காரர்கள் கூறுகிறார்கள், நாங்கள் தாழ்த்தப்பட்டவர்களாம்! மனித னுக்குள் எப்போதும் பிறப்பால் வேற்றுமை இருந்தது கிடையாது! நாம் மனிதர்கள்...... தொழிலாளிகள்! ஆதியில் மக்களிடையே ஏற்பட்ட தொழிற் பிரிவு இன்று இவ்வளவு தூரம் வளர்ந்து சாதிப்பிரிவாக மாறி, இன்று தாழ்த்தப்பட்ட சமூகமாக நம்மை மாற்றிவிட்டது! அன்பர்களே, நாமினியும் பொறுத்திருக்கக் கூடாது...போராட வேண்டும்! நாம் தொழிற் பிரிவினரே தவிர, சாதிப் பிரி வினரல்ல என்பதை நிலைநாட்ட வேண்டும்! நாம் ஒன்று சேர்ந்து ஒரே குரலாக ஒலிக்க வேண்டும்...!'' மகாசபை யின் தலைவன், முருகேசு முழங்கித் தள்ளினான்.

அவன் பேசியதில் உண்மைகள் நிறையவுள்ளன, என்ப தைக் கந்தரால் உணரமுடிந்தது. நாம் தொழிற் பிரிவினரே தவிர, சாதிப் பிரிவினரல்ல என்று எண்ணத் தலைப்பட்டார். 'பெயர் மாறினால் போதாது, சமூகம் மாறவேண்டும்' என் றும் எண்ணுவார். 'சமூகம் மாறவேண்டாம். பெயர் மாறி னால் போதும்' என்று மகாசபையினர் எண்ணுகின்றார் களோ என்ற சந்தேக விதை சில வேளைகளில் மனதில் துளிர் விடும்.

மகாசபையின் முயற்சியால் பல கோயில்கள் எல்லாருக் கும் திறந்து விடப்பட்டு, தம் சமூகத்தினர் கோயில்களுக் குள் சென்று வழி படுகிறார்கள். என்பதில் கந்தருக்கு மகிழ்ச்சிதான். தேநீர்க்கடைகளில், புறம்பான பேணிகளில் தேநீர் குடித்தவர்கள், இன்று ஒன்றாக இருந்து ஒரே கோப் பையில் குடிக்கிறார்கள் என்பதில் சந்தோஷந்தான்.

கந்தருக்குச் சில வேளைகளில் இப்படியும் ஓர் எண் ணந் தோன்றும். அவ்வேளைகளில் சிரித்துக் கொள்வார்.

'நாங்க குடிச்ச பிளாவிலே கள்ளை ஊத்திக் குடிக்கிறார்கள் உயர்சாதிக் காரர் என்போர்! அது மட்டுமே, நள வீட்டுப் பழஞ் சோற்றுத் தண்ணியைச் சில கொட்டில்கள் கள்ளோடு கலந்து வைக்க, அதையும் குடிக்கிறார்கள்! பேந்து உயர்சாதியாம்? ஆனா, அவர்கள் குடிக்கிற பேணியிலே நாங்க குடிக்கிறதில்லை......அப்ப யார் உயர்சாதி?......

கந்தர் வீதியில் கிளை விட்டிருந்த வேப்பமரத்தில் ஒரு குச்சியை இடுங்கி வாயில் சொருகிக் கொண்டு மெதுவாக நடந்தார்; ஏனோ தனக்குள் சிரித்துக்கொண்டார்.

'முருகேசுவை ஒருமுறை வீட்டிற்கு அழைத்து ஒரு விருந்து வைக்கவேணும்!'

'தொழிலைக் கவனியாது தன்னைப்போன்ற தாழ்த்தப் பட்டவர்களுக்காகக் கஷ்டப்படுகிற மனுசன்' என்று முருகேசுவைப்பற்றிக் கந்தர் எண்ணிப் பெருமிதமடைவார்.

'சில்'லென்று வீசிய காற்று சிறு மழைத்தூறல்களையும் கொண்டுவரும் போலிருந்தது. கந்தர் வீட்டுக்குள் சென்று திண்ணையில் அமர்ந்து கொண்டார்.

"இஞ்சை......என்ன பிலாந்திக் கொண்டிருக்கிறாய்? கரியை எடுத்துப் பல்லைத் தீட்டிவிட்டுத் தேத்தண்ணியைக் குடியன்......" அவருடைய மனைவி அடுக்களைக்குள்ளிருந்து குரல் கொடுத்தாள்.

கந்தருக்குத் தேநீர் குடிப்பதென்றால் அவ்வளவு பிடிப்பதில்லை. முன்பு சிறுபையனாக இருக்கும்போது ஆச்சிக்கிழவி கொடுக்கிற பழந்தண்ணீரை வெகுவிருப்போடு குடிப்பார். ஆனால், காலம் போன போக்கில் 'பாஷன்' மாறி, தேநீர் குடிக்க வேண்டி வந்து விட்டது.

'பழந்தண்ணியைக் குடிக்கக்கூடாது, தேத்தண்ணிதான் குடிக்க வேணும்!' என்பது சின்னப்புவின் அன்புக் கட்டளை. அது மட்டுமல்ல, முன்போல சிரட்டையில் எதுவும் குடிக்கக் கூடாது, பேணியில்தான் குடிக்க வேண்டும் என்று, சில அலுமினியப் பேணிகளும் வாங்கிப் போட்டிருந்தான், கிழவரும் சின்னப்புவின் இழுவைக்கெல்லாம் வளைந்து கொடுத்தவர், ஒன்றிற்குமட்டும் வளைய மறுத்து விட்டார்.

மெத்தைபோட்ட கட்டில் ஒன்றை வாங்கி அதில் படுத்து எழும்பும்படி மகன் சொன்னான். ஆனால் தனது கணகணப்பான சாக்குக் கட்டிலை விட்டுவிட முடியாது என்று கந்தர் மறுத்துவிட்டார்

"இஞ்சை......என்னணை கேக்கலியே ? எழும்பிப்போய் முகத்தைக் கழுவிக்கொண்டு வாவன் ! வந்து தேத்தண்ணியைக் குடித்துவிட்டு, இவன் மணியைக் கூட்டிக்கொண்டு போய் தலைமயிரை வெட்டிக்கொண்டு வாணை ! கூடையாய் வளந்து வலு கேவலமாய்க்கிடக்கு......!"

கிழவர் திண்ணையை விட்டுக் கீழே இறங்கிக் கிணற்றடியை நோக்கி நடந்தார்.

மணி அவருடைய மூத்த மகளின் மகன்; பேரன். பாடசாலை விடுதலை நாட்களில் மாமனோடு இங்கு வந்துவிடுவான். வந்தான் என்றால், பேத்திக் கிழவி அவனுக்குச் செய்கிற உபசாரம், இராச உபசாரந்தான். 'ஆச்சி, ஆச்சி, என்று கிழவி மேல் அவனும் உயிரை விடுவான்.

"டேய்...ராசா ! மணி !......எழும்பி மோத்தைக் கழுவி விட்டு அப்புவோடு போய் மயிர் வெட்டிக் கொண்டு வா, குஞ்சு !"

கிழவி பேரனைத் துயில் எழுப்புவது கிணற்றடியில் நின்று முகம் கழுவிக்கொண்டிருந்த கிழவருக்குக் கேட்டது.

'நல்ல ராசாவும், குஞ்சுவும்தான்' என்று முணுமுணுத்துக் கொண்டார். உள்ளுக்குள் பேரனில் நல்ல அன்பு அவருக்கு.

காலைச் சாப்பாடு முடிந்ததும், கந்தர் பேரனைக் கூட்டிக் கொண்டு சலூனுக்குப் புறப்பட்டார். படலையைத் திறந்து கொண்டு வெளியே வீதியில் ஏறியதும் அவருக்கு ஒரு திடீர் எண்ணம்.

'ஏன் இண்டைக்கு முருகேசற்றை கடையிலை வெட்டக் கூடாது ? வெட்டியே விடமாட்டார் ?... எங்களுக்கெண்டு இருக்கிற கடைக்கே போகவேணும்...?'

கிழவர் பேரனைக் கூட்டிக்கொண்டு முருகேசுவின் சலூனை நோக்கிச்சென்றார்.

சலூனில் நல்ல சனம் ; தலைமயிர் வெட்டவும், 'சேவ்' எடுக்கவும் நிறைந்து நின்றார்கள்.

"என்ன, கந்தர் இங்காலே...?" என்று கேட்டான், முருகேசு. கிழவருக்கு ஏதோ தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது, போன்ற அவஸ்தை.

"ஒண்டு மில்லைப்பாரும்! இவனுக்கு ஒருக்காத் தலை மூடியிறக்க வேணும்...!" வார்த்தைகள் தயங்கின.

முருகேசு சற்று மௌனமாக விருந்தான்;

"கொஞ்சம், செல்ல வாவன்!" என்றான்.

கிழவர் தலையை ஆட்டிவிட்டுப் பேரனைக் கூட்டிக் கொண்டு கடையை விட்டுக் கீழே இறங்கி நடந்தார். சிறிது தூரந்தான் நடந்திருப்பார். பின்னால், யாரோ கைதட்டி அழைக்குமொலி நிற்க வைத்தது.
முருகேசுதான் கைதட்டியவன்; கைகளில் கத்திரிக் கோலும், சீப்புமாகக் கந்தரிடம் விரைந்து வந்தான்:

"என்ன கந்தா, இதெல்லாம்...? உங்களுக்கு நான் தலைமயிர் வெட்டுறதை ஆரும் பார்த்தா என்ன சொல்லு வினம்? யோசித்துப் பார்த்தியே......இதெல்லாத்தையும்?

கந்தர் விக்கித்துப் போய் நின்றார்.

"அதெல்லாம் சரி, கந்தா! நாளையிண்டைக்கு ஆனைக் கோட்டை சடைவிநாயகர் கோயில் ஆலயப் பிரசவேசமிருக்கு...! நீங்க எல்லாரும் கூட்டமாக வாருங்கோ...... என்ன...? ஒரு கைபாக்க வேணும்...!"

ஏதோ இதயத்தில் நிறைந்து தொண்டையை அடைப்பது போன்ற பிரமை, கந்தருக்கு.

'உங்களுக்கு நான் தலைமயிர் வெட்டுறதை ஆரும் பார்த்தா என்ன சொல்லுவினம்?...!

கந்தர் சிலையோடி நின்றார்.

முருகேசு கடையை நோக்கி விரைந்து சென்றான். கந்தர் அவனைப் பார்த்தபடி நின்றார்.

அவன் படிகளில் ஏறுது, தாவிக் குந்தில் மிதித்துக் கடைக்குள் நுழைந்துகொள்கிறான்.

கந்தர் விரக்தியோடு சிரிக்கிறார்.

---

10

சபா. ஜெயராசா

# அணைப்பு

"பொல்லாப் பிள்ளையில் இல்லாப்பிள்ளை"—சுப்பையரின் வாய் கோபத்தைக் கக்கியது...!

பக்கத்திலே கிடந்த பூவரசம் தடி 'துவள் பறக்க' சுப்பையரின் மகன் சுப்பிரமணியம் அடிவாங்கிக் கொண்டிருந்தான்.

"என்னடா சுப்பையாவிற்கு என்றைக்குமில்லாத கோபம் இன்றைக்கு வந்தது" என்று அதிசயப்பட்டார் பக்கத்து வீட்டுக்கார இரத்தினம்.

கோபத்துடன் அங்கு நிற்கும் சுப்பையர்—யாழ்ப்பாணத்துச் செம்மண்ணுடன் போராடிக் கொண்டிருக்கும் ஒரு சீவன். வெய்யிலிலே காய்ந்து காய்ந்து கறுத்துவிட்ட கரியமேனி. நகங்களுக்கு நகவர்ணம் பூசியதைப்போல் படிந்து கிடக்கும் செம்பாட்டுப் புழுதி! செம்பாட்டு மண்ணுடன் போட்டி போட்டால் தோற்க மாட்டேன்" என்று மார்பு தட்டிக் கூறும் செம்புழுதி படிந்த வேட்டி! உள்ளமோ?—யாழ்ப்பாணத்துத் தண்ணீர் போற் களங்கமில்லாதது!

இரண்டாயிரங் கன்று தோட்டம்!—அது அவர் முதி யோர் வழிவந்த சொத்து! பணத்தட்டுப்பாடு வந்த போது காணியை ஈடுவைத்துப் பணம் பெற்ருர் அன்றி அதனை விற்பதற்கு அந்தப் பரந்த மனதிலே இடமில்லை!

புகையிலைக் கன்றிற்கு "குழை தாழ்க்கும்" பருவம் வந்ததும் சுப்பையர் அக்காணியினை ஈடுவைப்பார். பின் புகையிலை விற்றதும் காணியை மீண்டு கொள்வார்!

சுப்பையரின் உயிரும், உடலும் அதோ தெரியும் அந்தப் 'பொயிலைக் கண்டு'தான்.

"எட சுப்பிறமணியம், கெதியா வண்டிலைத் தள்ளடா! இறைக்கச் சுணங்கிப் போச் செல்லே! பார், மற்றத் தோட்டக் காறரை இறைச்சுப்போட்டு மிசினைக் களட்டினம்—நாங்கள் இப்பத்தானே இறைக்கப் போறம்!"

"எணை அப்பு, நான் இண்டைக்குப் பள்ளிக்குப் போகாமல் நிண்டு தண்ணி கட்டட்டே?"

"போடா, வேசை மேனே! நீ படிக்காமலிருந்து என்னைப்போலை தோட்டங்கொத்திக் கயிட்டப்படப்போறியே?

"ம்......போடா, வீட்டிலை போய்ச் சாப்பாட்டை வாங்கிக் கொண்டு தந்துவிட்டு' ஆசுபத்திரி மணி அடிக்க முந்தி பள்ளிக்குப் போ. எல்லாவிட்டால் என்ரை கண்ணிலை முழிக்கமாட்டாய்!"

வீட்டிலிருந்து சாப்பாட்டைக் கொண்டுவந்த சுப்பிரமணியத்திற்கு பொழுது போகவில்லை.

"டுட்...டுட்...டுட்" என்ற 'அல்க்கன் மிசின்' சத்தம் தனது உயிர் நாடியாக ஒலிக்க. தண்ணீர் கட்டிக்கொண்டு நின்ருர் சுப்பையர். 'மிசின்' நின்ருல் அவரது இருதயமே நின்றது போலத்தான். வாழை நாரும், தென்னங்கயிறும் அந்த இறைக்கும் இயந்திரத்தினது பிரிக்கமுடியாத உப உறுப்புக்களாக விளங்கின.

சரியாகக் கொழும்பு 'றையில்' போகத்தான் சுப்பையர் சாப்பிட வருவார். இனுவில் ஆசுபத்திரி மணியும் என்னும் அடிக்கவில்லை......

சுப்பையர் மகன் சுப்பிரமணியத்தினது 'சயன்ஸ்மூளை' வேலை செய்யத்தொடங்கியது... தோட்டத்து 'ஆடுகாலில்' குழைமறைவில் தொங்கிக்கொண்டிருக்கும் 'பொலிடோல்' போத்தில் அவன் கண்களுக்குப்பட்டது!

சுப்பையருக்குப் பொலிடோல் வெற்றுப் போத்திலைக் காணவே பயம். தினம் தினம் பொலிடோல் குடித்து பலர் மரணமாகும் செய்திகள் அவரது மனத்தைக் கலக்கும். என்ன செய்வது? அதனைத் தெளித்தாற் தான் புகையிலைக்கண்டின் மீதுள்ள கிருமிகள் சாகும்!

"பொலிடோல்" குடித்தால் ஆட்கள் சாவார்கள் என்பது சுப்பையர் மகன் சுப்பிரமணியத்தின் கேள்வி!......

"இண்டைக்கி இதைச் சோதிச்சுப் பாத்தால் என்ன? மெள்ளமாகக் குஞ்சிப் பெட்டியைத் திறந்து, ஒரு தோசையை எடுத்து, 'பொலிடோலில்' தோய்த்து......" சுப்பிரமணியத்தினது, மனது நினைக்க கரங்கள் செய்யத் தொடங்கின...

உணவுதேடித் தோட்டத்திற்குத் தோட்டம் பறந்து வந்தது அந்த ஏழைக் காக்கை–!

தனது பரிசோதனையின் முடிவாக அந்தத் தோசைத் துண்டைக் காகத்திடம் நீட்டினான் சுப்பிரமணியம்...!

ஒன்று மறியாத அந்த அப்பாவிக் காக்கை தோசையைச் சாப்பிடுமுன், தனது நண்பர்களுக்கு ஒரு முறை அழைப்பு விடுத்தது...

தமது பரிசோதனைகளை மிருகங்கள் மீது பரீட்சித்துக் கொண்டிருக்கும் விஞ்ஞானிகளின் நிலைக்கும், சுப்பையர் மகன் சுப்பிரமணியத்தின் நிலைக்கும் அந்தச் சமயத்தில் வேற்றுமைத் தொனியையே காணவில்லை!

......காகத்தின் அடி நெஞ்சிலிருந்து பிறந்த தேய்ந்த குரல்கள்... சுப்பையரின் காதுகளுக்குள் புகுந்துவிட்டன... சுப்பையர் கண்டுவிட்டார்...! திறந்துகிடக்கும் பொலிடோல் போத்திலைக்கண்டவுடன் ஒரு கணம் திகைப்பு!

மகன் சுப்பிரமணியம் தான் ஏதோ...சீ! அவன் குடித்திருக்க மாட்டான்! மனதிலே சிறு அமைதி......எனினும் அந்தக் காகம் சுருண்டு விழுவதைக் காண அவரால் பொறுக்க முடியவில்லை!

மண்வெட்டியை வீசியெறிந்துவிட்டு ஓடி வந்தார்! "அல்கன் மிசின்ரை வேகத்தைப்போல அப்பு ஓடி வாரூர்! வீட்டை ஓடினுற்தான் தப்பலாம்"........வீட்டை நோக்கி ஓட்டமெடுத்தான் சுப்பிரமணியம்! விடாது கலைத்தார் சுப்பையர்!

வீட்டின் முன்புறம் நின்ற பூவரசமரத்தின் தடியொன்று சுப்பையரின் மனத்தையும், கையையும் 'ஓரளவிற்கு' நிறைவைச் செய்தது. பூவரசம் தடியைப் பிடுங்கியதுதான் தெரியும்......சுப்பிரமணியம் அடிபொறுக்க முடியாமல் கத்தத் தொடங்கினுன்......

சுப்பையரின் ஆவேசம் 'ஓரளவு' தீர்ந்த நிலையில், தோட்டத்தில் 'மெசின்' வேலை செய்து கொண்டிருப்பதும், தண்ணீர் கட்ட ஒருவரும் இல்லையென்பதும் நினைவிற்கு வந்தது!

தோட்டத்தை நோக்கி ஓட்டமெடுத்தார்......வடமுகத்தால் சென்ற நீர் பாத்திகளை உடைத்துப் பாய்ந்து கொண்டிருந்தது! 'மெசினை' நிறுத்திவிட்டு பாத்திகளைச் சரி செய்துகொண்டிருக்கும் 'தத்தளிப்பு' நிலையில் அவரது கோபம் நீரைப்போல மேலும் பொங்கி வழிந்தது!

......வாய்க்காலை சரி செய்து முடிந்ததும், அவரது மனமும் சாந்த மடையத் தொடங்கியது...... "எட, மோடனைப் போலை என்ரை பிள்ளைக்கு அடிச்சுப் போட்டன்...எண்டாலும் அவன் செய்தது பிழைதான்......அதுக்கு உப்பிடியே அடிக்கிறது...?...தவமிருந்து பெத்த ஒரு பிள்ளையெல்லே... ......அண்டைக்கு கால்நோகு தெண்டு நான்படுத்திருக்க எனக்குப் பக்கத்திலே இருந்து அவன் கால்தடவி விட்டது... சீ......நல்லா அடிச்சுப் போட்டன்......"

சுப்பையர் மெதுவாக நடக்கத் தொடங்கினுர்... சிறிது சிறிதாக நடைவேகம் அதிகரிக்கத் தொடங்கியது...... சங்கக்கடையை அடைந்து விட்டார்...... "இஞ்சை தான் இனிப்பு மலிவாய்க் கிடைக்கும்" என்று சுப்பிரமணியம் சொல்லுவான்!

"......தம்பி முருகையா ஒரு பத்துச் சதத்துக்கு இனிப்புத் தா!" தனது முடிச்சிலையுள் கிடந்த புழுதிபடிந்த பத்துச் சதத்தினை எடுத்து நீட்டினுர் சுப்பையர்! முரு

கையா கொடுத்த இனிப்பை வாங்கிக்கொண்ட சுப்பையர் பள்ளிக்கூடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினர்......

"இராசதுரை வாத்தியார் என்ரை மேனை ஒருக்கால் காணவேணும் அனுப்பி விடிறியளே ?"

"என்ன சுப்பையா ! எண்டைக்குமில்லாத வழக்கம் ? தோட்டத்தாலேயோ ?"

"ஓம் வாத்தியார், என்ரை மேனை ஒருக்கால் காண வேணும்..." சால்வைத் துண்டை முழங்கையுள் வைத்தபடி ஒதுங்கினர் சுப்பையர்...!

சுப்பிரமணியம் தந்தையை நோக்கி வந்து கொண்டிருந்தான்...... அவன் முகம்—நிலத்தை நோக்கிக் கொண்டிருந்தது...!

சுப்பிரமணியத்தின் அடிபட்ட தழும்புகளைக் கண்ட சுப்பையரின் இருதயம் பனிபோல் உருகியது.

......"இந்தா ஒரு சரை இனிப்பு......"

இருவர் கரங்களும் நீண்டன......!

---

கலா பரமேஸ்வரன்

# உதிரி

அது முன்பனிக் காலம். பார்த்தால் விடிந்ததென்று சொல்லிவிட முடியாது. மணியோ ஏழரை கடந்து விட்டது. மூடுபனி, ஆதவனின் காலைக் கதிர்ச்சுடரை மறைத்து மங்கவைக்க பனித்திரையை எழுப்பியது. ஆதவன், சளைக்காமல் பனியையும் ஊடுருவிக் கொண்டு அன்றைய தினத்தில் புத்துணர்ச்சியுடன் இயங்கப் போகும் மக்களையெல்லாம் காணத் துடித்தது. தங்கள் கூட்டிலிருந்து கூச்சலிட்டு சிறகடித்துப் பறந்த காக்கை, குருவிகளின் ஒலி சிறிதாக அடங்கிவிட்டது.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை நீண்டு செல்லும் அந்த சுண்ணாகம் நெடுஞ்சாலையின் இருபுறத்தும் பரந்து கிடக்கும் கலட்டி வெளியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறிக் கிடக்கும் சில குடிசைகட்கு மத்தியில் உள்ள 'சிறிய கற்கொட்டகை' என்று சொல்லிவிடக் கூடிய அந்த வீட்டில்—

உடலை நடுநடுங்க வைக்கும் பனியின் குளிரில் பொன்னு, தன் சேலையையே போர்வையாக்கி அடுப்படியில் அமர்ந்து கொண்டிருந்தாள்.

அடுப்பில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. பற்றி யெரியும் நெருப்பின் பரவலில், சட்டியின் சூடு ஏறி ஏறி செல்லவே, அதற்குள்ளிருந்த திராவகமும் 'கத' கத' ஓசை யுடன் துள்ளிக் கொண்டிருந்தது.

வெம்மையின் தன்மையினை மறந்து கொதித்துக் கொண்டிருந்த திராவகத்தில் பொன்னுவின் விழிகள் நிலை குத்தி நின்றன. விழிகள் மட்டுமல்ல. அவளது உள்ளமே அதில் பதிந்திருந்து. ஏதேதோ கற்பனைகளைச் செய்து தனக் குத்தானே நம்பிக்கையை ஊட்டிக்கொண்டிருந்தது.

அடர்த்தியாக எழுந்து கொண்டிருந்த புகைப்படலம், பொன்னுவின் விழிகளை மேலும் பார்க்கமுடியாமற் செய்து விட, அவள் தன் சேலை முந்தானையால் கண்களை ஒற்றி, முகத்தில் பனித்திருந்த வியர்வைத் துளிகளையும் துடைத்த வாறே, சேலையை உதறிக்கொண்டே எழுந்தாள்.

''என்னணை அம்மா, காலமை வெள்ளண தேத்தண்ணி குடியாமல் உங்கை இருக்கிறாய். இன்னும் சரிவரேலையே'' மறுபுறத்தில் தேனீர் தயாரித்துக் கொண்டிருந்த மகள் தங்கத்தின் குரல் கேட்டது.

“நீ சொல்லிருப்பிள்ளை, இஞ்சைவா, நாங்க இறக்கு வம்'' என்றவாறே மகளையும் துணைக்கழைத்தாள் பொன்னு.

“இது எப்பிடிபதமோண்டு பாரன்'' பக்கத்தில் கிடந்த ஒரு சிறியதடியை கொதித்த திராவக்துக்குள் தோய்த்து அதை சற்றே உதறிவிட்டு பொன்னு ஓடி வந்த மகளிடம் நீட்டினாள்.

''ஆத்தே, உந்தக் கேவலத்தை என்ரை வாய்க்கை வைக்கிறாய்'' என்றவாறே கைகளைமுன் நீட்டி தலையை பின்னுக்கு அசைத்தாள், தங்கம்.

''ஊம், உந்தச் சாராயத்துக்குத்தானே ஆசைப்பட்டு இந்த ஊர்ச்சனங்கள் இஞ்சைவருகுதுகள். எங்களுக்குச் சீவியம்வாறசாமானை மதியாமல் இப்பிடிச் சொல்லிறியே'' செல்லக்கோபம் மனதில் முளைவிட, தடியில் ஒட்டிகிடந்த திராவகத்துளியை நுனிநாக்கில் வைத்தவாறே சுவைத்துப் பொச்சடிக்கின்றாள்.

''அச்சா'' அதனை அவளது நாக்கு மட்டும் சுவைக்க வில்லை. அவள் நெஞ்சமே சுவைத்து விடுகின்றது. அழகிய பொம்மையை பார்த்ததும் சிறுவர்கள் உள்ளம் மகிழ்விலே துள்ளுவதைப்போல, பொன்னுவின்மனம் ஆடிக்காற்றுப் பட்டமாகிவிட கத்திவிடுகின்ருள்–

''இந்த றிப்பிலை ஒரு நூற்றைம்பது ரூவாய் வந்திடும்'' ஒருகணம், விழிகள் சட்டியைநோக்க, மனம் கணக்குப் போட்டு விடையும் வெளிவருகின்றது. நம்பிக்கையின் படர்ச்சி அகன்று கொள்கின்றது.

''உந்தச் சனியங்கடை கண்ணிலை படாமல் விடிஞ்சவுடனை இந்த வேலையை முடிச்சிடிறது எவ்வளவு சுகம்'' மகிழ்ச்சிக்களிப்பில் யாரையோ வசைபாடி, தனது செயலில் தானேபெருமைப்பட்டுக் கொள்கின்ருள்பொன்னு.

கள்ளச் சாராயம், கசிப்பு இப்படிதினமும் வழக்குகள் குற்றங்கள் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் அடிபடுவதை அவள், பத்திரிகை படிக்கும் அறிவில்லா விட்டாலும் பலர் சொல்லகேட்டிருக்கின்ருள். ஏன் ? அவளது கணவரான கந்தர் கூட ''கசிப்பில்'' அகப்பட்டுத்தான் கம்பியெண்ணிக் கொண்டிருக்கின்ருர். இவற்றையெல்லாம் நினைக்கும்போது ஒருவகை இனம் தெரியாத பயமும், வகையறியாத வேதனையும் அவளது நெஞ்சைக் கவிந்து கொள்ளும்.

இருந்தும், அந்தபயமும் வேதனையும் அவள் காரியத்தை தடுத்து விடுவதில்லை.

தடுத்து விட்டால், அப்புறம்......?

பொன்னுவின்கணவர் கந்தரை 'சாராயகந்தர்' என்ருல் அந்த ஊரிலுள்ள பொக்குவாய்க் குழந்தைகளுக்குக் கூட அவரை தெரியும். கந்தருக்கு ஐந்துபிள்ளைகள். ஒன்றே ஒன்று அதுவும் கடைசியாக பெற்ற குழந்தை தான் ஆண். மற்றவை அத்தனையும் பெண்கள். ஒன்றிரண்டு வருட வித்தியாசத்தில் வளர்ச்சியை எட்டிக் கொண்டிருந்த அவர்களுள் மூத்தவள் தங்கம். மணப்பருவத்தை அடைந்து வீட்டிலே தவங்கிடந்தாள். மற்ற மூன்று பெண்களையும் சின்ன வயதிலேயே படிப்பைநிறுத்தி பணிப்பெண்களாக வெவ்வேறிடங்கட்கு அனுப்பியிருந்தார் கந்தர்.

கந்தரது குடும்பத்துக்கு எனச் சொந்தமாக இருந்த அப்பன் தேடிவைத்த சொத்தான, இரண்டொரு காணிகளும், ஊராருடன் ஏற்பட்ட சண்டைகளிலும், சீவியச் செலவிலும் 'கந்தறுந்துபோக' அவர் குத்தகைக் காணியிலேயே இருந்தார். தன் வாழ்நாளை ஓட்ட 'வாரத்துக்கு' தோட்டம் ஒன்றை செய்து பார்த்தார். சரிவரவில்லை. வருசத்துக்கு வருசம் வரவுக்குமேல் செலவு மிஞ்சியது. மனைவி பொன்னுவின் கழுத்தில் மின்னிய 'தாலி' இருக்கு மட்டும் அவரால் செலவுகளை ஒருவிதமாக சமாளிக்க முடிந்தது. ஆனல், தோட்டமே அவரை விழுங்க ஆரம்பித்த பின், அவர் என்ன செய்வார்! பாவம், பெண்களை அதிகமாகப் பெற்றுவிட்ட அவருக்கு 'கசிப்பு' யோசனை பட்டது. அத் தொழிலில் ஈடுபட்டார். 'வெறும் கந்தர்' "சாராயக் கந்தர்" ஆகி பணம் பணமாக குவித்தார். ஆனல் பொருமை பிடித்த யாரோ 'மூட்டிக் கொடுத்துவிடவே' அரசாங்கம் அவரை கைது செய்தது. கிடந்தபணம் முழுவதையும் வழக்கில் கரைத்து விட்டபின்னும், கம்பியெண்ணுவதே தஞ்சமாகப் பெற்முர்.

சிறைச்சாலைக்கு சென்ற அன்று அவர் வீட்டுக்காரரிடம் விடை பெற்ற அந்த உருக்கமான காட்சி......இப்போதும் பொன்னு நினைத்துப் பார்த்தால் அழத்தொடங்கிவிடுவாள். "முருகா — இப்படியும் எங்களை படைச்சாயே" சோகம் தரும் சோர்வில் ஆண்டவனை குழைந்து வணங்குவாள்.

"நான் போட்டுவாறன், பொன்னு பிள்ளையளை கவனமாய்ப்பார்" சொல்லமுடியாமல் வார்த்தைகளை வெளியிட்டவாறே புறப்பட்டார் கந்தர்.

புடவைத் தலைப்பால், மாலைமாலையாக கண்ணீர் வடிக்கும் இமை விளிம்பை இலேசாக துடைத்துக் கொள்கின்ருள் பொன்னு. பிரிவின் வேதனையும், 'அவரில்லாமல் எப்படிவாழப் போகின்றேன்' என்ற ஏக்கமும் அவள் உயிரை துளைக்கின்றன.

"என்ரை மூத்தவள் தங்கத்துக்கு டீங்காய் கலியாணம் செய்து கண்குளிர வேணுமெண்டு எவ்வளவு காசைச் சேர்த்து வைச்சன். இப்ப அத்தினையும் வழக்கிலை நாசமாக்கி,

நானும் மறியலுக்குப் போறன், என்னெண்டு அம்மா சீவிக்கப்போறியள்'' நெஞ்சத்திலே வீடுகட்டிக் கொண்டிருந்ததாபம், சொற்களின் கணிவிலே இழைந்து, தொண்டையிலிருந்து ஓடி வாய்வழி வெளிவரும்போது, விழியெல்லாம் நீராக உயிர்ப்பொறி கலங்க கந்தர் வீறிட்டழுதார். அவரின் பாசம் துடியாய்த் துடித்தது.

''ஏழு வரிசம்... எப்பிடி சீவியம்'' பொன்னுவின் உதடுகள் துடிக்கின்றன. கணவரின் கைகளை அணைத்துக் கொள்கின்றாள். அவள் விரல்கள் நடுங்குகின்றன.

''நான் கெட்டவன் செய்த துப்புக்கெட்ட காச்சல் தொழிலிலை நீயும் விழுந்திடாதை'' என்று கரகரத்த குரலில் அருமையான ஆலோசனை சொல்லிவிட்டு கந்தர் சென்றே விட்டார். இப்போது 'கம்பி' எண்ணுகின்றார்.

கந்தர், இறுதியாக அளித்த ஆலோசனையை, பொன்னு, சிலகாலம் மீறாமலிருந்தாலும், துயரச்சுமையின் அழுத்தமும் குடும்பச் சுமையின் நெருக்கமும் பொன்னுவை ஒன்று சேர்த்து அமுக்கும்போது, அவளுக்கும் ஒரேவழி—

கணவனின் சொல்லைத் தட்டி, காய்ச்சல் சாராயத் தொழிலைத் தொடரவேண்டிய நிர்ப்பந்த வழிதான் அவள் அக விழிகளில் சிக்கியது. பெண்ணாயிருந்தாலும் குடும்பத்தைக் காப்பாற்றும் 'சுமை' அவள் தலையில் தானே விழுந்து விட்டது!

கந்தர் சிறைக்குச் சென்று ஒருவருடமாகிவிட்டது. கந்தர் வீட்டை விட்டு போனபின், அந்த வீட்டுப்பக்கம் எட்டிப்பாராதவர்கள் எல்லாம் இப்போது மீண்டும் சென்றார்கள். வெள்ளிக்கிழமைகளில்தான், பொன்னு அமைதியாக இருப்பாள்.

* * *

''உது என்னடி தங்கம் தவால்? என்ன தங்கச்சிமார் காசு அனுப்பியிருக்கினமே'' அன்று வந்த கடிதத்தை உடைத்து, எழுத்துக்களை கூட்டிப் படித்துக்கொண்டிருந்த தங்கத்தை பொன்னு கேட்டாள்.

''ஓம் அம்மா, முப்பத்தைஞ்சு ரூவாய் அனுப்பியிருக்கினம்.'' அந்தச் சொற்களில் அவளது நிம்மதியான மனம் பிரதிபலித்தது. தங்கத்தின் சொந்த வீட்டுச் செலவுகட்கு

என பணிப்பெண்களாகத் தொண்டு புரியும் அவளது மூன்று தங்கைமாரும், அவ்வப்போதைக்கு ஏதோ கையில் மிச்சமாக கிடைத்ததை அனுப்புவார்கள். அவள் மிகவும் கெட்டிக்காரியாக, சிக்கனப்படுத்தி அதனை தபாற்கந்தோரில் போட்டு விடுவாள். இப்போது, தங்கத்துக்கு திருமணம் அண்மையில் என்றதும் சிறிது அதிகமாக பணம் வந்தது.

''உன்ரை கலியாண வீட்டை வரியினம் தானே''

''அதுக்கு வராமலிருக்கினமே, இன்னும் ஒருமாசம் கிடக்கே, பேந்தென்ன அவசரம்......''

தங்கத்துக்கு பழைய நினைவுகள் வரவே, எண்ணங்கள் தறிகட்டி எங்கெல்லாம்ஓடின. அவள் இதயம் கனத்தது.

''அப்பு இல்லாமல் என்னெண்டு அம்மா எல்லாம் நடக்கப்போகுது'' சிந்தனை நினைவில் விழுந்து அழுந்த, கேள்வி துயரவார்த்தைகளில் தோய்கின்றது.

பொன்னுவின் மனதில் சுருக்கென்று பாய்ந்தது தங்கத்தின் கேள்வி. மனம் துடிக்கின்றது. பதில் சொல்ல நா புரளவில்லை.

''என்னம்மா பேசிறுயில்லை'' மீண்டும்கேட்டாள்.

''அது சரிதான் அதுக்கென்ன செய்யிறது. நாங்கள் குடுத்து வச்சது அப்பிடி, உன்ரைகொப்பர் உனக்கு உத்தியோககாற மாப்பிள்ளை எடுக்கவேணும், பெரிய சீதனம் கொடுக்கவேணுமெண்டு எல்லாம்கனுக்கண்டார். இப்ப தத்தம் பண்ணக்கூட இல்லாமல் போட்டார். அவர் ஏழு வரிசம் வருமட்டும் நீ இருக்கப்போறியே'' தாபம் உயிர்த்தது. வார்த்தைகள் தடுமாற ஆரம்பித்தன. சோளகக்காற்றுக்கு நிலைதளும்பி ஆடும் யாழ்ப்பாணத்து வாழைமரம்போல, நிலைதளர்ந்து ஆடினுள் பொன்னு.

சிலநிமிடங்கள் பேரமைதி.

''உதுகளை நெடுகயோசிச்சுக் கொண்டிருககிறதே? ஆகிற காரியத்தை நல்லாய்ச் செய்து பாப்பம்''

தங்கத்தின் வட்டமுகம் பதிலுக்கு அசைகின்றது.

"நான் உன்ரை கொம்மானைக் கூட்டிக்கொண்டு மாப்பிளை வீட்டுக்காறரிட்டை போட்டுவாறன், அவை ஆரேன் வந்தால் நான் போட்டனெண்டு சொல்லு" பொன்னு போய்விடுகின்ருள்.

"எல்லாப்பாரமும் உன்ரை தலையிலைதான் அம்மா பொறியிது, ஏன் வீணுய் கயிட்டப்படுகிருய், எனக்கா்ண்டி" ஏக்கத்தில் வார்த்தைகளை வாய் உதிர்த்தது.

"உதுக்கேன் பயப்பிடுவான், அவர் இல்லாததாலை நான் வடிவாய் நடத்தவேணுமெல்லோ, பேந்து ஊரார் வம்பு பேசுவினம்" வாசலைகடந்த படியே சொல்லிக்கொண்டு போனுள்பொன்னு.

* * *

ஏங்கும் தனது இதயத்தைக் குளுமையான எண்ணக்கடலில் அமிழ்த்திஞள் தங்கம்.

"இன்னும் கொஞ்சநாளுக்குள்ளே நான்கலியாணம் முடிச்சுப்போடுவன்" என்று நினைக்கும்போது அவள் மணதில் முளைவிட்டு சுழன்ருடிய எண்ணத்தின் சுழிப்புக்கள்...

பருவம் உருட்டி திரட்டி சாத்திவிட்ட பேரெழிலை தாங்கி நிற்கும் தனது பொலிவு நிறைந்த உடலை ஒருகணம் பார்த்தாள். இந்த மென் உடல் இன்னும் ஒருமாதத்துக்குள் ஒருவனின் இன்ப அணைக்குள் சிக்கும்போது...ஆஹா... அவள் உடலின் உள்ளே கிளுகிளுத்துக் கும்மாளமிடும் இனம்புரியாத உணர்வுகள்...... அவ்வின்ப உணர்வுகளில் திளைத்துச் சுவைத்துப் பெருமிதம் கொள்ள......

அந்தச் சின்னஞ்சிறிய வீட்டின் கதவு தட்டப்படும் சத்தம் அவள் சிந்தனையைச் சிதறச் செய்தது.

அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"ஆரேன் பிறத்தியாராய் இருக்கவேணும். எங்கடை ஆக்கள் எண்டால் உடனை உள்ளுக்கை வருவினம்" என்று தனக்குள் முணுமுணுத்தவாறே ஒருகணம் வெளியே கண்ணுல் நோட்டமிட்டாள்.

'வெள்ளிக்கிழமையளிலை சாராயத்துக்கும் ஒருதரும் வாறல்லே அதுவும் அம்மான்ரை பொறுப்பெல்லோ'

தன் உடைகள் சீரில்லாத நிலையில் வெளியே கதவை திறந்துபார்க்க கூசிஞள்.

'மாப்பிள்ளை வீட்டுக்காரராக இருந்தால்' என்ற நினைவு.

''ஆரது'' தங்கத்தின் மென்குரல் பாய்ந்தது.

''அது நான் விதானையார். பொன்னு நிக்கிறுவே'' அமைதியாக பதில் சொன்ன வண்ணம் கதவை திறந்து கொண்டு வந்தார் அவர்.

விதானையார் என்றதும் நெஞ்சில் பீறிட்டெழுந்த கலக்கத்தின் அடி முகத்தில் வீழ்ந்தது.

''முந்தி அப்புவை பிடிச்சுக் குடுத்த உவர் அம்மாவை யும் பிடிச்சுக் குடுத்தால்... நான்... பேந்து கலியாணம்... ஐயோ'' நெஞ்சைப் பிடித்துக் கொள்கின்ருள் தங்கம். அவளின் கூச்சம், கலக்கத்தில் பறந்தது.

''அவ சந்தைக்குப் போட்டா'' விதானையாருக்கு பதில் சொன்னுள்.

''போட்டாவோ, உங்கை ஒருதரும் இல்லையோ''

பதிலுக்கு தலையசைத்தாள் தங்கம்.

விதானையார் ஒருகணம் தாமதித்தார். தன் சட்டப் பையைத் துழாவி ஐம்பது ரூபா நோட்டை இழுத்தார்.

''ஒரு போத்தில் கொண்டா பாப்பம்''

'அவர் என்னைச் சோதிக்கின்ருரா' என்ற பயத்தில் தங்கம் துடித்தாள்.

''ஐயோ ; அம்மா இல்வே'' நாணத்தின் பிரதிபலிப் பாக வார்த்தைகள் தெரிந்தன.

''ஏன் உன்னலை ஏலாதோ'' அதிகாரத்தின் தொனிப்பு சற்றே சேட்டது.

உள்ளுக்குள் போடப்பட்டிருந்த ஒரு கதிரையில் அமர்ந் தார், அவர்–

தங்கத்துக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வீட் டின் உட்புறம் சென்று ஒரு போத்தலை எடுத்து வந்தாள்.

''உன்ரை அப்புவை பிடிச்சுக் குடுத்தநான் இனி என்ன செய்வனெண்டு. பயப்பிடுறியோ'' போத்தலை வாங்கி கிளாஸில் ஊற்றிக்குடித்தவாறே விதானையார் பேசினுர்.

''உந்தச் சனங்களின்ரை தொல்லை தாங்கமாட்டாமல் செய்தனுன். இப்பவும் உன்ரை கொம்மாவைப் பற்றி கள்ள பெட்டிசங்கள் வந்திருக்கு......''

தங்கத்துக்கு இதயமே வெடித்து விடும் போல இருந்தது. அவள்கண்களில் கண்ணீர் குமிழியிட்டது.

“அதுக்கு அழுகிறுய் போலக்கிடக்கு? அப்பிடி ஒண்டும் ......” ஏதோ சிந்தனையில் அவர் குரல் தேய்ந்து தேய்ந்து நிண்டது.

அவர் விழிகளில் சிவப்பேறியது. வாயிலிருந்து உமிழ் நீரை அடிக்கடி விழுங்கிக் கொண்டிருந்தார்.

“இந்தா காசு” பச்சைப்பசேலென்ற தென்னங் குருத்துப்போல தூணுடன் ஒட்டினின்ற தங்கத்தை அழைத்தார்

விதானையாரின் வெறிகொண்ட கண்கள் அவளின் தோற்றத்தை கவ்வின

நிலை தளர்ச்சியில் நின்ருடும் அவரைக்கண்டு, பயம் அவளைப் பற்றியிழுக்க, கூச்சம் உடல் எங்கும்பரவ, உள்ளம் கலங்க, உடல் நடுங்க தள்ளாடித் தள்ளாடி அருகில் வந்து பணத்தை வாங்கிஞள்.

பணம் இருவர் விரல்களுக்கும் இடையில் இருந்தது. “கொம்மாவைப் பிடிச்சுக் குடுக்கட்டே” அசாதாரணச் சிரிப்புடன் அலறலாக வர்த்தைகள் வந்தன.

“ஆத்தே......” கத்திஞள் தங்கம்.

“என்ன உன்ரை சட்டை கேவலமாய்க்கிடக்கு... எல்லாம்......” விதானையாருக்கு உள்ளத்திலும் உடம்பிலும் முகிழ்த்தவெறி செழித்துக் கிளைத்தது.

தங்கத்துக்கு கோபமும் நாணமும் இழைந்து மூண்டது. விதானையார் தங்கத்தின் கைகளை பிடித்தார்.

தங்கத்துக்கு தலை சுற்றியது. கண்கள் இருண்டன. நெஞ்சு பட பட என்று அடித்துக் கொண்டது. உடலெல்லாம் துடி துடித்தது திமிற முயற்சித்துப் பார்த்தாள் ஆஞல்—

“அம்மாவையும் பிடிச்சுக் குடுத்தால் எங்கடை குடும்பம் சீரழிஞ்சுபோம்” மனம் பேசியது.

அடுத்த கணம்—

ஒருவருள் ஒருவராக ஒன்றி......

சில நிமிடங்கள் கழிந்தன.

"உந்த வேசையையே என்ரை பெடியனுக்கு கலியாணம் முடிக்க தயார் பண்ணினனீ... தூ......" வெளியே பேச்சரவம் கேட்டது.

சதைப் பிண்டங்கள் இரண்டும் வேருகின்றன.

பொன்னு பைத்தியக்காரிபோல் கதவைத் திறந்து கொண்டு உள்ளுக்குள் ஓடினுள்.

———

# காலத்தின் குரல்கள்!

செங்கை ஆழியான்

செம்பியன் செல்வன்

க. பரராஜசிங்கம்

சபா. ஜெயராசா

கலா. பரமேஸ்வரன்

க. நவசோதி

குந்தவை

எம். ஏ எம். சுக்ரி

செல்வ. பத்மநாதன்

ஆகிய ஒன்பது பல்கலைக்கழக எழுத்தாளர்களின் சிறுகதைகளைக் கொண்ட நூல்.

தொகுப்பு : கலா. பரமேஸ்வரன்

★ பல்கலை வெளியீடு ★